

கதைக் கடல்

# கதைக் கடல்

## 3



பதிப்பாசிரியர் ;
தி. நா. சுப்பிரமணியன்



சக்தி காரியாலயம்
ராயப்பேட்டை : சென்னை

# பொருளடக்கம்

☆


| | | | |
|---|---|---|---|
| ஒரு மனிதர் | ... | எம். வி. வேங்கடராமன் | 1 |
| நீறுபூத்த நெருப்பு | ... | ஆர். ஆறுமுகம் | 15 |
| நம்பர் 503 | ... | 'சுபி' | 42 |
| பரிசு | ... | ய. லக்ஷ்மிநாராயணன் | 53 |
| நோன்பு | ... | கே. எஸ். ஜம்புநாதன் | 62 |
| அலக்ஷ்யம்? | ... | கி. ரா. கோபாலன் | 74 |
| சின்ன எஜமானர் | ... | பகவதி சரண வர்மா | 83 |
| படிக்காதவள் | ... | மிஹெயில் ஸொஷென்கோ | 102 |




மே: 1946

ரூபாய் - ஒன்று

தபால் செலவுடன் ரூ. 1/4

தொடர்ந்து வெளிவரும் 12 பிரதிகளுக்கு
தபால் செலவுடன் ரூ. 12

Printed by Shakti Press Ltd., Royapettah, P. I. C. No. MS. 22
For Shakti Karyalayam, Royapettah, P. I. C. No. MS. 202

# ஒரு மனிதர்



எம். வி. வேங்கடராம்

**வீ**ட்டு வாசலில் வந்து நின்ற ராமசாமி, என்னைத் தனியாய்க் கூப்பிட்டுக் காதில் 'கிசுகிசு'த்தார்: "என் மனைவி இறந்துவிட்டாள்; இன்று ஐந்தாம் நாள்."

அவருடைய கிசுகிசுப்பில், சாவினால் ஏற்படவேண்டிய வேதனையோ கலக்கமோ இல்லாமல், தினசரி நிகழ்ச்சிகளைச் சொல்லும் சாமானியத் தன்மை இருப்பதைக் கவனித்தேன்.

"பாவம்" என்றேன், சம்பிரதாயமான அநுதாபத்தைக் காட்டுவதற்காக.

"அதெல்லாம் ஒன்றும் இல்லை; என்னைப் பிடித்திருந்த சனி என்னைவிட்டு ஐந்துநாள் ஆகிறது."

பிரபல தமிழ் எழுத்தாளர்களில் ஒருவர் ராமசாமி. அவருடைய கதைகளும் கட்டுரைகளும் பாவபூர்ணம் பெற்றவை என விமரிசகர்களும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அவருடைய எழுத்துக்களைப் போலவே அவரும் உணர்ச்சிகளின் அரங்கம். சின்னஞ்சிறு விஷயத்திற்காக எழுச்சி அடைவதும், பிறகு தணிவதும் அவருடைய சுபாவம். தமக்கோ அல்லது பிறருக்கோ சிறு துன்பம் நேர்ந்தாலும் துடித்துப்போவார். மென்மையான நெஞ்சுடைய அவர் தம் மனைவியின் மரணத்தைப் பற்றி உணர்ச்சியற்றுப் பேசுவது எனக்கு ஆச்சரியம் அளித்தது.

அவருடைய குடும்ப வாழ்க்கைபற்றி எனக்கு அதிகமாய் ஒன்றும் தெரியாது. அதைக் கேட்பதால் அவருக்குத் தாபம் உண்டாகலாம் என்று நானும் வற்புறுத்திக் கேட்டதில்லை, எவ்வளவோ நெருங்கிப் பழகியும். அவருக்குக் கல்யாணம் ஆகிவிட்டது. ஆனால் பிறந்தகத்தில்

தான் மனைவி இருந்தாள். அவள் வியாதிக்காரி; படுக்கையில் கிடந்தாளாம்.

மனைவி வியாதிக்காரியாக இருந்திருக்கலாம். அவளால் அவருக்கு எவ்வளவோ துன்பங்கள் நேரிட்டிருக்கக் கூடும். எனினும் கொஞ்ச காலமாவது அவர் அவளுடன் சந்தோஷமாய் இருந்திருக்க மாட்டாரா? அந்த ஞாபகம் எந்தக் கணவனையும் கட்டுப்படுத்த வேண்டுமே; உண்மையான புருஷனாக இருந்தால் கட்டுப்பட்டே ஆகவேண்டும். ஆனால் அவர் அதைப்பற்றி நினைப்பவராகத் தோன்றவில்லை. இறந்துபோன ஒரு ஜீவனிடம் யாருக்கும் உண்டாகக்கூடிய அநுதாபங் கூட அவருக்கு அவளிடம் இல்லை.

இருவரும் சேர்ந்து வெளியில் புறப்பட்டோம். அந்தச் சாவைக் குறித்து நான் அவரிடம் ஒன்றும் கேட்கவில்லை. ஆனால் பேச்சு எந்த எந்தச் சந்து பொந்துகளில் எல்லாமோ அலைந்துவிட்டு அதன் பக்கமே திரும்பியது. காரணம்—மரணம் ஒரு ராஜவீதி.

என்னால் கேட்காமல் இருக்க முடியவில்லை. கேட்டுவிட்டேன்: "ஓய், உமக்கு மனைவியின் சாவினால் கொஞ்சங் கூட வருத்தம் இல்லையா அல்லது மனத்துக்குள்ளேயே அதை மூடிவிட்டீரா?"

அவர் சிரித்தார்: "மனசிலும் சரி, வெளியிலும் சரி, எனக்கு வருத்தமே கிடையாது. தெளிவான சந்தோஷம் கூட உண்டாகிறது. என் பீடை தொலைந்தது என்றுதான் நினைக்கிறேன். இனிமேல்தான் என் வாழ்க்கையில் ஏதாவது சுகம் கிடைக்கும்."

"என்னால் நம்ப முடியவில்லை. புருஷனும் மனைவியுமாய் வாழ்ந்த யாரும் இப்படிப் பேசி நான் கேட்டதில்லை. அதிலும் நீர் பேசுவது என்றால்? நீரும் அவளும் அந்தக் காலத்தில் சுகமாய் இருந்ததில்லையா? அந்த ஞாபகம் உமக்கு வருத்தம் உண்டாக்க வேண்டுமே?"

மறுபடியும் அவர் சிரித்துக்கொண்டே சொன்னார்: "சந்தோஷமாய் இருந்த காலமா? இருந்தால்தானே அதன் ஞாபகம் வரும்?...வேதனை உயிருடன் இருந்த

வரை, அதைப்பற்றிப் பேசுவதற்கே பயமாகவும்-வெட்க மாகவுங்கூட - இருந்தது; வேதனை இறந்தபின் அதைக் குறித்து வெட்கப் படவேண்டியதில்லை. முழுக் கதையை யும் சொல்லுகிறேன்; 'அமானுஷ்ய' மாகக்கூட தோன்ற லாம்; ஆனல், வெங்கட்ராம், கதை ரசமாக இருக்கும். அவளும் நானும் தம்பதிகள் என்ற உறவில் வாழ்ந்த காலம் சொற்பம்; அந்தச் சொற்ப காலத்திலும் நான் அவ ளுடைய புருஷனய் இருக்கிறேனே என்ற திகில்தான் என்னைப் பற்றிக் கொண்டிருந்தது!''

"ஏன், உமக்கு அவளைப் பிடிக்க வில்லையா?''

வைதிக கலாசாரத்தில் பிறந்து வளர்ந்த அவர், பெற் ரேரின் நிர்ப்பந்தத்தால், தமக்கு விருப்பம் இல்லாத ஒரு பெண்ணை மணக்க நேர்ந்திருக்கலாம் அல்லவா?

"எனக்குப் பிடிக்கிறது, பிடிக்கவில்லை என்கிற கேள் விக்கே இடம் இல்லை...நான் விவரமாகச் சொல்லுகிறேன், கேளுங்களேன்'' என்று ஆரம்பித்தார். ஆரம்பித்து விட்டால், இடைவிடாமலும், கேட்பவரைப் பேசவிடா மலும், மேலும் மேலும் பேசிக்கொண்டே இருப்பது அவர் வழக்கம்.

* * *

நான் சாதாரணமான குடும்பத்தில் பிறந்தவன் என்பது உங்களுக்குத் தெரியும். சிறுவயசிலேயே குடும் பப் பொறுப்புப் பூராவையும் என்மேல் சுமத்திவிட்டு என் தகப்பனர் காலமானர். அந்தச் சமயத்தில் எனக்கு எழுத்து வாசனையே கிடையாது. அப்போதுதான் ஜீவ னத்துக்கு ஓர் உபாயம் வேண்டுமே என்ற பொறுப் பினல் ஞானம் சம்பாதிக்க வேண்டும் என்னும் வேட்கை உண்டாயிற்று. சம்பளத் தொல்லை இல்லாத ஸம்ஸ்கிருத பாடசாலை ஒன்றில் சேர்ந்து படிக்க ஆரம்பித்தேன். ஊக்கம் இருந்ததால், மிகவும் சுலபமாக அந்தப் பாஷையில் இலக்கிய ரசனையும் பாண்டித்தியமும் பெற்றேன். இந்தக் குருகுல வாசத்தின்போது எனக்கு இருந்த குடும்பத் தொல்லைகளும் விசாரங்களும் அநந்தம். ஆனல் படிப் பைக் கைவிடவில்லை; அதைக்கொண்டுதானே என் எதிர் கால வாழ்க்கையை நிர்ணயித்துக் கொள்ளவேண்டும்?

இந்தச் சமயத்தில் என் கல்யாணப் பேச்சு எழுந்தது. நாங்கள் கல்யாணத்தை விரும்பவே இல்லை. ஆனால் பெண்ணைப் பெற்றவர்களுக்குக் கவலை இருக்கிறதே! அவர்களுக்குத்தான் என் கல்யாணம் பற்றி வெகு கவலை உண்டாகிவிட்டது. நானும் என் தாயாரும் பல பெண்களைத் தட்டிக் கழித்தோம். குடும்பத்தின் வயிறுகளையே அடைக்க முடியாதபோது இன்னொரு வயிற்றை அதிகம் ஆக்கிக்கொள்ள நாங்கள் துணியவில்லை.

கடைசியில் அவளுடைய தகப்பனார் என்னைக் கண்டுபிடித்தார். அறுபது ஆயிரங்களுக்கு மேல் ரொக்கமும், நில புலங்களும் உடைய பெரிய ஐவேஜுக் காரர் அவர்; ஒரே பெண்ணைத் தவிர வேறு வாரிசும் இல்லை. கல்யாணத்துக்காக ரொக்கம் மூவாயிரமும், ஆயிரத்துக்கு நகைகளும் தருவதாகச் சொன்னார். பெண்ணைவிடப் பண விஷயம் வசீகரமா யிருந்தது. என் குடும்பத்தில் எல்லோருக்குமே திருப்தி ; எனக்கும் தான் ; எதிர் காலம் எப்படியோ என்று பயந்துகொண்டிருந்த நான், இந்தக் கல்யாணத்தின் மூலம் வாழ்க்கை சுகப்படும் என்று நினைத்தேன். கூடவே ஒரு பயமும் தோன்றியது. அவ்வளவு பெரிய பணக்காரர், அவ்வளவு வரதட்சிணை கொடுக்கத் தயாரா யிருப்பவர், இவ்வளவு சின்ன ஏழைக்குப் பெண் தருவதற்காக, இவ்வளவு முயற்சி ஏன் செய்யவேண்டும்? அதில் ஏதாவது மர்மம் இருக்குமோ என்று எண்ணி, பெண்ணைப் பார்த்த பிறகு என் முடிவைச் சொல்லுவதாய் அம்மாவிடம் தெரிவித்தேன்.

பெண்ணைப் பார்க்கச் சென்றபோதும், என்னுடைய வைதிக புத்தி என்னை ஏமாற்றிவிட்டது. அங்கே நடந்த உபசாரத்தில் மயங்கிப் போனேன். நாலைந்து பெண்களுக்கு மத்தியில் பெரிய ஜரிகைப் புடைவை உடுத்துக்கொண்டு உட்கார்ந்து இருந்தவள் தான் 'மணப்பெண்' என்று என்னிடம் காட்டினார்கள். நான் சரியாகக்கூடப் பார்க்கவில்லை. அழகாக இருக்கிறாளா, இல்லையா என்பதைப்பற்றி ஆரம்பத்தில் இருந்தே எனக்கு அக்கறை கிடையாது. 'மாமனாரின்' உபசாரமும், ஜரிகைப் புடைவையும், வைதிகத்தின் கட்டுப்பாடும்

அவளிடம் பேசவிடாமல் என் வாயைப் பலமாகப் பொத்தி விட்டன. பெண்ணை மணப்பதற்கு என் சம்மதத்தைத் தெரிவித்துவிட்டுத் திரும்பினேன். மணப் பெண்ணுக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்த வேருெரு பெண்ணைப் பயப்படும் கடைக்கண்ணுல் பார்த்துவிட்டு, அவள்தான் என் மனைவி ஆகப்போகிருள் என்று எண்ணியிருந்தேன்!

கல்யாணம் திருப்பதிக் கோயிலில் நடந்தது. அமர்க்களமான வற்பாடுகள். அன்று காலையில் பெண்ணுக்குச் சேலை உடுத்துவிட்டு என் தமக்கையும் வேறு சில உறவு ஸ்திரீகளும் கிலேசத்துடன் திரும்பினர்கள். "போயும் போயும், பணத்துக்கு ஆசைப்பட்டு இந்தப் பெண்ணையா முடிவு செய்தீர்கள்? அவளைப் பார்த்தால் பெண்ணுகவே தோன்றவில்லை; ஏதோ பூத பிரேதம்போல இருக்கிருள்' என்ருள் என் தமக்கை. அதைக் கேட்டதும் நான் திடுக்கிட்டேன். கல்யாணம் என்று நம்பி ஒரு பெரும் அபாயத்துக்கு ஆளாகிருேம் என்னும் உணர்ச்சி என்னைக் கடித்தது. மணத்துக்காக வந்திருந்த என் உறவினர்களிடையில் ஒரே கலவரம்; தீராத நோய் உள்ள ஒரு பெண்ணை என் கழுத்தில் கட்ட, அவள் தகப்பனர் முயற்சிக்கிருர் என்றுதான். நான் வாய் அடைத்து நின்றேன்.

இவ்விஷயத்தைக் கேள்விப்பட்டு என் 'மாமனர்' ஓடிவந்தரர். என் சிற்றப்பா அவர்மீது சீறினர். "பணத்தைக் காட்டி எங்களை ஏமாற்றவா இவ்வளவு சூழ்ச்சி செய்கிறீர்? கரும வியாதி உள்ள பெண்ணுக்கு எங்கள் பையன்தான உமக்கு மாப்பிள்ளையாகக் கிடைத்தான்? சொல்லும், அந்தப் பெண்ணுக்கு என்ன வியாதி? தெய்வ சந்நிதியில் கேட்கிறேன்; அவளுடைய வியாதி குணம் ஆகக் கூடியதா? இல்லாவிட்டால் இந்தக் கல்யாணம் நிற்கவேண்டியதுதான்......"

குன்றிக் குன்றிச் செத்துக்கொண்டிருந்த நான், என் 'மாமனர்' உண்மை பேசுவார் என்று எதிர்பார்த்தேன். அவர் சொன்னர்: "தெய்வ சந்நிதியில் சொல்லுகிறேன்; என்னை நம்புங்கள். பெண்ணுக்குத் தீராத வியாதி ஒன்றுமே இல்லை. தாய் வளர்ப்பு இல்லாததால் சரியான வளர்ச்சி இல்லை. சீக்கிரம் குணமாகி

விடும். இந்த அற்பக் காரணத்துக்காகக் கல்யாணத்தை நிறுத்த வேண்டாம். தெய்வ சாட்சியாய் நடக்கிறது; சுபமாகவே முடியும்.'' இந்தக் களேபரத்தில் முகூர்த்தம் நெருங்கி விட்டது. மாமனார் பறந்தார்; நிறைவில்லாத மனத்துடன் சம்மதித்தோம். நெருக்கடியின் வேகத்தில், தெய்வ சந்நிதியில், 'இன்பத்திலும் துன்பத்திலும் நீ என் துணைவி' என்று மந்திரம் கோஷிக்க நான் தாலியும் கட்டிவிட்டேன். அப்போதும் அவளை அரை குறை யாகப் பார்த்தேன்; அந்த அரை குறைப் பார்வைகூட அவளுடைய வியாதித் தோற்றத்தையும் ஒளியில்லாத அசட்டு விழிப்பையும் எனக்கு உணர்த்தியது.

கல்யாணம் முடிந்தவுடன் 'ஒப்புக்காக'ச் சம்பந்தி களிடம் சொல்லிக் கொண்டு ஊருக்குக் கிளம்பினோம். என்னுடைய - ஆகையால் என் குடும்பத்தினுடைய - எதிர் காலம் சுகமடையும் என்று நம்பி ஆரம்பித்த மணத்தை, எதிர் காலத்தை இன்னும் சிக்கல் ஆக்குவதாக முடித்துக் கொண்டு திரும்பினோம். சுகம் அல்ல, சோகம் கொடுத்தது கல்யாணம். எங்களுடைய மனம் ஏகமாய் என் மாமனாரைச் சபித்தது.''

* * *

''அப்படி அவளுக்கு என்ன வியாதி?'' என்று கேட்டுவிட்டேன். அவர் உடனே ஆரம்பித்துவிட்டார்.

''என்ன வியாதியா? வியாதிகளின் வாச ஸ்தலம்.'' இதைக் கூறிவிட்டு கொஞ்சம் நிறுத்தினார். மூச்சுவிட இடைவெளி வேண்டி வந்ததுபோலும்.

* * *

வறுமை எனக்குப் பழக்கமான விஷயம். ஆனால் இந்த அவமானம் என்னைப் பிளந்து கொண்டிருந்தது. மனைவியுடன் நான் எவ்விதத் தொடர்பும் வைத்துக்கொள் ளக்கூடாது என்று என் தாயார் உறுதியாக இருந்தாள்; அந்த நோய்கள் என்னையும் பற்றாமல் இருக்க வேண்டுமே என்ற பயம் அவளுக்கு. எனக்கோ அவமானத்துடன், 'ஒரு பெண்ணின் வாழ்வைக் குலைத்து விடுகிறேமோ?' என்ற பயமுங்கூட.

ஊர் வாயும் அகன்று கொண்டிருந்தது. நல்ல பணக்கார வீட்டுப் பெண்ணை ஓர் ஏழைப் பயல் திமிரால் ஏற்க மறுக்கிறான் என்று என் காதுக்கும் எட்டும்படி பேச்சு படம் தூக்கியது; மனைவி வியாதிக்காரியானால் குணமாகாமல் போய்விடுமா, அதற்காக அவளைத் தள்ளி வைப்பதா? இதுதான் வதந்தியின் கட்சி. சமூகத்தில் எங்கள் நிலைமை நாளுக்கு நாள் கேவலமாகிக் கொண்டு இருந்தது. வெளியில் நாலு பேருடன் சௌஜன்யமாய்ப் பழகக் கூட எங்களுக்குச் சங்கோசமாக இருந்தது. இவ்வளவு பக்க பலங்களோடு என் மாமனார் வேறு, தம் பெண்ணை அழைத்துக் கொள்ளும்படி அடிக்கடி தொந்தரவு செய்துகொண்டும் இருந்தார். என் நிலைமை என்ன? நான் தொட்டால் சிணுங்கி; இல்லையா? ஊசி முனையில் நிற்பதுபோல் தவிக்கத்தான் தெரிந்தது.

இன்னொரு விஷயம் சொல்ல மறந்து விட்டேனே. என் மாமனாருக்கு இரண்டு கல்யாணம். முதல் மனைவியின் பெண்தான் என் மனைவி. இரண்டாவது மனைவிக்கு ஒரு குழந்தை பிறந்து செத்து விட்டது. அவளுக்கு வேறு குழந்தை இல்லை என்றாலும் சிறு வயசுதான். ஒரு முறை என் மாமனாருக்குப் பலமான ஜுரம் கண்டு அவர் படுத்த படுக்கை ஆகிவிட்டார். அவருடைய நோய்க்கு, தம் பெண் வாழவில்லை என்பதும் ஒரு காரணம். படுக்கையில் இருக்கும்போது எனக்கு அவர் சொல்லி அனுப்பினார். அப்போது அவரும் நானும் பட்டணத்திலேயே இருந்தோம். எனக்கு ஒரு பள்ளிக்கூடத்தில் வாத்தியார் வேலை. தனியாகவே இருந்தேன். மாமனாரின் அழைப்பை ஏற்பதா இல்லையா எனத் தயங்கிக் கொண்டிருந்தேன். ஆனால் அவர் மரணப் படுக்கையில் கிடப்பதாகக் கேள்விப்பட்டு, அனுதாபம் கொண்டு அவரைப் பார்க்கச் சென்றேன்.

உண்மையாகவே அவர் நிலைமை மோசமாக இருந்தது; மிகவும் சிரமத்துடன்தான் பேசினார். "ராமு, நான் பிழைப்பேன் என்ற நம்பிக்கை இல்லை....நீதான் எனக்கு அபர கிருத்தியங்கள் செய்ய வேண்டும்" என்றார்.

"எந்த முறையில் நான் அதைச் செய்வது? உங்களுக்கும் எனக்கும் உள்ள உறவு உங்கள் பெண் மூலம் ஏற்பட்டது; ஆனால் அவளுக்கும் எனக்கும் எவ்வித ஸம்பந்தமும் இல்லை. இந் நிலையில் நான் என்ன செய்வது?"

"ராமு, நீ சொல்லுவதைப் பார்த்தால் அவளை எப்போதுமே ஏற்பதில்லை என்று முடிவு செய்துவிட்டாய் போல இருக்கிறதே?"

இதைக் கேட்டதும் என் சோகம் கோபமாக மாறிச் சீறி எழுந்தது; அவர் நோயாளி என்பதையும், மரியாதையையும் மறந்து, "என் வாழ்க்கையைக் குட்டிச் சுவராய் அடித்ததால் உமக்கு என்ன, ஓய், லாபம்? நான் ஏழை என்றால் மானத்துடனுவது வாழக்கூடாதா? உமக்குக் குழந்தை வேண்டும் என்று இரண்டாம் தாரம் கட்டினீரே, என் நிலைமையை ஏன் ஐயா நீர் யோசிக்க வில்லை? நான் ஒரு சுகமும் பார்க்கவில்லையே? பிணத்துடன் வாழ யாரால் முடியும்?" என்று படபடப்புடன் கேட்டுவிட்டேன்.

இதைக் கேட்டவுடன் இடியுண்டவர் போல அவர் கலங்கிவிட்டார். அவருடைய கலக்கத்தைக் கண்ணீர் காட்டியது. தடுமாறும் மூச்சுடன் பேசினார். "நீ கஷ்டப்பட வேண்டும் என்ற எண்ணம் எனக்குக் கிடையாது. என் பெண்ணும் நீயும் சந்தோஷமாக இருக்கவேணும் என்றுதான் ஆசைப் பட்டேன்..." மேலே அவருக்கு வார்த்தை ஓடவில்லை.

நோயாளியின் குரல் மனசை அசைத்து விடுகிறது; கொஞ்சம் தணிந்தேன். "நான் உங்களுக்கு அபர கிருத்தியம் செய்ய வேண்டும் என்று ஆசைப் படுகிறீர்கள்; செய்கிறேன்; மாப்பிள்ளை என்னும் உறவில் அல்ல; யாரோ மூன்றுவது மனுஷ்யன் போலத்தான்."

"ஆனால், எனக்குப் பிறகு என் பெண்ணின் கதி? அவள் மூலமாகத்தான் என் வம்சம் நிலை பெற வேண்டும். என்னுடைய சொத்துக்களுக்கு வேறு வாரிசும் இல்லை. ராமு; உனக்குத் தனி வீடு தருகிறேன். நில புலங்கள் தருகிறேன்; என் பெண்ணுக்கு ஒரு குழந்தை பெற்றுத் தரமாட்டாயா?"

மார்பை முட்டும் மூச்சு இரைக்க, கண்ணீர் பெருகும் ஹீனஸ்வரத்தில் நோயாளி பேசினதைக் கேட்டதும், என் மனத்தில் ஒரு விபரீதமான எண்ணம் உண்டாகியது. "உங்களுடைய வீட்டையும் நிலபுலங்களையும் கொண்டு போய் உடைப்பில் போடுங்கள். எனக்கு ஒன்றும் தேவையில்லை. உங்களுடைய பெண் வாழவேண்டும்; அவ்வளவுதானே? சரி, தொலையட்டும். அப்படியே செய்கிறேன். ஆனால் அவளுக்கு ஒரு குழந்தை பிறந்ததும் நான் என் போக்கில் சென்று விடுவேன்."

"அவள் குணமாகி விட்டால்?"

"குணமானால் பார்க்கலாம்."

"அப்படியானால், நீ இருக்கும் அறையை ஒழித்துவிட்டு இங்கேயே வந்து விடு. இங்கு இருந்தபடியே உன் வேலையைக் கவனிக்கலாம்."

என்னுடைய பைத்தியக்காரத்தனமான முடிவுக்காக அவரிடம் உறுதி கொடுத்துவிட்டுத் திரும்பினேன். அந்த உறுதியைக் காப்பது எவ்வளவு பயங்கரமான விஷயம் என்பதை உணர எனக்கு நெடுநேரம் ஆகவில்லை. நான் இருந்த அறையை ஒழித்துவிட்டு, மாமனார் வீட்டில் வாசம் செய்ய ஆரம்பித்தவுடன் அது புரிந்துவிட்டது. புதிதாய் மணமான தம்பதிகள் தனிக் குடித்தனம் ஆரம்பித்துவிட்டோம்; எவ்வளவு மனோகரமாயிருந்தது!

வேண்டாம் என்று நினைத்த மனைவியின் பக்கத்திலேயே வந்துவிட்டேன். அவளைப் பற்றி என் தமக்கையும் தாயும் என்னிடம் முழு உண்மையைச் சொல்லவில்லை. அவ்வளவு ஆபாசமாயிருந்தாள். பிரம்புக் கூடை போன்ற மார்பு; உலர்ந்து போன வேப்ப மரத்தைப்போல் கை கால்களில் வெடிப்புகள்; காது கொஞ்சம் செவிடு; முகத்தின் கோரத்தைச் சொல்லி முடியாது. இவ்வளவும் போதாது என்று வாயிலிருந்து சகிக்க முடியாத துர்நாற்றம். உணர்ச்சியே இல்லாத மரக் கட்டை— இவ்வளவு லட்சணம் உள்ள மனைவியைப் பெற்ற நான் அதிர்ஷ்டசாலிதானே! அவள் மீது வெறுப்பு உண்டாகியது, முதன் முறை பார்த்ததுமே...

வெறுப்பு என்று சொன்னேன்? இல்லை. அருவருப்பு. ஆனால் தொட்டுத் தாலி கட்டிய பாபத்துக்காக அவளுடைய தகப்பனாரிடம் செய்த பிரதிக்ஞையைப் பூர்த்தி செய்து விடுவதென்று தீர்மானமாக இருந்தேன். தியாக புத்தி என்று பாராட்டாதீர்கள்; ராட்சச உறுதி. அனாதை பிணத்துக்குக் கிருத்தியம் செய்வதுபோல்தான் அவளுடன் குடும்பம் நடத்தினேன்......நாங்கள் எப்படியோ குடும்பமாய் இருப்பதைக் கண்டு மாமனாரும் தேறிவிட்டார்.

சம்ஸ்கிருதத்தில் எனக்குப் பாண்டித்தியம் இருக்கிறது. காளிதாசன், பவபூதி முதலிய மகா கவிகளின் காவியங்களை அனுபவித்து ரசிக்க என்னால் முடியும். அதிலும் சிருங்கார ரசம் நிறைந்த கவிதைகளை விளக்குவதில் எனக்கு ஈடில்லை என்று பாடசாலையின் ஆசிரியர்களும் மாணவர்களும் கூறுவார்கள். ஆனால் என் வாழ்க்கையில் சிருங்காரம் அல்ல, பீபத்ச ரசமே பிரதான ஸ்தானம் பெற்றுவிட்டது. கலியாணத்துக்கு முன் நான் கண்ட கனவுகள் வேறு. நான் ஏழையாக இருக்கும் காரணத்தாலே எனக்கு வாழ்க்கையில் ரச பேதம் உண்டாக வேண்டும் என்கிற அவசியம் இல்லை அல்லவா? நான் அழகான மனைவி வேண்டும் என்று கூட ஆசைப்படவில்லை; உடல் அழகைவிட உள்ளத்தின் அழகுதான் சிருங்காரத்துக்கு மிகவும் அவசியம்; என்றாலும் உடலின் முக்கியத்தையும் மறந்துவிட முடியாது அல்லவா? என் குடும்ப வாழ்க்கையில் ருசி பங்கம் இல்லாத ரச நிறைவு வேண்டும் என்றுதான் ஆசைப் பட்டேன். பொருள் வலிமை இல்லாவிட்டாலும், இந்தப் பெரிய உலகிலும் ஆகாயத்திலும் சிருங்கார ரசத்திற்குத் தேவையான உபகரணங்கள் எவ்வளவோ இருக்கின்றன; இல்லையா? அவைகளின் உதவியைக் கொண்டே, உடலின் நாதத்தையும், உயிரின் பிரதி பிம்பத்தையும் காணலாம் என்ற ஆசை எனக்கு இருந்தது. இந்த ஆசை தவறு எனவும் நான் நினைக்கவில்லை. உடலைக் கொடுத்து, அதற்குள் ஓர் உயிரையும் வைத்து, மனிதனை உலகுக்கு அனுப்பிய கடவுள், அவன் உடலை ஒடுக்கி உயிரைச் சுருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பாரா? எதிர்பார்க்கிறார் எனக் கூறும் வேதாந்

தத்தில் எனக்கு நம்பிக்கை இல்லை. பணத்தின் உதவி இல்லாமல் தாம்பத்திய இன்பம் பெற முடியும் என்னும் நம்பிக்கை எனக்குப் பலமாக இருந்தது. ஆனால்—

நான் உடலின் நாதத்தை கேட்கவில்லை; உயிரின் பிரதிபிம்பத்தையும் காணவில்லை. சவத்தின் நிசப்தத்தைத் தான் அனுபவித்தேன். என் மனைவி பெண் உருவில் இருந்தது வாஸ்தவம். ஆனால் அவளைப் பெண் ஜன்மமாய்க் கொள்ள முடியாது. மிருகங்கள் சிருங்கார ரசத்தை ரசித்துச் சுவைக்கின்றன; மரம் முதலிய ஜடப் பொருள்கள் உபயோகமானவை. ஆனால் என் மனைவி ஒரு விசித்திரமான, - இல்லை, விபரீதமான-பிறவி.

இருந்தாலும் தற்கொலைக்குப் பயந்து அவளுடன் வாழ்ந்தேன். சில மாசங்களுக்குப் பின் அவள் கருத்தரித்ததை அறிந்தபோது என்னால் நம்ப முடியவில்லை. உண்மை என்று கண்டபோது பெரும் ஆறுதல் உண்டாகியது; கதை முடிகிறது என்றுதான்!

ஆனால் குழந்தை பிறந்தும், கதை முடியவில்லை. குழந்தையும் தாயைப் போலவே 'வேடிக்கையாக' இருந்தது. வயிறும் முதுகும் ஒன்றாக இருந்தன; போலி வயிறும் போலி மூச்சும் கொடுத்து அதற்கு உயிர் கொடுக்க டாக்டர்கள் முயன்றார்கள். ஒன்றும் பலிக்கவில்லை. ஆறு மாசங்களில் ஆயிரம் ரூபாய் செலவுடன் அது விடைபெற்றுக் கொண்டது.

மறுபடியும் பழைய வாழ்க்கையை ஆரம்பிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுமோ என்ற பயம் என்னை வளைத்துக்கொண்டது. என் மாமனாரிடமே முறையிட்டேன், "தயவு செய்து இத்துடன் என்னை விட்டுவிடுங்கள்; இனியும் என்னால் சகிக்கமுடியாது" என்று

"அதனால் உனக்கு என்ன சிரமம்? மருந்து, குடும்பச் செலவு எல்லாம் நான்தானே செய்கிறேன்?" என்றார் அவர்; செலவு என்மேல் விழும் என்று நான் பயப்படுவதாக அவர் எண்ணினார் போலும்.

"நீங்கள்தான் செலவு செய்கிறீர்கள். கல்யாணம் முதல் இன்றுவரை உங்களுக்கு உண்டான செலவுத் தொகையை நான் எப்பாடு பட்டாவது ஈடு செய்கிறேன். பெண்ணை அழைத்துச் செல்லுங்கள்."

அதற்கு அவர் சொன்ன பதில், ஒரு புதிய தத்துவ மாகவே இருந்தது. "நீ சொல்லுவது வேடிக்கையாக யிருக்கிறது. பசியாக இருந்தால் சாப்பிடுகிறோம். உடம்பின் தேவை அது. அதைப் போலவே உயிர் என்றால் வியாதியும் கூடவே இருக்கத்தான் செய்யும். வியாதிக்கு மருந்து கொடுத்தால் போகிறது. வியாதிக்காக அவளை வேண்டாம் என்று விடுவதா?"

மகள்மீது இருந்த மகா மோகத்தில் அவருக்கு உதய மான இந்தத் தத்துவ உபதேசம் எனக்கு நிம்மதி தரவில்லை. அப்போது நான் மனைவியுடன் தனியாக இருந்தேன். மாமனார் வீட்டில் இல்லை. அவர் பணம் கொடுத்து, மருந்து கொடுத்து, தாம்பத்தியத்துக்கு உதவி புரியத் தயாராக இருந்தாரே யல்லாமல், பெண்ணை அழைத்துச் செல்ல உடன்படவில்லை; ஆனால் தெய்வம் என் உதவிக்கு வந்தது. குழந்தை இறந்தபின் அவள் படுத்த படுக்கையாக விழுந்துவிட்டாள். வேலைத் தொந்தரவால் நான் அவளைச் சரியாகக் கவனிக்க முடியவில்லை. குணப்படுத்தி அவளைக் கொண்டு வந்துவிடுவதாகச் சொல்லி அவளுடைய தகப் பனார் அழைத்துப் போனார்.

* * *

"அப்புறம் குணம் ஆகவில்லையா?" என்று கேட்டேன்.

"எப்படி ஆகும்? உடம்பில் ரத்தம் என்பது இருந் தால்தானே? அதற்குப் பதிலாக ஏதோ நீர்தான் இருந் தது. முற்றிவிட்ட எலும்புருக்கிக் காசம்; கூடப்பிறந்த வியாதிகள் வேறு. டாக்டர்கள் பணத்துக்காக மருந்து கொடுத்தார்களே தவிர வியாதிக்காகத் தரவில்லை. மாம னார் மட்டும் நம்பிக்கை இழக்கவில்லை. டாக்டர் மாற்றி டாக்டராகக் காண்பித்து வந்தார்."

"அவள் பிறந்தகம் போன பிறகாவது இரண்டாம் கலியாணம் செய்து கொண்டிருந்தால் என்ன?"

"அதுவும் முடியவில்லை. அதற்காகப் பல முறை பெருமுயற்சி செய்தோம். முதல் மனைவி உயிருடன் இருக்க மறு மணத்துக்குப் பெண் தர,—அதுவும் ஓர் ஏழைக்கு - யாரும் யோசிக்கத்தானே செய்வார்கள்? துணிந்து யாராவது முன்வந்தால் என் மாமனர் கலைப்பார். வியாதிக்காரி என்பதற்காக நான் அநியாயமாய் அவர் மகளைத் தள்ளி வைத்திருக்கிறேன் என்று பெண்கொடுக்க வருபவர்களிடம் சொல்லுவார். அதைத் தவிர என் பண நிலைமையும் வேறு குறுக்கிட்டது. ஆத்திரப்பட்டு முன் போல் பணத்துக்கு ஆசைப்பட்டு, ஆபத்தில் மறுபடியும் சிக்கிக்கொள்ள எனக்கும் இஷ்டம் இல்லை."

"அவளுக்கு உணர்ச்சி இல்லை என்றீரே, அது எப்படி? பைத்தியம் போலவா? நீர் என்ன சொன்னலும் பேசாமல் இருப்பாளா?"

"அதெல்லாம் இல்லை. அவளுக்கு என்மீது அத்யந்தப் பிரியம் இருந்தது உண்மை. என் காலில் சிறுகாயம் பட்டாலும் அழுதுவிடுவாள். சாவதற்கு முன்னல்கூட என் படத்தைக் கேட்டு கண்களில் ஒற்றிக்கொண்டாளாம்!"

"அட!"

"அலுத்துப்போய், கல்யாணம் செய்துகொள்ள வேண்டும் என்றல், 'நான் இருக்கும்போது இன்னெரு பெண்ணைக் கட்டவேண்டுமா?' என்று சண்டைக்கு வருவாள்! அவள் பேசுவதே ஒரு கண்ணராவி!...அவள் ஒரு விபரீதமான பிறவி என்றுதான் சொல்ல முடியும், சுருக்கமாய்."

"சரிதான், உலகத்துக்குத் தேவை இல்லாத ஜீவன்; அதனல் உமக்கும் கஷ்டம்; பிறந்த இடத்துக்கும் கஷ்டம். அவள் செத்ததால் எல்லோருக்குமே ஆறுதல்தான்...... இந்த மகா சோகத்தை வெளியிடாமல் இருக்க உம்மால் எப்படி முடிந்தது? ஒரு பெரிய நாவலே எழுதலாமே, ஓய்?"

"என்னல் முடியவில்லை; நீங்கள்தான் எழுதுங்களேன்!..."

"பார்க்கலாம்; நாவலாக இல்லாவிட்டாலும், கதையாகவாவது முயற்சிக்கலாம். அது போகட்டும்; எவ்வளவு காலமாக இந்தத் துன்பம் உமக்கு? கல்யாணம் ஆகி எத்தனை வருஷங்கள் ஆகின்றன?"

"எட்டு வருஷங்கள்..."

"எட்டு வருஷங்களா!" என்றேன் திடுக்கிட்டு.

"ஆம், எட்டு வருஷங்கள்."

"இவ்வளவு காலமாகவா பொறுத்தீர்? ஓய், ஓய், உண்மையாகவே நீர் ஒரு மனிதர்!" என்றேன், ஏக்கத்தால் எலும்பான அவருடைய முதுகைத் தட்டிக்கொண்டே.

*

# நீறுபூத்த நெருப்பு

ஆர். ஆறுமுகம்

"வேலாண்டி!........டேய், வேலாண்டி!!"

"சாமி, கூப்பிட்டிங்களா?......... நான் இப்பத் தானுங்க மாட்டுக்குத் தண்ணி காமிச்சிட்டு வண்டி கிட்டே கொண்டாந்து கட்டினேனுங்க."

"உனக்கு எது அவசரம், எது அவசரமில்லேங்கிறது தெரியிறதே இல்லேடா. இப்ப மாட்டுக்குத் தண்ணி காட்டுறதுதானா முக்கியம்? மொதல்லே ஆளுகளையெல் லாம் வலையை எடுத்துக்கிட்டுப் போகச் சொல்லிட்டு வாடான்னேனே, அதைச் செஞ்சியா?"

"அதை எப்பவே சொல்லிப்பிட்டு வந்திட்டேனுங் களே! இன்னேரம் அவுங்கள்ளாம் பாதி வழி போயிருப் பாங்களே."

"வலைக்காரங்க மாத்திரம்தான் போயிருக்காங்களா? பரிக்காரப் பொம்பளைக யாரும் போகலியா?"

"பத்து வலைக்காரங்க, இருவது பரிக்காரப் பொம்ப ளைங்க எல்லாந்தானுங்க போயிருக்காங்க. அவுங்களை யெல்லாம் அனுப்பிச்சுட்டுத்தான் நான் இங்கே வந்தே னுங்க, சாமி."

"ஓஹோ, அப்ப சரிதான். நீ சாப்பிட்டியா?"

"பழய கஞ்சி குடிச்சிட்டே னுங்க."

"மத்தியானத்துக்கு ஏதும் கையிலே எடுத்துக் கிட்டியா?"

"எடுத்துக்கிட்டேங்க."

"கெட்டிக்காரப் பயடா நீ! எல்லாத்தையும் ஏற்பாடு பண்ணிட்டுத்தான் வந்திருக்கியா? ஒன்னே இன்னும் காணோமேன்னு நான் திட்டிக்கிட்டே இருந்தேன். அப்ப பெறப்பிடலாமா?"

"பெறப்பிடலாங்க. வண்டியைக் கட்டட்டுங்களா?"

"வண்டிக்குள்ளே வைக்கல் தாராளமா எடுத்துப் போட்டுக்க. நேத்துமாதிரி மாடுக திண்டாடிப் போகாமே இருக்கட்டும்."

"அது எல்லாம் போட்டாச்சுங்க."

"சரி, கட்டு. நானும் வெத்திலே பாக்கு எடுத்துக்கிட்டு வந்துடறேன்."

* * *

கம்மாயில் வலைஞர்களும் மற்றப் பெண்களும் தேவருடைய வருகைக்காகக் காத்துக் கொண்டிருந்தார்கள். வண்டியிலிருந்து அவர் இறங்கியதும் வேலாண்டி, வண்டியையும் மாட்டையும் ஒரு மரத்தடியில் கொண்டு போய் நிறுத்தி, மாட்டை அவிழ்த்து வண்டிக் காலிலேயே கட்டிவிட்டு, வைக்கோலே எடுத்துப் போட்டுவிட்டு வந்தான். தேவரும் வேலையாட்களும் எங்கேயிருந்து வேலையைத் தொடங்கலாம் என்பதைப் பேசி முடித்தார்கள். அதன்படி வேலைக்காரர்கள் ஒரு பக்கமும், பரிக்காரப் பெண்கள் வேறொரு பக்கமும் கம்மாய்க்குள் இறங்கி வேலையை ஆரம்பித்து விட்டார்கள். மீன்களை அரித்து அரித்துக் கரை ஓரமாய்க் கொண்டுவந்து கொட்டினார்கள். அதில்தான் எத்தனை வகை! இவ்வளவு நாளும் உல்லாசமாய் நீந்திக் கொண்டிருந்த அவைகள் இப்போது தரையில் கிடந்து துடித்தன. அதற்குள் கிராமத்திலிருந்து கூடைக்காரர்களும் வந்து சேர்ந்தார்கள். அவர்கள் மீன்களைத் தினுசுவாரியாகப் பிரித்துக் கூடைகளில் நிரப்பினார்கள். அவர்கள் எல்லோரும் சரியாய் பிரித்துப் போடுகிறார்களா என்பதை வேலாண்டி கவனித்துக் கொண்டிருந்தான். தேவர் அவைகளையெல்லாம் கணக்கு எடுத்துக் குறித்துக் கொண்டு, இன்ன இன்ன இடங்களுக்கு அவைகள் போக

வேண்டுமென்று சொல்லி அனுப்பிக்கொண் டிருந்தார். சுமார் நூறு கூடை மீன்கள் மத்தியானத்திற்குள் சேர்ந்து விட்டன. "இன்னைக்கி இவ்வளவு போதும்" என்று தேவர் சொன்னதும் செம்படவர்கள் வேலையை முடித்துக்கொண்டு கரையேறி விட்டார்கள். அவர்கள் தங்கள் வலைகளைத் தண்ணீரில் போட்டு அலசிக்கொண்டு வந்து குடிசையில் வைத்ததும், அவர்களுக்கெல்லாம் கூலி யைக் கொடுத்து, அடுத்த நாள் அதிகாலையில் வரும்படி சொல்லி யனுப்பிவிட்டார்.

பறிபோட்டு அரிக்கும் பெண்கள் மாத்திரம் இன்னும் வேலை செய்துகொண் டிருந்தார்கள். அவர்கள் பறிக் கூடைகளில் பொடிக் குஞ்சுகளைத்தான் சேகரிப்பார்கள். அவைகளை யெல்லாம் உடனே விற்பனைக்கு அனுப்புவது இல்லை. கம்மாய்க் கரை யோரமாகவே நன்ருய்ச் சுத்தம் செய்யப்பட்ட இடத்தில் கொட்டிப் பரப்பிக் காயவைத்து, பின்பு கூடைகளில் ஏற்றி உலர்ந்த சரக்காக அனுப்புவது வழக்கம். அதனல் பெண்களின் வேலை முடியச் சாயந்திரம் ஆகிவிடும்.

தேவர் தங்குவதற்காகத் தற்காலிகமாக அங்கே ஒரு குடிசை போடப்பட் டிருந்தது. அதில் ஒரு கயிற்றுக் கட்டில், அவருடைய கணக்குப் புத்தகம், பென்சில், செம்படவர்களின் வலைகள் முதலியன இருக்கும். கூடைக் காரர்களும் வலைஞர்களும் போன பின்பு, அவர் அந்தக் குடிசைக்குள் போய் அமர்ந்து அன்று சேகரிக்கப்பட்ட மீன்கள் எத்தனை கூடை, கூலி கொடுத்தது எவ்வளவு, என்ற விபரங்களை எழுதி வைத்துவிட்டு, வெளியில் வந்து வேலாண்டியைக் கூப்பிட்டுச் சொன்னர்.

"நான் டவுனுக்குப் போய் அந்தக் கூடைகளெல் லாம் நான் சொன்ன இடங்களுக்குப் போயிருக்கிற தான்னு பாக்கணும். இந்தப் பொம்பளைங்க வேலையை முடிச்சதும் அவுங்களுக்குக் கூலியைக் குடுத்து அனுப்பிடு. நீ ஜாக்கிரதையாய்ப் பாத்துக்கிட்டிரு. நான் வந்திட றேன்." அவர் வண்டியைக் கட்டிக்கொண்டு மத்தியான் னம் ஒரு மணிக்கு போய்விட்டார்.

அவர் தலை மறைந்ததுதான் தாமதம். அந்தப் பெண்கள் எல்லோரும் தங்கள் வேலைகளை அப்படியே போட்டுவிட்டு, கலங்கிப் போயிருந்த அந்தத் தண்ணீரிலேயே கை கால்களைக் கழுவிக்கொண்டு கரையேறி விட்டார்கள்.

"என்ன இது, அதுக்குள்ளே முடிச்சிட்டிங்களே?" என்று சத்தம்போட்டான் வேலாண்டி.

"அட, போய்யா, நாங்க என்ன மனுசியா, மாடா? கஞ்சி கிஞ்சி குடிக்க வேணுமா? தேவரய்யா, எப்ப போவாருன்னுதானே பாத்துக்கிட் டிருந்தோம்!" என்று ஒருத்தி அலட்சியமாகச் சொல்லவே, மற்றப் பெண்கள் எல்லோரும் அவனைப் பார்த்துச் சிரித்துவிட்டு ஒரு மாத்தடியில் போய் உட்கார்ந்து, தங்கள் கலயங்களிலிருந்த கஞ்சியை, மிளகாய், வெங்காயம், துவையல் இவைகளோடு சேர்த்து வம்பு அளந்துகொண்டே சாப்பிட்டார்கள். வேலாண்டியும் குடிசைக்குப் பக்கத்தில் உட்கார்ந்து தான் கொண்டு போயிருந்த சாதத்தைச் சாப்பிட ஆரம்பித்தான்.

அந்தப் பெண்கள் எல்லோரும் சாப்பிட்டு முடித்துவிட்டார்கள். அவர்களில் ஒருத்தி அவனிடம் வந்து, "ஏய்யா, ரெண்டு வெத்திலைச் சருகு இருந்தாக் குடுக்கிறியா?" என்று பல்லைக் காட்டினாள்.

அவன், "ஏங்கிட்டே இல்லியே. நான் அதெல்லாம் போடுறதே இல்லே. வேணுமின்னு குடிசைக்குள்ளே போயிப் பாரு. அய்யா போட்ட மிச்சம் மீதாரி கெடந்தாலும் கெடக்கும்" என்றான்.

"நான் உள்ளே போகலாமா?" என்று தயங்கினாள்.

"சும்மாப் போ, புள்ளே. இதென்ன அவரு வீடா? யார் யாரோ உள்ளே போறாங்க, வர்றாங்க. போயிப் பாரு, அந்தக் கட்டிலுமேலே கெடக்கும்."

அவளும் உள்ளே போய்ப் பார்த்தாள். ஐந்தாறு வெற்றிலையும் ஒரு வெற்றிலையில் சுண்ணாம்பும் கிடந்தன. அவற்றை எடுத்துக்கொண்டு, பாக்கு ஏதாவது கிடைக்குமா என்று சுற்றிலும் பார்த்தாள். காணவில்லை.

" வெறும் வெத்திலேதான் இருந்துச்சு" என்று சொல்லிக்கொண்டே வெளியே வந்தாள்.

" சரி, நேரமாகுது. சீக்கிரம் வந்து வேலையைப் பாருங்க. அங்கேயே உட்காந்து கதைபேசிக்கிட் டிருக்காங்க" என்று அந்தப் பெண்ணிடம் சொல்லி அனுப்பினுன். அவள் அவனைத் திரும்பி ஒருமாதிரி பார்த்துவிட்டுப் போய் விட்டாள்.

அவன் சற்று நேரம் பொறுத்துப் பார்த்தான். அவர்கள் வருவதாகத் தெரியவில்லை. மரத்து நிழலில் உல்லாசமாய் உட்கார்ந்து சிலர் பேன் பார்த்துக்கொண்டும், சிலர் வெற்றிலே மடித்துப் போட்டுக்கொண்டும், இன்னும் சிலர் தலைக்குக் கையை வைத்துப் படுத்துக்கொண்டும் இருந்தனர். " வம்மா, ஒங்களைத்தானே ! நேரம் போறது தெரியலியா ? குளத்துலே பறியெல்லாம் போட்டது போட்டமாதிரி கெடக்குது. நீங்க பாட்டுக்குப் பேசிக்கிட் டிருக்கிங்களே ? அய்யா திரும்பி வர்றத்துக்குள்ளே வேலையைப் பாத்தாத்தானே கூலி வாங்கிட்டுப் போவீங்க" என்று இரைந்தான்.

அவர்கள் அதைக் காதில் போட்டுக்கொள்ளவே இல்லே. அவனைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. சற்றுக் கோபமடைந்தவனுய் அவர்களிருக்கும் இடத்திற்கே வேகமாய்ப் போனுன். அவன் வருகிறதைக் கண்டு படுத்திருந்தவர்கள் எழுந்து உட்கார்ந்தார்கள் ; காலே நீட்டிக் கொண்டிருந்தவர்கள் மடக்கிக் கொண்டார்கள். அவன் அதையெல்லாம் கவனிக்காமல், " நான் சொல்றதெல்லாம் உங்க காதிலே ஏறலியோ ? நான் பாட்டுக்கு அங்கேயிருந்து கத்திக்கிட்டிருக்கேன். நீங்க பாட்டுக்கு இங்கே பேசிக்கிட் டிருக்கிங்களே ? பொழுது சாஞ்சு போச்சு. இன்னம் கொஞ்சம் மீனுகளே அரிச்சுப் போட்டுட்டு அதுகளே யெல்லாம் காயவைக்க வேணுமா ?" என்று கத்தினுன்.

அவர்களில் வயசானவள் ஒருத்தி, " அடே தம்பி, ஏண்டாப்பா இப்படித் தொண்டையைக் கிழிச்சுக்கிட்டுக் கத்துறே ? எங்களுக்குத் தெரியாதா என்ன செய்யணு

மின்னு? நீ பெறக்கிறதுக்கு முன்னாலேயிருந்தே இந்தக் கம்மாயிலே வருசா வருசம் மீனு புடிச்சுக்கிட்டு வர்றேன். நீ யென்னமோ எங்களுக்கு ஓசனை சொல்ல வந்திட்டே'' என்று கிண்டலாகச் சொன்னாள்.

''பாவம், வயசுப் புள்ளைதானே, படபடன்னு பேசுது. கலியாணம் காச்சி பண்ணியிருந்தா நம்ம கயிட்டம் தெரியும்'' என்றாள் இன்னொருத்தி.

''இன்னம் கலியாணமாகலியா? அப்படிச் சொல்லு. அதனாலேதான்..........'' என்று சிரித்துக் கொண்டே இழுத்தாள் அவனிடம் வெற்றிலை கேட்கப் போனவள்.

''உக்காரப்பா, தம்பி. வேலையைப்பத்தி நீ ஒன்னும் கவலைப்படாதே. மனசு வெச்சா ஒரு நொடியிலே முடிச்சிருவோம். சும்மா உக்காரு'' என்றாள் முதலில் பேசிய முதியவள்.

அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு தினுசாக அவனைப் பரிகாசம் செய்ய ஆரம்பித்ததும் அவனுக்கே ஒரு மாதிரியாகிவிட்டது. மறுபடியும் அவர்களை அதட்ட மனம் வராமல், பேசாமல் மெதுவாக உட்கார்ந்துவிட்டான், அவர்கள் முன்னாலேயே.

''எப்பா, தம்பி, நீ இங்கேயேதான் ராத்திரியிலேயும் படுத்துக்கணுமோ?'' என அந்தக் கிழவி கேட்டாள்.

''இதுவரைக்கும் படுத்ததில்லே. இன்னைக்கி மீனுக கொஞ்சம் அதிகமாச் சேர்ந்திருக்கிறதினாலே ஒருவேளை காவலுக்குப் படுக்கச் சொன்னாலும் சொல்லுவாரு, அய்யா'' என்றான் வேலாண்டி.

''ஒனக்கு இந்த எடத்துச் சேதி தெரியாதோ?''

''ஏன், இந்த எடத்துக்கு என்ன? ராத்திரியிலே பயமா இருக்குமின்னு சொல்றியா, ஆத்தா?''

இன்னொருத்தி, ''நம்ம செவனாண்டி சமாசாரத்தைச் சொல்லு. அப்பத்தான் இந்தப் புள்ளையாண்டானுக்குத் தெரியும்'' என்றாள்.

"ஆமா, ஆமா. நம்ம சேரியிலே செவனாண்டின்னு ஒருத்தன் இருந்தானே, தெரியுமா? போன மூனும் வருசம் இந்தக் கம்மாயை யாரோ குத்தகைக்கு எடுத்திருந்தப்ப, அவன்தான் இங்கே காவலுக்குப் படுத்திருந்தான். நாங்க தான் அப்பவும் வேலை செய்ய வந்தோம். அவன் படுத் திருந்த அன்னைக்கி ராவே என்ன நடந்திச்சு தெரியுமா? நல்லாத் தூங்கிக்கிட்டு இருந்தானாம். நடுச்சாமம் இருக்கு மாம், யாரோ ஒரு பொம்பளை, கொஞ்ச வயசாம், அழ குன்னா அழகு அப்படி இருந்தாளாம், அவன் பக்கத்திலே வந்து உக்காந்துக்கிட்டு, 'செவனாண்டி, செவனாண்டி'ன்னு தட்டி எழுப்புனாளாம். நல்ல நெலாக் காஞ்சுக்கிட்டிருந்த தாம். அவன் எந்துருச்சுப் பாத்தானாம். பக்கத்துலே செக்கச் செவேருன்னு ஒரு பொண்ணு உக்காந்திருக்கிற தைக் கண்டுட்டு, மோகினிப் பிசாசுன்னு நெனைச்சுக் கிட்டு, 'ஆ, ஐயோ, சாமி'ன்னு கூச்சல் போட்டானாம். 'சத்தம் போடாதே'ன்னு அவ சாடை காட்டுனாளாம். அவன் ரொம்பக் கத்தினானும்.எந்திருச்சு ஓடப் பாத்தானாம். அந்தப் பொண்ணு அவனைக் கீழே தள்ளி நெஞ்சுமேலே ஏறி உக்காந்து அவன் கழுத்தைப் புடிச்சு அழுத்தினாளாம். அவன் கண்ணு முழி பிதுங்கிற மாதிரி இருந்துச்சாம். அவ எவ்வளவு நேரம் அப்பிடி உக்காந்திருந்தான்னு அவ னுக்கே தெரியாமே மயக்கமா இருந்துட்டானாம். விடியக் காலம் அவன் முதலாளி வந்து வண்டியிலே தூக்கிட்டுப் போயி வீட்டுலே போட்டாராம். ஒரே நாள் காச்சல்தான். அவன் போயிட்டான்" என்று வருத்தமாகச் சொல்லி முடித்தாள் பெரியவள்.

வேலாண்டி கலகல வென்று சிரித்து, "அடே, போ ஆத்தா, நீ ஒரு பைத்தியம். தேவாதியாவது, பொண்ணா வது, வர்றதாவது. பேய் பிசாசுக இருக்கு இங்கிறது எனக்கும் தெரியும். அதெல்லாம் பயந்தவுங்களைத்தான் அடிக்கும். என்னமோ ஒரு பேச்சுச் சொல்லுவாங்களே, 'அரண்டவனுக்கு இருண்டதெல்லாம் பேயி'ன்னு அந்த மாதிரிதான்" என்று மறுபடியும் அவளை எதிர்த்து வாதாடினான்.

"உம். அதுதான் சொல்லுவாங்களே, 'எளங்கன்னுக்குப் பயந்தெரியாது'ன்னு, அந்த மாதிரி பேசுருரு" என்ருள் அவனிடம் வெற்றிலை வாங்கிக்கொண்டு வந்தவள்.

"அட, நீ கூட என்ன கெழவி மாதிரி பேச ஆரம்பிச்சுட்டே. நீயும் எளங் கன்னுதானே" என்ருன் வேலாண்டி சிரித்துக் கொண்டே.

"அப்படிச் சொல்லு, தம்பி. ஒரு போடுன்னாலும் சரியாப் போட்டே. எண்டி, முருகாயி, ஒனக்குந்தான் கலியாணமாகலியே. இந்தப் புள்ளையாண்டானைக் கட்டிக்கிறியா?" என்று கேட்டாள் கிழவி.

"போத்தா, ஒனக்கு இன்னும் இந்த வெளையாட்டுப் போகமாட்டேங்குதே. நீ வேணும்ன கட்டிக்க!" என்ருள் அந்த வயசுப் பெண்.

"அட எழுவே, இப்படிச் சொன்னதினலே என்ன வந்திருச்சாம். அவன் ஒனக்குக் கெடைக்கணுமே. நல்ல பெரிய இடத்திலே மதிப்பா இருக்கானேன்னு சொன்ன, என்னமோ குலுக்குரு!"

"பெரிய மனுசி சொல்றதும் நெசந்தாண்டி. தேவர் அய்யா கிட்டே வேலை செய்யிற ஒருத்தனைக் கட்டிக்கிட்டா, அவரு என்னென்ன சவுரியமெல்லாம் செய்வாரு தெரியுமா?' என்ருள் கூட்டத்தில் ஒருத்தி.

இதற்கெல்லாம் அந்தப் பெண், முருகாயி, என்ன சொல்லப் போகிருள் என்று புன்முறுவலோடு அவளையே பார்த்துக்கொண் டிருந்தான் வேலாண்டி.

"வேலாண்டிக்கும் பிரியந்தான் போலிருக்குது. அங்கே பாரு அவன் அவளைப் பாக்கிறதை!" என்று குத்திக் காட்டினள் கிழவி.

முருகாயியும் அவனைப் பார்த்துச் சிரித்துவிட்டு, "சரி, எந்திரிங்க, எல்லாரும் போய் வேலையைப் பாத்துட்டு நேரா நேரத்துலே வீட்டைப் பாக்கப் போகலாம்" என்று

சொல்லிக் கொண்டே எழுந்து முந்தானையை உதறி இடுப்பில் வரிந்து கட்டினாள்.

"ஆமா, இவளுக்குத்தான் வீட்டிலே புள்ளையும் குட்டியும் அழுகுது! உக்காருடி, இன்னும் சித்தே. மொதலாளி வீட்டு வேலாண்டியே உக்காந்திருக்கிறப்ப நமக்கென்னடி" என்றாள் ஒருத்தி. அப்போதுதான் அவனுக்கும் இவ்வளவு நேரமாக வேலையை மறந்துவிட்டு அவர்களோடு தான் வேடிக்கையாகப் பேசிக்கொண்டிருந்தது நினைவிற்கு வந்தது.

"ஐயையோ, நேரம் போனதே தெரியாமெ நானும் உங்ககிட்டேப் பேசிக்கிட்டே இருந்திட்டேனே. எந்திரிங்க. போயி வேலையைப் பாருங்க. பொழுது எவ்வளவு சாஞ்சு போச்சு" என்று துரிதப் படுத்தினான்.

அவர்களும் எழுந்து கம்மாய்க்குள் இறங்கிவிட்டார்கள். ஒரு மணி நேரம் மீன் குஞ்சுகளை அரித்து அரித்து வெளியே கொண்டுவந்து கொட்டினார்கள். வேலாண்டி தண்ணீரின் ஓரமாகவே கம்மாயின் மறுகோடி வரை போய் எங்கெங்கே மீன்கள் அதிகமாக இருக்கின்றனவென்பதைக் கவனித்து விட்டுத் திரும்பி வந்தான். அவன் வந்ததற்கும் பெண்கள் வேலையை முடித்துக் கொண்டு வெளியேறியதற்கும் நேரம் சரியா யிருந்தது.

"சரி, இதுகளை யெல்லாம் இப்படியே குவியலாய்ப் போட்டு வெச்சா நாறிப் போயிரும். எல்லாத்தையும் பரவலாக் கிண்டி விட்டிருங்க" என்று அவர்களுக்குக் கட்டளை யிட்டான்.

"அதெல்லாம் எங்களுக்குத் தெரியுந் தம்பி. நீ ஏன், பாவம், நின்னுக்கிட்டே யிருக்கே. அப்படிப் போயி உக்காந்திரு" என்றாள் ஒருத்தி.

அவனோ அங்கேயே நின்றுகொண்டு அவர்கள் சரியாய்ச் செய்கிறார்களா என்பதைப் பார்த்துக் கொண்டிருந்தான். அடிக்கடி அவனுடைய பார்வை முருகாயி பக்கம் சென்றது. அவளும் குனிந்து நிமிரும்போ தெல்

லாம் அவனைக் கவனித்தாள். தன்னையேதான் அவனும் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்பதைத் தெரிந்துகொண்டதும் உள்ளுக்குள்ளேயே ஒரு சந்தோஷம் பொங்கியது. அதனால் வேலையும் மள மளவென்று ஓடியது.

'குட்டி நல்லாத்தானிருக்கா. பறந்து பறந்து வேலை செய்யிரு. இந்தமாதிரி பத்துப் பேரு இருந்தா வேலைக எவ்வளவோ சீக்கிரமா முடிஞ்சிரும். வயசானதுகளைப் போட்டுக் கிட்டு வேலை செய்யச் சொன்னு, வெறும் கதை பேசத்தான் அதுகளுக்கு நேரம் சரியாயிருக்குது' என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டான் வேலாண்டி.

வேலாண்டி குடிசைப் பக்கம் போய் விட்டான். எல்லோரும் வேலையை முடித்துக் கொண்டு அவன் இருக்கும் இடம் வந்தார்கள். மாலை வேளை நெருங்கிக்கொண்டிருந்தது. ஆனுல் அவர்கள் இன்னும் ஐந்து மைல் நடந்து, கிராமத்திற்குப் போக வேண்டுமாகையால் இருட்டுவதற்கு முன்பே போகத் தயாரானுர்கள்.

"என்னப்பா, மொதலாளி அய்யாவை இன்னும் காணுமே? அவரு வந்துதான் கூலி குடுக்கனுமோ?" என்று கேட்டாள் கிழவி.

"என், நாளைக்குச் சேத்து வாங்கிக்கங்களேன்!" என்ருன் விளையாட்டாக.

"இன்னைக்கி வீட்டிலே போயி என்னத்தைத் திங்குறதாம்? ஒன்னையைப் போல மத்தவுங்களையும் நெனைச்சிக்கிட்டியோ? இனிமேப் போயி அரிசி, பருப்பு, புளி, உப்பு அத்தினியும் வாங்கினுத் தானேப்பா எங்க வீட்டு அடுப்புப் பொஙகையும்" என்ருள் பதிலுக்கு அந்தக் கிழவி.

"அட, நீ ஒன்னு. கொஞ்ச நேரம் வாயை வச்சுக்கிட்டுச் சும்மா இரேன். தேவருதான் இவர்கிட்டே பணம் குடுத்திட்டுப் போனதை நான் பாத்தேனே. இவரு நம்ம கிட்டே வெளையாடராரு!" என்று சிரித்துக் கொண்டே சொன்னுள் முருகாயி.

"பாத்தியா, நமக்கெல்லாம் இது தெரிஞ்சுதா? முருகாயி கண்ணு வேலாண்டி மேலேயே இருந்திருக்குது. அதுனலேதான் கவனிச்சிருக்கா" என்ருள் அவர்களில் ஒருத்தி.

"நான்தான் அப்பவே சொன்னேனே. ரெண்டும் சிறுசுக, ஒருத்தரை யொருத்தர் பாத்துக்கிட்டே யிருந்திருக்குதுக." இது கூட்டத்தில் இன்னொருத்தியின் நையாண்டி.

"அட, போத்தா, நீங்கள்ளாம் கண்ணை மூடிக்கிட்டுத்தான் இருந்தீங்களாக்கும்" என்று கோபமடைந்தவள் போல் சொன்னுள் முருகாயி.

"ஒனக்கேண்டி கோபம் வருது? ஆமான்னு சொல்லேன். கலியாணம் கூடப் பண்ணிக்குவேன்னு சொல்லு. அப்புறம் இவளுக பேசுவாளுகளா?" என்ருள் இவைகளில் அனுபவம் அடைந்த ஒருத்தி. வேலாண்டி இதையெல்லாம் வெகு ஆனந்தமாகக் கேட்டுக்கொண் டிருந்துவிட்டு, "சரி, நேரமாகுது. கூலியை வாங்கிட்டு இருட்டறதுக்கு முன்னே வழியைப் பாத்துப் போங்க" என்று சொன்னதும் வம்புப் பேச்சு நின்றது.

குடிசைக் குள்ளே யிருந்து ஒரு துணிப் பையை எடுத்துக் கொண்டு வந்தான். அதில் சில்லறையாகவே இருந்தது. தரையில் உட்கார்ந்து கொண்டு ஒவ்வொருவரையும் கூப்பிட்டு அவர்கள் கையில் பத்துப் பத்து அணுவாக எண்ணிப் போட்டான். முருகாயிதான் கடைசியாக வந்து வாங்கினுள். அவள் கையில் சில்லறையைப் போட்டுக் கொண்டே அவளை நிமிர்ந்து பார்த்தான். "போய்யா, அவுங்க கேலி பண்ணறத்துக்கு ஏத்தாப்லே நீயும் என்னைப் பாத்தே சிரிக்கிறே" என்று சொல்லி விட்டுப் புறப்பட்டாள், மற்றவர்களோடு.

அவர்கள் போவதையே பார்த்துக்கொண்டு நின்ற அவன், அவர்கள் எல்லோரும் சிறிது தூரம் சென்றதும் சிரிப்பதைக் கவனித்தான். அவர்களில் ஒருத்தி அவனைத்

திரும்பிப் பார்த்து விட்டு, "அடியே முருகு, அங்கே பாருடி, உன் புருசன் உன்னையவே பாத்துக்கிட்டு நிக்கிறதை!'' என்ருள். முருகாயி திரும்பிப் பார்த்தாள். வேலாண்டி அவளைப் பார்த்துப் பல்லைக் காட்டினுன். அவளுக்கு வெட்கம் வந்துவிட்டது. தன்னிடம் சொன்ன அந்தப் பெண்ணை ஓங்கி முதுகில் அடித்துவிட்டு நடந்து போனுள். அவர்கள் கம்மாய்க் கரைமீது வறி இறங்கிக் கண்ணுக்கு மறையும்வரை நின்று பார்த்துக்கொண்டிருந்த வேலாண்டி, 'இந்த பொம்பளைகளுக்குத்தான் எவ்வளவு குறும்பு இருக்கு? ஒரு பெண்ணைச் சும்மா கேலி செஞ்சுக்கிட்டே இருக்காங்களே!' என்று சொல்லிக் கொண்டான். ஆனுல் அவர்கள் தன் பெயரால் அந்தப் பெண்ணைக் கேலி செய்ததில் அவனுக்கு உள்ளூற ஒரு மகிழ்ச்சிதான் இருந்தது!

சூரியன் மறைந்து விட்டான். இன்னும் சற்று நேரத்தில் இருட்டிவிடும். குடிசைக்குப் பக்கத்தில் இருந்த பாறைமேல் உட்கார்ந்துகொண்டு சூரியன் மறைந்த திக்கையே பார்த்துக் கொண்டிருந்தான் வேலாண்டி. மேற்குத் தொடர்ச்சி மலையின் சங்கிலித் தொடர் முடிவு இல்லாமல் எங்கேயோ போய்க் கொண்டிருப்பதுபோல் இருந்தது. அந்தக் கம்மாய்க்கும் மலையடிவாரத்திற்கும் அரை மைல் தான் இருக்கும். மலை உச்சியில் அங்கங்கே மேகம் படர்ந்திருந்தது. ஓர் இடத்தில் 'குபு குபு' வெனப் புகை கிளம்பியது. அதைத் தொடர்ந்தே நெருப்பும் எரிய ஆரம்பித்தது. அது மலையிலுள்ள பளிங்கர்கள் மரங்களுக்குத் தீ மூட்டிக் கரி சேகரிப்பதற்காகச் செய்யும் வேலை என்பதை வேலாண்டி கேள்விப்பட் டிருந்தான். தன் கிராமத்திலிருந்தே எத்தனையோ தடவை அந்த நெருப்பைப் பார்த்திருக்கிறுன். ஆனுல் இப்போது நெருங்கி அதை அரை மைல் தூரத்தில், அடிவாரத்திலிருந்தே, பார்க்க நேர்ந்த போது அது பிரமாண்டமாக எரிவது தெரிந்தது. அந்த அனல் காற்றுக்கூட இலேசாக அவன் திறந்த மார்பின் மீது தாக்குவதுபோல் இருந்தது. 'இப்படி எரிஞ்சா இந்த மலை பூராவுமே இன்னைக்கி ராத்திரிக்குள்ளே எரிஞ்சு கரியாகிருமே. அடேயப்பா அந்தப் பொகை மானம் வரைக்கும் போகுதே!' என்று ஆச்சரி

யப்பட்டான். அதைப் பார்த்துக் கொண்டேயிருந்ததில், நன்ருய் இருட்டி விட்டதைக்கூட அவன் கவனிக்க வில்லை. சற்றுத் தூரத்தில் மாட்டுச் சலங்கைச் சத்தம் கேட்டதும், அது எங்கிருந்து வருகிறதெனக் கவனித்தான். அப்போதுதான் மலையில் எரிந்து கொண்டிருக்கும் நெருப்பின் வெளிச்சம் அவனிருக்கும் இடம்வரை வந்து விழுவதைக் கண்டான். சலங்கையின் ஒலியிலிருந்து அது தன் எஜமானர் வரும் வண்டி யென்று தெரிந்து, பாறையைவிட்டு எழுந்து வண்டிப் பாதையில் கொஞ்ச தூரம் போனுன்.

''யாரது வர்றது?'' என்று வண்டியிலிருந்து வந்த குரல் தன்னுடைய எஜமானருடையது அல்ல என்று தெரிந்தான்.

''வண்டா, செவலிங்கம், நான்தான்!'' என்ருன் பதிலுக்கு வேலாண்டி. வண்டியும் அதற்குள் அவன் பக்கத்தில் வந்து நின்றது.

''நேரமாகிட்டதுன்னு தெரிஞ்சு நீயே பெறப்பிட்டு வந்திருக்கக் கூடாதா? வண்டி வரனும்னு காத்துக் கிட்டிருந்தே?''

''தேவரய்யா என்னை இங்கேயே இருக்கச் சொல்லிவிட்டுப் போயிருக்கும் போது, நான் எப்பிடிடா வர்றது?''

''சரிதான்! அவரு ஏங்கிட்டேச் சொன்னதும் சரியாப் போச்சு.''

''என்னடா சொன்னுரு, அய்யா?'' என வேலாண்டி ஆவலாகக் கேட்டான்.

''அவரு என்ன சொல்லுவாரு? உன் கொணம் தெரிஞ்சுதான் சொல்லி யிருக்காரு. 'அவன் ஒரு வெகுளிப் பய. அந்த மலங்காட்டு எடத்துச் சமாசாரம் தெரியாமே ராத்திரியிலே அங்கேயே முடக்கிக்குவான். நீ போயிக் கூட்டியாந்திருடா'ன்னு சொன்னுரு. நான் வராட்டி நீ இங்கேயே இருந்திருப்பே போலிருக்கே.''

''ஏன், இங்கே படுத்திருந்தா என்ன? அங்கே பாருடா, மலேமேலே எரியிற தீயை. அதைப் பாத்துக்

கிட்டே இன்னைக்கி ராத்திரி யெல்லாம் இருக்கலாம் போலிருக்கே?"

"டேய், வேலாண்டி, நேரமாகுது. வண்டியிலே ஏறி உக்காருடா, போவலாம்."

"இன்னிக்கி ஏராளமா மீனு வெளியே கெடக்குது. இதுகளை யெல்லா போட்டுட்டு எப்பிடிடா போறது?"

"அட, சை. ஏறுடா! மீனு கெடந்தா இங்கே எந்தக் கழுதை வந்து எடுக்கப் போகுது, இந்த அத்து வானக் காட்டிலே? தேவரய்யாவே சொல்லி அனுப்பி யிருக்கிறப்போ உனக்கென்னடா கவலே?" என்று கோப மாய்ச் சொன்னான் சிவலிங்கம்.

"அது சரி. இங்கே ஏன் படுக்கக் கூடாதாம்?" என்று மறுபடியும் அதையே திருப்பிக் கேட்டான் வேலாண்டி.

"அதெல்லாம் அப்புறம் சொல்றேன். நீ வண்டியிலே ஏறு" என்று சொல்லிக்கொண்டே வண்டியைத் திருப்பி னான் சிவலிங்கம். வேலாண்டி வண்டியில் ஏறியதும் மாட்டைத் தட்டிவிட்டான் சிவலிங்கம். வீட்டை நோக்கி வண்டி வேகமாய்ப் புறப்பட்டது.

"இங்கே வேலை செஞ்சுட்டுப் போன அந்தப் பொம் பளைங்க உன் கிட்டே இந்த எடத்தைப்பத்திச் சொன்னாங் களாமே. அதுக்கு நீ என்னமோ கேலி பண்ணினியா முல்ல!" என்று பேச்சை ஆரம்பித்தான் சிவலிங்கம்.

"அப்படின்னா அவுங்க சொன்னதெல்லாம் நெஜம்னா நீ கூடச் சொல்றே?"

"அதுலே சந்தேகம் வேறயா? இங்கே ஒரு ஆயிர ரூவாயை மூட்டையாக் கட்டி இப்ப வைச்சிட்டு காத் தாலே வந்து பாத்தா அப்பிடியே இருக்கும்டா. ரூவா இருக்குன்னு தெரிஞ்சாக் கூட ஒருபயலும் வரமாட்டான்!

இந்த இடத்துலே எத்தினி பேரு உசிரை விட்டுருக் காணுக, தெரியுமா?" என்று அந்த இடத்தின் 'மகிமை'யைச் சொன்னான் சிவலிங்கம்.

"எனக்கென்னமோ சந்தேகமாத் தாண்டா இருக்குது. இதெல்லாம் நடக்குமாடா? மோகினி மனுசனைக் கொல்லுமாடா?" என்று மேலும் ஆவல் தூண்டக் கேட்டான் வேலாண்டி.

"டேய், அந்தப் பேச்சை விட்டுத் தொலையடா. இந்நேரத்திலே அதைப் பேசினாலே பயமா யிருக்குது" என்று அதட்டினான் சிவலிங்கம்.

வேலாண்டிக்கு மூன்று வயசு மூத்தவன் சிவலிங்கம். அவன் தேவரிடம் புதிதாக வேலைக்கு அமர்ந்து இரண்டு வருஷம்தான் ஆகிறது. எனினும் உலக விவகாரங்களை நன்றாய் அறிந்தவன். அவனே அப்படிச் சொன்னதும் வேலாண்டிக்கும் சிறிது பயம் தோன்ற ஆரம்பித்தது. வண்டிக்குப் பின் பக்கம் திரும்பிப் பார்த்தான். கம்மாய்க் கரையோ, குடிசையோ ஒன்றும் தெரியவில்லை. ஒரே இருட்டு. மலையில் எரிந்துகொண்டிருந்த நெருப்பு இப்போது வெகு தூரத்திற்குப் பரவிக் கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்தது. 'ஆமாம், நடுச் சாமத்தில் இந்த இடத்திலிருந்தா, இந்த இருட்டே மனுசனைக் கதி கலங்க அடிச்சிருமே' என்று எண்ணிக் கொண்டான் வேலாண்டி.

"என்னடா பேசாமே இருக்கே. நான் சொன்னதைக் கேட்டுப் பயந்திட்டியோ? அந்தப் பிசாசு இப்பல்லாம் வராது. தைரியமா வேறே விசயத்தைப் பேசலாண்டா" என்று தன் பயத்தையும், அவனுடைய பயத்தையும் போக்க முயற்சித்தான் சிவலிங்கம்.

"ஏண்டா, செவலிங்கம் ஒனக்கு முருகாயியைத் தெரியுமாடா?" என்று பேச்சை வேறு வழியில் திருப்பினான் வேலாண்டி.

"முருகாயியா? யாரது? இன்னைக்கி இங்கே வந்து வேலை செஞ்சாளே, அவளா?"

"ஆமடா, கட்டையா, மாநிறமா, மொக லட்சணமா இருப்பாளே, அவதான்!"

"அவளா? ஆமா. நம்ம சேரியிலே புள்ளையார் கோயிலுக்குப் பக்கத்து வீடு. அவுங்க அப்பன்கூட கொழும்புக்கோ எங்கேயோ போனவன் வரவேயில்லே. அவுங்க ஆயி, நம்ம மந்தையிலே நெலக் கடலே வித்துக்கிட்டிருப்பாளே—அவ மகதான் முருகாயி. அவளைப் பத்தி என் கேக்கிறே?"

"வேறெ ஒன்னுமில்லே. இன்னைக்கி இங்கே அவளையும் என்னையும் இந்தப் பொம்பளைங்கள்ளாம் கேலி பண்ணிக்கிட்டே இருந்தாங்க. அந்தப் பொண்ணும் என்னையைப் பாத்தே சிரிச்சுக்கிட்டே யிருந்துச்சு......"

"ஓ, அப்படிச் சொல்லு. உனக்கும் வயசு ஆச்சுல்ல. அவளும் வயசுப் பொண்ணு. கலியாணம் பண்ணிக்கலாமின்னு நெனைக்கிறே போலிருக்கு" என்று சிரித்துக் கொண்டே சொன்னான் சிவலிங்கம்.

"இதுலே என்ன? என்னைக்கினாலும் ஒருநா கலியாணம் செய்ய வேண்டியதுதானே" என்றான் வேலாண்டியும்.

"நானும் அதைத்தானே சொல்றேன். ஆனா அவ ரொம்பப் படிச்சவளாச்சே. அவுங்க ஆயி நல்ல மாப்பிளையாப் பாத்துக்கிட் டிருக்காளாம்!"

"அப்படி என்ன ரொம்பப் படிச்சிருக்கா, அவ?"

"நாலாவதோ, அஞ்சாவதோ படிச்சிருக்காளாம்! அவ்வளவு படிப்பு நம்ம சாதியிலே எந்தப் பொம்பளெடா படிச்சிருக்கா? அதோடே நல்ல செவப்பாவு மிருக்கா. அதுனாலேதான் அவுங்க ஆயி நல்ல எடமா வருமான்னு காத்துக்கிட்டிருக்கா. அவுங்க அப்பன் கொழும்பிலே வேறே ஒருத்தியைக் கட்டிக்கிட்டு இங்கே வாறதில்லேன்னு இருக்கானும்......" என்று தனக்குத் தெரிந்த மட்டில் சொன்னான் சிவலிங்கம்.

"நாலாவது, அஞ்சாவது வரைக்கும் படிச்சிருக்காளா? அதுதான் அப்பிடி இருக்கா. நான் கேட்டா அவுங்க ஆயி சம்மதிப்பாளாடா?"

"நீ நல்ல எடத்துலே ரொம்ப நாளா நீடிச்சு வேலை செய்யிறதுனாலே ஒரு சமயம் சம்மதிச்சாலும் சம்மதிப்பா. ஆனா, பொண்ணு இஷ்டப்படணுமே? நீ கருப்பா இருக்கேன்னு சொன்னாள்னா?"

"போடா, செவலிங்கம். நம்ம சாதியிலே எவன்தான் செவப்பா இருக்கான்?"

"சரி, யாரையும் விட்டுக் கேட்டுத்தான் பாரேன்" என்று சொல்லிவிட்டு மாட்டைத் தட்டிவிட்டான்.

"இந்த விசயத்தை யாருகிட்டே போயிடா சொல்றது? நீயேதான் கேளேன். இதுலே யென்ன இருக்குது. இஷ்டமிருந்தா 'சரி'ங்கரு, இல்லேன்னா 'முடியாது' இன்னு சொல்லட்டுமே" என்று யோசனை கூறினான் வேலாண்டி.

"சே, சே. அப்பிடி அவுங்க ஆயிகிட்டே போயிக் கேட்டு அவமானப் படக்கூடாது. மொதெல்லே அந்தப் பொண்ணுடைய நோக்கம் தெரிஞ்சுக்கணும்."

"அதெப்பிடிடா தெரிஞ்சுக்கிறது?"

"இதென்னடா பெரிய காரியம்? நாளைக்கி இங்கே கம்மாய்க்கு வரும்போது நீயே பேச்சுக் குடுத்துப் பாரேன். பேச்சிலே தெரியாதா?" என்று தந்திரம் சொல்லிக் கொடுத்தான் சிவலிங்கம்.

"சரி, அப்படியே செஞ்சு பாக்கிறேன்."

"அவ உனக்குக் கெடைச்சா, நீ அதிஷ்டக்காரன் தான். அவ வயசுக்கு வேறே யாருமா இருந்தா நம்ம சேரியிலே இன்னேரம் எவ்வளவோ கெட்ட பேரு வாங்கி யிருக்கணும். ஆனா இவளைப் பத்தி இதுவரைக்கும் அப்பிடி ஒன்னும் நான் கேக்கவே இல்லை!"

"அவ மொகத்தைப் பாத்தாலே அது நல்லாத் தெரியுதே. அதனாலேதான் நானும் பிரியப்பட்டுக் கேக்கிறேன்."

"அடடே, பேச்சுப் பெருக்கிலே வண்டி ஊருக்குள்ளே வந்துதே தெரியலியே" என்று ஆச்சரியப்பட்டான் சிவலிங்கம்.

"சரி, நீ வண்டியை ஐயா வீட்டுத் தோட்டத்திலே கொண்டுபோயி நிறுத்திட்டு மாட்டை அவுத்துக் கட்டு. நான் இப்பிடியே போயி அவரப் பாத்துட்டு வர்றேன்" என்று சொல்லிவிட்டு வேலாண்டி, வண்டியை விட்டு இறங்கித் தேவர் வீட்டிற்கு விரைந்தான்.

அடுத்த நாள் அதிகாலையிலேயே எழுந்து மங்தையில் வந்து நின்ருன் வேலாண்டி. வேலைக்காரர்கள் முதலில் வந்தார்கள். அவர்களை நேரே கம்மாய்க்குப் போகச் சொல்லி அனுப்பிவிட்டு, பெண்கள் வருவதற்காகக் காத்துக்கொண்டிருந்தான். அவர்களும் ஒவ்வொருவராக வந்து சேர்ந்ததும், அவர்களில் அந்த முருகாயி இல்லாததைக் கண்டு அவன் மனம் 'திக்' கென்ருகிவிட்டது. "எங்கே இன்னும் ஒரு ஆளைக் காணுேமே?" என்று கேட்டான்.

"யாரு வரலே?" என்று சுற்றிப் பார்த்துவிட்டு, "ஓ, முருகாயிக் குட்டியா? அவ வர்ருளோ, என்னமோ?" என்று ஒருத்தி சொன்னுள்.

"யாராவது போயிப் பாத்திட்டு வர்றிங்களா?" என்று கேட்டான்.

"அவ வந்தா வர்ரு, இல்லாட்டி, நாங்க போருேமே?" என்ருர்கள் அவர்கள்.

"இல்லே அவ இன்னைக்கிக் கட்டாயமா வருவா. கொஞ்சம் இருந்து பாக்கலாம்" என்ருள் ஒருத்தி.

அவர்கள் அப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும் போதே முருகாயி கஞ்சிக் கலயத்தைத் தலையில் வைத்துக் கொண்டு வந்து கொண்டிருந்தாள். அதைக் கண்ட வேலாண்டியின் முகம் மலர்ந்தது. "அதா, அந்தப் பொண்ணும் வந்துருச்சு. சரி, பெறப்பிடலாம்" என்று கிளம்பினுன். எல்லோரும் அவனைப் பின்தொடர்ந்தார்கள்.

ஊர் தாண்டும்வரை அவன் பத்தடி முன்னாலேயே போய்க் கொண்டிருந்தான். வயல், வரப்பு, வாய்க்கால் இவைகளைக் கடந்து ஓர் இட்டேறிப் பாதை வழியாகச் செல்லும்போது ஒருவர் பின் ஒருவராகப் போய்க் கொண்டிருந்தார்கள். பெண்கள் தங்களுக்குள்ளே வம்பளந்து கொண்டே போனார்கள். அவன் மாத்திரம் யாருடனும் பேசாமல் பின்னால் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே சென்றான்.

"ஐயோ, பாவம். அந்தப் புள்ளையாண்டானுக்குப் பேச்சுத் தொணைக்கு யாருமே இல்லாமே சும்மாப் போகுதே. நானாவது போயிப் பேச்சுக் குடுக்கிறேன்" என்று சொல்லிவிட்டு ஒரு குறும்புக்காரி, எல்லோரையும் முந்திக்கொண்டு, அவனிடம் ஓடினாள். அவனும் திரும்பிப் பார்த்துச் சிரித்தான்.

"வா, ஆத்தா, வா. அங்கே யெல்லாம் ஒருத்தரும் உன்கூட வம்பிழுக்க ஆம்பிடலியாக்கும். அதனாலே எங்கிட்டே வந்தியோ?"

"இல்லேப்பா. சும்மா வாயை மூடிக்கிட்டுப் போறியேன்னுதான் வந்தேன். எங்கிட்டே என்ன பேச முடியும்னு நெனைக்கிறியோ? முருகாயியை வரச் சொல்லவா?" என்றாள் பரிகாசமாய்.

அவன் சட்டெனத் திரும்பி, "அந்தப் பொண்ணு காதிலே விழுந்திறப் போகுது. அப்புறம் வம்பு!" என்று எச்சரித்தான்.

"அட, நீ ஏன் இப்படிப் பயந்து சாகுறே? அவளும் உங்கிட்டேப் பேசனும்னுதான் துடிச்சிக்கிட் டிருக்கா. அது தெரியுமா?"

அதைக் கேட்டதும் அவன் அப்படியே ஸ்தம்பித்து நின்று விட்டான். மற்றப் பெண்கள் சற்றுத் தொலைவில் வந்து கொண்டிருந்ததால் இவர்கள் இருவர் பேச்சையும் அவர்கள் கவனிக்காமல், அவர்கள் பாட்டுக்குச் 'சள சள' வெனச் சத்தம் போட்டுப் பேசிக் கொண்டு வந்தார்கள்.

"நெஜமாவா? எங்கிட்டே பேசுனும்னு அந்தப் பொண்ணுக்கு இஷ்டமா?" என்று ஆவலும் பயமும் கலந்த குரலில் கேட்டான்.

"ஆமான்னுதான் சொல்றேனே......சரி, நடந்துக் கிட்டே பேசு. அந்தக் கழுதைக காதுலே விழுகப் போகுது. நானு அவ வீட்டுக்குப் பக்கத்து வீடுதான். ராத்திரி அவங்கம்மா தூங்கினப்புறம் எங்கிட்டே முரு காயியே வந்து இதைச் சொன்ன!" என்று சுருக்கமாகச் சொல்லி நிறுத்தினள்.

"அப்படியா? இந்தக் கூட்டத்திலே நான் அவ கிட்டே எப்படிப் பேசுறது?" என்று சற்றுத் தைரியம் அடைந்து கேட்டான்.

"இங்கே யெல்லாம் பேசவேணும். அங்கே கம்மா யிலே வேலெ செஞ்சுக்கிட் டிருக்கும்போதே அவ மெதுவா அந்தக் குடிசைப் பக்கமா வருவா. அப்பப் பேசிக்க!" என்று யோசனை கூறினள்.

"என்னத்தைப் பேசுறது?"

"அட, பைத்தியக்காரப் புள்ளே! இது கூடவா சொல்லித் தரணும்? அவ உன்னையைக் கலியாணம் பண் ணிக்கனும்னு ஆசைப் படுரு. அதைப் பத்தித்தான் கேப்பா. நீ என்னமாவது சொல்லேன்!"

"எனக்கும் இஷ்டம்தான்னு நீயே சொல்லிப்பிடேன்" என்ருன் மறுபடியும் பயந்தவனய்.

"சரிதான். நான் சொன்ன அவ மனசுக்குச் சந்தோ சமா இருக்குமா? நாளைக்கிக் கலியாணம் பண்ணிக்கிட்டு இருக்கிறப்ப நான்தான கூட இருந்து......"

"என்ன, 'கூட இருந்துன்னு' நிறுத்திக்கிட்டே?" அதன் அர்த்தம் தெரியாமல் கேட்டான்.

"இப்படியுமா இந்தக் காலத்திலே ஒரு புள்ளெ இருக் கும்? இது கூடவா வெளக்கமாச் சொல்லணும்? நான் நல்லாச் சொல்லிப்புடுவேன். ஆன நீ எனக்கு மகன் மாதிரி இருக்கிறேன்னுதான் மரியாதையாச் சொல்றேன்" என்று சிரித்துக்கொண்டே சொன்னள்.

"சரி, ரொம்ப சந்தோஷம். நீ இதைச் சொன்னதுக்கு, மத்ததை நானே பாத்துக்கிறேன்" என்று அவளிடம் சொல்லிவிட்டுத் திரும்பி, பின்னால் வருகிறவர்களைக் கவனித்தான். முருகாயிதான் எல்லோருக்கும் முன்னால் வந்து கொண்டிருந்தாள். மற்றவர்கள் ஆடி அசைந்து அடிமேல் அடி யெடுத்து வைத்து வந்தார்கள். அவர்கள் பேச்சும் ஓயவில்லை.

"ஏத்தா, இந்த மாதிரி நீங்க நடந்து வந்தா எப்பப் போயிச் சேர்றது? எப்ப வேலையை ஆரம்பிக்கிறது? காலை வீசிப் போடுங்க" என்று சத்தம் கொடுத்தான் வேலாண்டி. அதைக் கேட்டு அவர்களும் வேகமாய் நடக்க ஆரம்பித்தார்கள். முருகாயி அவனைப் பார்த்துச் சிரித்தாள். அவனும் இலேசாக அதைக் கவனித்து, பதிலுக்குச் சிரித்து விட்டுத் திரும்பி நடந்தான்.

"ஆமாத்தா. நீ ஏங்கிட்டே அந்தப் பொண்ணு சொன்னதைச் சொல்லி யிருப்பேன்னு அது தெரிஞ்சுக்கிட்டு இப்பச் சிரிக்குது" என்று தன் பின்னால் நெருங்கி வந்து கொண்டிருந்த அவளிடம் சொன்னான் மெதுவாக.

"பாத்தியா, நான் சொன்னது நெஜமின்னு இதிலே யிருந்தாவது தெரிஞ்சுக்க" என்று அழுத்தமாகக் கூறினாள் அந்த ஸ்திரீ.

'முருகாயியை எப்படிச் சந்திப்பது? மற்றவர்களுக்குத் தெரியாமல் எங்கே பேச முடியும்? என்ன பேசுவது? சரி, நேத்து மாதிரி வலை வீசுறவுங்களையும் இந்தப் பொம்பளைங்களையும் தனியாப் பிரிச்சு வெவ்வேறே எடத்துக்கு வேலை செய்ய அனுப்பிரனும். அதுதான் சரி...... வலைக்காரங்க வேறே சாதி. இந்தப் பொம்பளைங்க நம்ம சாதி. அதனாலே முருகாயி கிட்ட என்ன பேசினாலும் வலைக்காரங்க கவனிக்கவா போறாங்க......இருந்தாலும், எதுக்கும் சாக்கிரதையா இருக்கிறது நல்லதுதானே...... தேவரய்யா மத்தியானத்துக்கு மேலே வந்துருவாரே, அதுக் குள்ளற முருகாயி குடிசைப் பக்கம் வரணுமே?...' என்று இப்படி யெல்லாம தன் மூளையைக் குழப்பிக் கொண்டே நடந்தான் வேலாண்டி.

எல்லோரும் கம்மாய்க்கு வந்து விட்டார்கள். முன்னாலேயே புறப்பட்டு வந்த வலைக்காரர்கள் தங்கள் வலைகளை எடுத்துச் சரிபார்த்துக் கொண்டிருந்தார்கள். வேலாண்டி அவர்களிடம் போய், "தேவரய்யா வர நேரமாகும். நீங்க நேத்துப் போட்ட எடத்துலேயே இன்னைக்கும் வலை வீசுங்க. இந்தப் பொம்பளைங்க இப்படியே தெக்காலே பறி போடட்டும்" என்று சொன்னான். அவர்களும் 'சரி' என்று வலையைத் தோளில் போட்டுக்கொண்டு குடிசைக்கு இரண்டு பர்லாங்கு தூரத்தில் போய்விட்டார்கள். பெண்களும் கஞ்சிக் கலயங்களை மரத்தடியில் பத்திரமாய் வைத்துவிட்டு, சேலையை வரிந்து கட்டி, பறிப் பெட்டிகளை எடுத்துக் கொண்டு தண்ணீரில் இறங்கி விட்டார்கள்.

வேலாண்டி குடிசைக்கு முன்பிருந்த பாறையின் மேல் உட்கார்ந்து அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தான். அதற்கு முந்திய நாள் மாலை, அந்தப் பாறையின் மேலிருந்துதான் மலைப் பக்கம் பார்த்துக் கொண்டிருந்தான். அந்த நினைவு வந்ததும், அப் பக்கம் திரும்பிப் பார்த்தான். நேற்று நெருப்பு வான் அளாவ எரிந்த இடத்தில் இன்னும் புகைந்து கொண்டிருந்தது. சூரிய வெளிச்சம் மலைமீது விழுந்திருந்தும்கூட, காலை இளம் சூரியன் கதிர்களால், மலையில் படிந்திருந்த பனி சரியாய்க் கலையவில்லை. மரஞ் செடி கொடிகளெல்லாம் மங்கலான பச்சை நிறமாகக் காட்சி அளித்தன. அவனுடைய மனமும் அந்த மலையைப் போலத்தான் அப்போதைக்கு இருந்தது. மனத்திற்குள் ஏதோ புகைந்துகொண்டிருந்தது. சந்தோஷம், துக்கம், தைரியம், பயம், இப்படியாக எல்லாம் சேர்ந்து பனிமூட்டம் போல, அவனுக்கே என்னவென்று புரியாதபடி ஒரு மயக்கை உண்டாக்கியது. அதைப் போல அவன் அதற்கு முன் என்றுமே சோர்ந்து இருந்ததில்லை.

'அவ என் கிட்டே வர்றதுக்கு முந்தியே இப்படியிருக்குதே, அவ வரும்போது......அந்தச் சமயம் பாத்து எஜமானர் வந்துட்டா.....' அதை நினைக்கும்போதே அவன் உடம்பு புல்லரித்தது. ஒரு குலுக்குக் குலுக்கிவிட்டது. 'இது இந்தப் பனியின் சேட்டைதான்!' என்று

மனத்தைத் திடப் படுத்திக்கொண்டு அந்தப் பாறையை விட்டு எழுந்து, முந்தின நாள் மீன்கள் பரப்பி யிருந்த இடத்திற்குப் போய்ப் பார்த்தான். அவைகளெல்லாம் செத்து விறைத்துப் போயிருந்தன. 'எத்தினி ஆயிரம் உசுருக! இதுகளுக்கும் புருசன் பொண்டாட்டி இல்லாமலா இருக்கும்? புருசனைப் பிடிச்சு வெளியே போட்டுட்டா, பொண்டாட்டி தண்ணிக் குள்ளே ஓடி ஓடித் தேடாதா? ஐயோ, பாவம்!' என்று வருத்தப் பட்டான். மறுகணம், 'இதுகளுக்கு அந்த நெனைப்பையே சாமி குடுத்திருக்க மாட்டாரு' என்று தன்னைத் தேற்றிக் கொண்டான். ஏதோ நினைப்பு வந்து அந்த ஸ்திரீகள் பக்கம் திரும்பினன். அவர்கள் எல்லோரும் ராகம் போட்டுப் பாடிக்கொண்டே வேலையில் முனைந்திருந்தார்கள். இருபது பேர் அடங்கிய அந்தக் கூட்டத்தில் அவனுடைய கண்கள் முருகாயியைத்தான் தேடின. அவளைக் காணவில்லை! என்ன?...... அவனுக்குத் 'திகீர்' என்றது. நன்றாய்க் கவனித்துப் பார்த்தான். மட மடவென்று அவர்களை எண்ணியும் பார்த்துவிட்டான். பத்தொன்பதுதானிருந்தது. அவள் நழுவி விட்டாள்! எங்கே போயிருப்பாள் என்று அப்படியே நாலு புறமும் சுற்றிப் பார்க்கையில், அவள் குடிசையின் மறுபக்கம், அந்த ஸ்திரீகளுக்கு மறைவாக, நின்று கொண்டு அவனையே பார்த்துக்கொண் டிருப்பதைக் கண்டுவிட்டான். அவன் உடம்பெல்லாம் 'கிடு கிடு' வென்று ஆடி விட்டது. ஒரு வினடிதான். அடுத்த வினடியே குடிசையை நோக்கி அவனும் இரண்டு எட்டில் வந்துவிட்டான்.

அவன் முருகாயின் பக்கத்தில் வந்து நின்றதும் அவள் சட்டென்று கீழே உட்கார்ந்து விட்டாள். நின்று கொண்டிருந்தால் ஒரு வேளை அவளுடைய தலை மற்றவர்களுக்குத் தெரிந்து விடுமோ என்ற பயம் அவளுக்கு. அவனும் அந்தக் குறிப்புஅறிந்து அவள் பக்கத்தில் உட்கார்ந்து விட்டான். அவர்களிருவரையும் யாருமே பார்க்க முடியாத ஒரு பந்தோபஸ்தான இடம் அதைத் தவிர வேறில்லை. அப்போதுகூட அவளை யாரோ பார்த்துக் கொண்டிருப்பது போல அவன் மனத்தில் உறுத்தியது. அதுதான் அந்த

மலைத் தொடர். 'அதை மறைக்க யாரால் முடியும்?' என்று பெருமூச்சு விட்டுக் கொண்டே முருகாயி பக்கம் திரும்பினான். அவள் தலையைக் கவிழ்ந்து கொண்டாள்.

"முருகாயி!" என்று சொல்லிக்கொண்டே அவள் கையைப் பிடித்தான். இவ்வளவு நேரமும் சேற்றில் இறங்கி வேலை செய்துவிட்டு, அவனிடம் வருவதற்கு முன் உடம்பைச் சுத்தமாகக் கழுவிவிட்டு வந்திருந்த அவளுடைய கரம் சில்லிட்டிருந்தது. "என்ன இப்பிடிக் குளுக்குளுன்னு இருக்கு கையி?" என்றான். அவள் அந்தப் பிடியிலிருந்து விடுவித்துக்கொள்ள முயல்வது போல் நடித்தாள். அவனும் இலேசாகத்தான் பிடித்திருந்தான்.

"உன் கை ஏன் இப்படி நடுங்குது?" என்று அவள் பதிலுக்குக் கேட்டாள், அவனைப் பார்க்காமலே. அப்போதுதான் அவனுடைய பயம் அவனுக்குத் தெரிந்தது. ஆனால் அதை அவளிடம் காட்டிக்கொள்ள வெட்கப்பட்டு, "பனியினாலேதான்" என்றான்.

"பனி போயி எவ்வளவு நேரமாச்சு? பொழுது எவ்வளவு வந்திருச்சே!" என்று அவன் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள். 'ஆஹா என்ன செளந்தர்யம்! என்ன கொஞ்சும் பாவனை!' என்று அந்த முகத்தைக் கண்டு, அந்த மயக்கத்தில் லேசாகக் கண்ணை மூடினான்.

"என்ன, தூக்கம் சொக்குதோ?" என்றாள்.

"இல்லே... அது தூக்கமில்லே......" அவள் கையை இறுகப் பிடித்தான். அவனுடைய உள்ளக் கொதிப்பு அதில் வெளிப்பட்டது.

"அப்பாடி, உனக்கு எவ்வளவு பெலம்?"

"முருகாயி, நேத்து நீ வெத்திலே கேட்டியே, இந்தா இன்னேக்கி உனக்குன்னே ரெண்டணாவுக்கு எளம் வெத்திலேயும் களிப்பாக்கும் வாங்கியாந்திருக்கேன்" என்று சொல்லிவிட்டு மடியை அவிழ்த்து அதை எடுத்தான்.

"நேத்து நான் வெத்திலைக்காகவா உன் கிட்டே வந்தேன்னு நெனைச்சே? அதைச் சாக்கு வைச்சு உன் கிட்டேப் பேசத்தான் வந்தேன். நீயோ ஏங்கிட்டேப் பேச்சுக் குடுக்காமே அனுப்பிட்டே."

"அப்ப, நீ என்னையை இதுக்கு முன்னாலே பாத்திருக்கியா?"

"போன ஒரு வருசமா, நீ எங்க வீட்டுப்பக்கம் தினமும் காலங்காத்தாலே போகும் போதெல்லாம், காத்திருந்து பாப்பேன். நீயோ தலையைக் குனிஞ்சுக்கிட்டே போயிருவே. அப்பல்லாம் உன்மேலே எனக்கு எவ்வளவு கோவம் தெரியுமா...?"

"அடடா, உன் நெஞ்சுலே இருந்தது எனக்கெப்படித் தெரியும்? அந்தக் கோவத்தை யெல்லாம் இப்பத் தீத்திரு...முருகாயி...முருகாயி...நீ என்னைக் கலியாணம் பண்ணிக்கிவியா?"

"அதைச் சொல்லத்தானே இப்ப வந்தேன். சும்மா வெளையாடிட்டுப் போக வந்தேன்னு நெனைச்சே?"

"நேத்து உன்னைப் பாத்ததிலே யிருந்தே எனக்குப் பித்துப் பிடிச்ச மாதிரி இருக்குது" என்று சொல்லிக் கொண்டே அவள் தோளில் கையைப் போட்டான். அவள் அப்படியே அவன்மீது சாய்ந்துகொண்டாள்.

"எனக்கும் ராத்திரி யெல்லாம் தூக்கமே வரலே!" என்று சொல்லிக் கொண்டே அவன் மடியில் படுத்துக் கண்களை மூடினாள். அவன் உடம்பு முழுவதும் நெருப்புப் போன்ற ஒரு சக்தி குபீரெனப் பரவியது.

"ஏன் உன் துணியெல்லாம் இவ்வளவு ஈரமா யிருக்குது?" என்று அவளுடைய மேல் துணியைத் தொட்டுப் பார்த்தான். அவன் கை பட்ட இடம்...அவள் துள்ளிக் கொண்டு எழுந்திருக்க முயன்றாள். அவன் அவளை, அப்படியே அழுத்திக்கொண்டு தன் தலையை அவள் முகத்துக்கு எதிராகச் சாய்த்து அவள் நெஞ்சின்மீது சாய்ந்து கொண்டான்.

"இப்ப யாராவது பாத்தா..." என்று சொல்லும் போது அவள் குரலில் நடுக்கம் கண்டது.

"உன் நெஞ்சு ஏன் இப்படி அடிக்குது? பயமா? இங்கே பாரு. என்ன இப்படித் தீயாக் கொதிக்குது? உன் நெஞ்சுக்குள்ளே நெருப்பு இருக்கா?"

நெருப்பின் மேல் நீறு பூத்ததுபோல அவளது உள்ளக் கனலை மறைத்திருந்த அந்தக் கந்தல் துணியை அவன் இலேசாகத் தள்ளிவிட்டது, அவளுக்குத் தெரிந்தோ தெரியாமலோ பேசாமல் இருந்துவிட்டாள்! ஒரு நிமிஷம் உலகமே அமைதியாய் இருந்தது அவர்கள் இருவருக்கும்.

"மு—ரு—கா—யி!"

அவள் கண்களை மலர விழித்துத் தன் 'உடம்பை'ப் பார்த்துவிட்டு விசும்பிக்கொண்டு, அவனை உதறித் தள்ளி எழுந்து உட்கார்ந்து, "உனக்கு ரொம்பத் தைரியமிருக்கு. இப்படியா செய்வாங்க?" என்று சொல்லிக் கொண்டே விலக்கப்பட்டிருந்த மேல் முந்தானையை உதறி உடம்பை மறைத்துக் கொண்டாள்.

"அப்ப, நீ பெறப்பிட்டியா? இந்தா, இந்த வெத் திலையை எடுத்துக்கிட்டுப் போ" என்று நீட்டினான். அவள் அதை வாங்கக் கையை நீட்டியதும் அப்படியே அவளை இழுத்துத் தன் பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டு அவளையே இமை கொட்டாமல் பார்த்தான்.

"நெசமாவே உனக்குப் பயித்தியம் தான் பிடிச்சிருக் குது. இது எப்பத் தீரப்போகுதோ?" என்றாள்.

"இன்னும் பத்துநாளிலே தீந்துடும்!"

"எப்படிப் பத்து நாளிலே?"

"அதெல்லாம் நேத்தே முடிவு பண்ணிட்டேன். இன் னம் பத்து நாளிலே நம்ம ஊரிலே திருவிழா வருமல்ல? அன்னைக்கே நம்ம ரெண்டு பேத்துக்கும் கலியாணம்!"

"நெசமாவா சொல்றே? இதுக்கெல்லாம் பணம்?"

"தேவரையாதான் எங்கிட்டே முன்னேயே சொல்லியிருக்காரே, நானே ஒரு பொண்ணைப் பாத்துக்கிட்டு அவருகிட்டே சொன்னக் கலியாணத்துக்கெல்லாம் பணம் குடுத்து முடிக்கிறதா. அவரு சொன்ன வார்த்தை தவற மாட்டாரு. அதனுலேதான் இவ்வளவு நிச்சியமாச்சொல்றேன்!"

"எனக்கு நகை நட்டு ஒன்னுமே இல்லியே? எங்கம்மா கிட்டேச் சொல்லி......"

"முருகாயி, உங்கம்மா, உங்கப்பா, எல்லாத்தையும் பத்தி நான் மத்தவுங்க மூலமாக் கேள்விப் பட்டிருக்கேன். நகை, சீலை, இதுகளைப் பத்தி யெல்லாம் கவலைப்படாதே. எல்லாம் அன்னைக்கி வந்து சேந்திரும், பாரு!"

"அப்ப நிச்சயந்தானே?" என்று மறுபடியும் சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்ள உறுதியாகக் கேட்டாள்.

"சத்தியம் பண்ணித் தரவா?" என்று சொல்லி அவள் தலையிலடிக்கக் கையைத் தூக்கினன்.

"வேண்டாம், வேண்டாம். நீ சொன்னதே போதும், நான் வரட்டுமா?" அவள் எழுந்து நின்றுவிட்டாள்.

வேலாண்டி மறுபடியும் அவளை எட்டிப்பிடிக்க முயற்சித்தான். அவள் சிட்டாய்ப் பறந்துவிட்டாள். அந்தப் பெண்கள் கூட்டத்தில் அவள் ஒருவரும் அறியாவண்ணம் போய்ச் சேர்ந்ததும் வேலாண்டியிடம் 'தூது' வந்த அந்த ஸ்திரீ மாத்திரம் முருகாயியைப் பார்த்துச் சிரித்தாள். முருகாயி அவளிடம் ரகசியமாக வேலாண்டி கொடுத்த வெற்றிலை பாக்கைக் கொடுத்து, அவள் கன்னத்தில் இலேசாகத் தட்டினுள். 'காரியம் வெற்றி' என்பதை அந்த ஸ்திரீ அறிந்து கொண்டுவிட்டாள்.

வேலாண்டி மலைப் பக்கம் திரும்பிப் பார்த்தபோது பனியெல்லாம் சுத்தமாய்க் கலைந்து பச்சைப் பசேரென்று விளங்கியது மலைத்தொடர். அவன் மனத்திலும் இதுவரை அழுத்திக் கொண்டிருந்த பாரம் நீங்கிவிட்டது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது.

*

ஓரங்க நாடகம்

# நம்பர் 503

'சுகி'

1. நம்பர் 503.
2. தங்கம். மிஸஸ் 503.
3. வைத்தியர்.
4. செட்டியார்.
5. ஹெட் ஐயா.

['லேன்' வரிசையில் ஒரு வீடு. சற்று எட்டின தூரத்தில் வாதா மரம். 503 முதல் 'பீட்' முடிஞ்சு, இடக்கையில் தொப்பியுடன் வலக்கையால் தலையைத் துடைத்தபடியே வீட்டிற்குள் நுழைகிறார்.]

தங்கம்: நான் சொன்னது வாங்கி வந்தீங்களா?

நம்பர்: என்னது?

தங்: புண்ணாக்கு.

நம்: உனக்கா புண்ணாக்கு? (சிரிக்கிறான்) என்ன வகைப் புண்ணாக்கு?

தங்: சொன்னேன் சோத்துக்கு உப்பு இல்லேன்னு.

நம்: உப்பு வாங்கணுமா?

தங்: மண்ணாங்கட்டி! பார்லி அரிசி, பார்லி அரிசின்னு சொன்னேனே. காதிலே விழலையா?

நம்: நீ போடற சத்தத்திலே வீடே விழுந்திடும்.

தங்: அப்படி விழுந்தாத்தான் நானும் அதுவும் சுகமா இருக்கலாம். (அழுகை வந்துவிடுகிறது.)

நம்: என் அழறே கையிலே காசு இல்லே.

தங்: காசு இல்லே! (கேலி) காசா இல்லே? நீங்களும் போலீஸ் உத்யோகம் செய்யறீங்க. ஆமா, கடனு வாங்கினு, கொடுக்கப்படாதா?

நம்: (தமாஷ்) நம்மை நம்பி எவங் கடங் கொடுப்பானும்? ஆமா, ஷாப் கடை சாயபு வந்தானு?

தங்: வந்தான். சும்மாவா வந்தான்? ஆகாசத்துக்கும் பூமிக்கும் டான்சு ஆடி வந்தான். (கோபம்) குழந்தை உடம்புக்கு ஒதவாத பணம் எதுக்காம்? பார்லி அரிசிதான் கொடுக்கணுமாம், வைத்தியர் சொன்னுர்.

நம்: பணம் இல்லேயே, தங்கம்.

[வைத்தியர் 'அம்மா, அம்மா' என்று கூப்பிடுகிறுர் வெளியில். இது கேட்டு, தங்கம் எட்டிப் பார்க்கிறுள்.]

தங்: ஆரது? கூப்படறது ஆரு?

வைத்தியர்: நாந்தாம்மா. குழந்தை எப்படி இருக்கு?

[போலீஸ் உள்ளே போகிறுர்.]

தங்: வைத்தியரய்யாவா, வாங்க. உள்ளே வாங்க.

வைத்: ஐயா 'பீட்'டிலே இருந்து இன்னம் வாலேயா?

[நம்பர் மெதுவான குரலில், "தங்கம், நான் பின் வாசல் வழியாப் போறேன்" என்கிறுர்.]

தங்: அவுக இன்னம் வெளியே இருந்தே வரலே.

வைத்: வரட்டும், வரட்டும். குளந்தைக்குக் கபம், இருமல் எப்படி இருக்கு? எடுத்தாங்க நாடி பாக்கலாம்.

தங்: இப்பத்தான் தூங்கிச்சு; அசந்து தூங்குதே.

வைத்: தூங்கறதா? தூங்கட்டும். நேத்து இந் நேரத்திலே என்னமா துடிச்சுது? இன்னிக்கு ராஷா வாட்டம்......

தங்: நீங்க நேத்தைக்கு வரலேயின்னு, எம்புள்ளே உசிரு எப்பிடி ஆவுமோ. அவுக டாக்டரே கூட்டி

யாரேன்னுக? நாந்தான் உங்களைக் கூட்டியாரச் சொன்னேன்.

வைத்: என்னம்மா, 'தொரஸர்' எங்களைப்போல ஆவுமா? வீட்டைவிட்டுப் போகணு மின்னுலே ரெண்டு ரூபா தச்சணை. அப்பாலே மோட்டாரு பீசு. வியாதி கண்டுபிடிக்க அஞ்சு, பத்து. மருந்து வேறே செலவு. அப்படி இப்படி நேத்தே இருபது முப்பது வேட்டு ஆயிருக்கும்.

தங்: ரூவாயென்ன, ரூவாயென்ன? குளந்தையை நீங்கதான் தெய்வமா நின்னு காப்பாத்தினீங்க.

வைத்: இந்த மாந்த இளுப்பு இருக்கே இது கெட்ட பய விசாதி. காலங்காத்தாலே ஒரு பொட்டலத்தைத் தேனுலே குளப்பிக் கொடுக்கச் சொன்னேனே.

தங்: கொடுத்தேன். இனிமே வராம நீங்கதான்...

வைத்: என்னமா, நம்ம கையிலேயா இருக்கு உசிர். என்னமோ விசாதியைப் பிடிக்கலாம்; உசிரைப் பிடிக்கலாமா? மருந்து நல்ல மருந்து. ஒரு தைலம் இருக்குது. நாப்பத்தி யெட்டு பச்சிலெ — அது இங்கே ஏது, மலைப் பச்சிலை.

தங்: மலையிலே கிடைக்குமா? இவுக 'பீட், பீட்'ன்னு போவாக, மலைக்குப் போக.

வைத்: இவுக மலைக்குப்போனு என்னு தெரியும்? இப்பிடியும் அப்பிடியும் கையைத்தூக்கினு பச்சிலை இவுரு கையிக்கு அடியிலே போவுமா!—அதுக்கு நம்ம ஆள் இருக்கான். கடைச்சாமான் வேறே. எல்லாம் வேக வைச்சு சமூகச் சரக்கா பலசரக்கும் சேத்து புடம் போட்டு......

தங்: எம் புள்ளையை காப்பாத்தணும். உங்கள் புள்ளையா நினைச்சு மருந்து கொடுக்கணும். உண்டான செலவைத் தாரேன்.

வைத்: அட, என்ன செலவு? ஆனவிலை குதிரை விலையா ஆகும்? இதே தைலம் நம்ம சப்புன்ஸ்பட்டர் வூட்டுக்கு...

தங் : ஆமா.

வைத் : செய்து அவுக புள்ளேக்கும் கொடுக்கப் போறேன். மருந்துச் செலவுக்கு ஒரு பத்து ரூவா கொடுத்தாக. பாக்கி அப்பாலே.

தங் : நாங்க எங்கே போறது! அவ்வளபணம் ஏது?

வைத் : விரலுக்குத் தக்கன வீக்கம். மொத்தமா ஒரு அஞ்சு கொடுங்க.

தங் : மூணு ரூவா வாங்கிக்கிட்டு வைத்தியரய்யா, புள்ளேயைக் காப்பாத்தணும். இருக்கும்புள்ளே.

["அய்யோவ். அய்யோவ்...போலீஸ் ஐயா இருக்காங்களா, அம்மாய்" என்கிறுர் செட்டியார்.]

வைத் : யாரோ கூப்பிடருங்க. (எட்டிப்பார்த்து) அட வேலுச்செட்டியாரா?

தங் : செட்டியாரா? அவுக போன்வங்க வாலேயே.

செட்டியார் : வாலேயா? ஏம்மா கொஞ்சநஞ்சம் நிசம் பேசம்மா. எதிரு லேன்லே எண்ண ஊத்தினப்பரம் உள்ளே வந்தாரு. பாத்தேன். இந்த சால்சாப்பு, குரவி வித்தை யெல்லாம் இங்கே வெய்யாதே.

தங் : அட எழவே. ஏனய்யா கத்துரீர்?

செட்டி : எங்கருமம். உச்சி வெயில்லே, உச்சி தேய என்ணெ ஊத்திப்போட்டு கத்தணும். எப்பம் விட்டுடாதீங்க பணத்தை.

வைத் : போவுது.

செட்டி : போவுதா? லெச்சணந்தான். நானும் ஆறு மாசமா ஒண்ணரை ரூவாய்க்கு நடயா நடந்து காவடி எடுக்கேன்.

வைத் : (மெதுவாக எச்சரிக்கை) இந்தாரும், வேலுச் செட்டியாரே. என்ன இருந்தாலும் போலீஸ் பாருங்க...

செட்: என்னய்யா போளீஷ்? போளீஷைப் பாக்கலே போளீஷை. காசை எறியட்டும். மானம், மரியாதை, சூடு, சொரணை இருந்தா நீங்க இங்க வருவீங்களா?

தங்: ஏனய்யா வைத்யர் மேலே பாயறே?

செட்: வாணியனுக்குக் கொடுக்கிறதைக் கொடுத்திருந்தா, வைத்யரு ஏன் வருவாங்க? காசை வச்சிட்டு மறு காரியம் பாரம்மா.

[போலீசுக்குக் கோபம் தாங்காமல் பின்கட்டிலிருந்து வந்து]

நம்: என்னவே, செட்டியார், துள்ளுறீர்? என்ன காறுவாறு?

செட்: மொட்டினு பயப்படுவனு! வாங்கின காசைக் கீழே வை...

நம்: இல்லேன்னு சொல்லலே. தூ. உங் காசை வந்து வாங்கிட்டுப் போ.

செட்: ஈரொட்டுப் பேச்சு வாண்டாம். இழுக்கடியா தீங்க.

தங்: இப்படி வாங்க (குசுகுசு வென) பணம் இருந்தா செட்டியாருக்கிட்ட கொடுக்காதீக. வைத்தியரு, நேத்துக் கூப்பிட்ட உடனே வந்தாரு, அதை நினையுங்க.

நம்: என்ன உளர்றே. எங்கிட்டே பணம் எங்கே இருக்கு?

தங்: வெக்கம் மானம் இல்லே. (குரல் உயர்கிறது) போலீசாம் போலீசு. அக்கம் பக்கம் குடித்தனம் பண்ணலையா?

நம்: இந்தா. பேசாதே. இருக்கது ஒரு ரூபா தான்.

தங்: (மௌனம்)...

[செட்டியார் "வாய்யா ஐயோவ்" எனக் கத்துகிறான்.]

வைத்: செட்டியார்வாள் இப்படி கோபப் படக் கூடாது. டாவம்...

செட் : சரிதானய்யா, அவங்க அவங்க கஷ்டம் அவுங்களுக்கு அய்யா, நின்னு நின்னு காலே வேர் ணனிப்போச்சு.

வைத் : வரட்டும் வரட்டும், நானும் போகணும்.

தங் : (மெதுவாக) கொண்டாங்க, அந்த ஒரு ரூபாயை. விடியக் காலமே குழந்தைக்குக் கஞ்சி காச்ச விறகு இல்லாமே, 78-ஆம் நம்பர் வீட்டு அக்கா கிட்டே ரெண்டு விறகு வாங்கியாந்தேன்.

நம் : அது சரி, தங்கம். வைத்தியனேயும் வாணியனே யும் போகச் சொல்லு. தட்டு முட்டுச் சாமான், பார்லி அரிசி வாங்க இது இருக்கட்டும்.

தங் : வைத்தியரைச் சும்மா அனுப்பலாமோ?

நம் : (வெளிப் பக்கம் உரத்த குரலில்) செட்டி யாரே, இந்த மாசம் சம்பளம் வந்ததும் தந்திடறேன். கொஞ்சம் தயவு செய்யுங்க. புண்ணியம் உண்டு.

செட். என்னேக் குளிப்பாட்டாதீங்க. நாந்தான் ஓங்களுக்கு எண்ணெ கொடுத்தவன். பணத்தைக் கொடுங்க, புண்ணியம் உண்டு.

வைத் : முதத் தேதி வந்து வாங்கிக்கிடுமே. சரி போரம்.

நம் : கையிலே இல்லேய்யா.

செட் : ஒண்ணரை வேண்டாம். ஒரு ரூபாயைப் போட்டுத் தொலேயுங்க.

தங் : எங்களுக்கு ஒன்னும் தானம் வேண்டாம்.

செட் : தானம். ஏம்மா வீணு தொண்டத் தண் ணியை வாங்குறீங்க. காசைக் கீழே வையுங்க.

[ஹெட் ஐயா, கம்பீரமாகச் சுருட்டு புகையோடு, வாதா மரத்தடியில் வருகிருர். 'பை—நாட்—த்ரி.' 'பை—நாட்—த்ரி' என்று குரல் கொடுப்பதோடு புலி வர்ண முள்ள பிரம்பை சுற்றுகிருர். ]

நம்: (சல்யூட் போட்டு) வாணும் எட்டையா, வாணும்.

செட்: (பயந்து) எட் ட—ய்—யா— ச—லா—ம்,

ஹெட் ஐயா: என்ன, பை—ஞட்—த்ரி. என்ன வேலுச் செட்டியார் இங்கே?

நம்: ஒன்னுமில்லே கொஞ்சம் பாக்கி கொடுக்கணும்.

ஹெட்: (அதிகார கம்பீரம்) கொடுக்கிறதைக் கொடுத்தாப் போருன். எய், செட்டியாரே......

[சிரிப்பு]

செட்: சாமி......ஈ......எசமான்.

ஹெட்: போயிட்டு நாளைக்கு வாரும். உம், போகலாம்.

செட்: செய்யறேன், எசமான்.

வைத்: எட்டய்யா, வரணும் வரணும்.

ஹெட்: ஏது? வைத்தியரய்யா இங்கே.

நம்: நம்ம குழந்தைக்கு மாந்த இழுப்பு. அதுக்கு வைத்தியம் செய்ய வந்திருக்கார்.

[செட்டியார் நகருகிறார்.]

வைத்: என்ன, எட் ஐயா! உங்களைக் கண்டு இப்படி ஓட்டப்பந்தயம் வைக்காரு செட்டியாரு.

ஹெட்: ஒரு சமயம் இந்தச் செட்டியார், பிரப்பம் பழம்......

வைத்: நம்ப வாகட சாஸ்திரத்திலே இந்தப் பிரப்பம் பழம் வரலேயே.

நம்: (அசட்டுச் சிரிப்பு) பிரப்பம் பழம் என்ருல் அடி, உதை, ஹிம்சை.

ஹெட் : ஒரு திருட்டுக் கேஸிலே அகப்பட்டு, முதுகுத் தோலியை உரிச்சு......

வைத் : (கேலி தொனிக்கும் குரலில்) தோலி உரிக்க வும் தெரியுமா, எட் ஐயாவுக்கு ?

ஹெட் : தெரியுமா தெரியாதான்னு காட்டட்டுமா? (விளையாட்டாக பிரம்பைச் சுழற்ற அது 'ஒய்' என்று சப்திக்கிறது) என்ன வைத்தியரே?

வைத : வேண்டாம், எட் ஐயா.

ஹெட் : அந்தத் திருட்டுக் கேஸிலே அகப்பட்ட தாலே வாங்கின அடி இருக்கே, இந்தச் செட்டியாருக்கு ஏழு ஜென்மத்துக்குப் போதும்.

நம் : நாலு குடம் எண்ணெய் போட்டாலும் தாங் கும், ஆமா! (ஹெட்டைப் பார்த்து) ஏது இங்கே வந்தது ? தாகத்துக்குத் தண்ணிவேணுமா ? (உரத்து) ஏய் தங்கம்!

வைத் : அம்மா, ஐயா கூப்பிடருங்க.

ஹெட் : தண்ணி வேண்டாம். இப்பதான் குருக் களையா கிளப்பிலே காபி சாப்பிட்டேன்.

நம் : உள்ளே வாங்க...

ஹெட் : ஆமா, தொப்பி எங்கே ? செருப்பு எங்கே ?

நம் : 'பீட்' முடிஞ்சு வந்தேன் இப்போ. ஏது ? என்ன ?

ஹெட் : இப்படி வாரும், பை—ஞட்—திரி.

[வாதாமரம் பாக்கம் போகிறார். வைத்தியரும், கதவு நிலையில் நின்றபடியே தங்கமும் கண்காணிக் கின்றனர்.]

நம் : (போய்க்கொண்டே) வைத்தியர்வாள், கொஞ் சம் இருங்க.

வைத் : இருக்கேன், மெதுவா வாங்க. அம்மா தைலத்துக்கு மூணுரூபா தராச் சொன்னுங்க.

நம்: வந்து பேசிக்கிடலாம்.

ஹெட்: அட வாரும், பை—னட்—த்ரி.

நம்: வந்திட்டேன். (பின்னல் ஓடுகிறார்)...

தங்: இந்தாங்க. வைத்தியர் ஐயாவைக் காக்க வைக்காதீங்க, உங்களைத்தானே!

நம்: வர்றேன். வர்றேன்.

[திரும்பிப் பார்த்தபடியே போகிறார்.]

வைத்: ஐயாவுக்குச் சொல்லணுமா? வூட்டிலே அரிசியில்லே. உங்ககிட்டே கேட்டு ஒரு ரூபாயாச்சும் வாங்கிப்போவலா மின்னு வந்தேன்.

தங்: இருங்க, இருங்க. (மெதுவாக) சனி மாதிரி இப்பவா வரணும், ஏட் ஐயா.

நம்: (தூரத்தில் போய்த் திரும்பியபடி) சத்தியமா கையிலே பணம் இல்லே. நாளைக்கு வாங்க, பணம் தர்றேன். வைத்தியரய்யா, நாளை விடியனே வாங்க.

ஹெட்: (கோபமாக) அட வாருமய்யா. பை-னட்-த்ரி. 'வழ வழ'ன்னு என்ன பேச்சு வேண்டிக் கிடக்கு?

வைத்: எனக்கு என்ன சொல்லுறீங்க? வீசின கையும் வெறுங் கையுமா போக வேண்டியதுதானு, எம்மா?

தங்: என்ன செய்யறது! கையிலே பணம் இல்லை இன்னைக. விகர்ப்பமா நெனைக்கக் கூடாது...

[வைத்தியர் போகிறார்.]

ஹெட்: பை—னட்—த்ரி, இப்படி வாங்க. விஷயம் தெரியுமில்லே, இப்பதான் போனிலே சொன்னங்க. சி ஐ. (சர்க்கிள் இன்ஸ்பெக்டர்) மாத்திப் போரானம்.

நம்: ஆமா அதுக்கு...பாரேட் வரணுமா?...

ஹெட்: என்ன நங்க மிங்கே! டீபார்ட்டிக்கு உம்ம பணம் எவ்வளவு?

நம் : நானு ? நக்கல் வேண்டாம், எட் ஐயா, ஏழை பாழை.

ஹெட் : கேலி இல்லே. நூறு, இரு நூறு ?...

நம் : நிசந்தானு ? சி.ஐ. போரானு ? இந்தாங்க...

[கையில் கொடுக்கிறார்.]

ஹெட் : ஒண்ணு ? 503 ரூ ஒண்ணு (எழுதிக்கொள் கிறார்) வரட்டுமா ?

நம் : (சல்யூட் அடித்து) போங்க. (மனசிற்குள்) நல்ல வேளை மானம் கப்பல் ஏரும், இதுவாவது இருந்ததே.

[வீட்டுக்கு வருகிறான்.]

தங் : அந்த எட்டய்யா எங்கே வந்தாராம்.

நம் : சும்மாத்தான். வைத்தியர் எங்கே ?

தங் : அந்த ரூபாயைக் கொடுங்க...வைத்தியர் ஐயா கோவமாப் போயிட்டார்......

நம் : இல்லேயே பணம்.

தங் : உப்புப் புளி வாங்கணும். (குழந்தை அழுகி றது. ஓடிப்போய்ப் பார்த்து) அய்யய்யோ, குழந்தை மருள மருள விழிக்குதே, போங்க...வைத்தியரைக் கூப்புடுங்க... இழுப்பு வந்திட்டதே, மறுபடியும்.

நம் : என்ன...என்ன ? பணம் இல்லாம வைத்தியர் வருவாரா ?

தங்: பணத்தைப் பிசாசா முழுங்கிச்சு...இருந்துதே, எங்கே போச்சாம் ?

நம் : எங்க போகணுமோ, அங்கே போச்சு......

தங் : என் குழந்தைக்கு ஒதவாம அவருக்குக் கடன் கொடுத்தீகளா ?

நம் : கடனில்லே. டீபார்ட்டி...

*தங்:* டீபார்ட்டிக்குப் பணம் இருக்கு. நாசமாப் போக, ஆண்டவனுக்கு அடுக்குமா? மானத்துக்கும் திட்டுக்கும் பயந்து அந்தச் செட்டியாருக்கும் கொடுக்காம இருந்ததா? அட கடவுளே, வைத்தியர் வருவாரா? இழுப்பு குழந்தைக்கு வந்திட்டதே......

*நம்:* உம், சத்தம் போடாதே!

*தங்:* எம்புள்ளே சாகட்டும், துடிக்கட்டும். நம்ம வயித்துக்கு இல்லாம, பார்லி அரிசிக்கு வக்கு இல்லாம தவியாத் தவிக்குது. டீ யாம், பார்ட்டியாம்......

[தொல்லைக்கும் ஏச்சுக்கும் பயந்து தொப்பியை மாட்டிக்கொண்டு, அப்படியே கிளம்புகிறார் நம்பர் 503.]

வீடே சிரிப்பாய்ச் சிரிக்குது......ஐயோ, அம்மா, குழந்தை இப்படி முழிக்குதே......இந்தாங்க...தெய்வமே.

[503 போயே விடுகிறார்.]

*

# பரிசு

ய. லக்ஷ்மிநாராயணன்

மாலை இள வெய்யிலின் மஞ்சள் நிற ஒளி மங்கி மறைந்து விட்டது. வான மண்டலம் கலங்கி, இருண்ட மேகத் திரைகளால் மூடுண்டு, உலகு முழுவதையும் போர்வை யிட்டது போலக் கவிந்து கொண்டது. அந்தக் கிராமம் கொஞ்சங் கொஞ்சமாக இரவின் இருளுக்கு இரையாகி யது. எங்கோ தொலைவில் இரண்டொரு நாய்கள் குரைத்த சத்தத்தைத் தவிர வேறு சந்தடி யின்றி அந்த ஆதம்பட்டிக் கிராமம் அமைதியாக இருந்தது. கிரா மத்தினர் யாவரும் மந்திரத்தால் கட்டுண்டவர்கள் போலக் 'கப்சிப்'பென்று அடங்கித் தங்கள் வீடுகளுக்குள்ளேயே அடைந்து கிடந்தனர்.

அப்படி அவர்கள் 'அடைந்து'கிடந்ததற்குக் காரணம் இல்லாமல் இல்லை. அன்று மட்டும் அல்ல; கடந்த மூன்று நான்கு தினங்களாகவே அந்தப் பிராந்தியங்களில் உள்ள அத்தனைபேரும் 'கப்சிப்' பென்று இருந்ததற்குக் காரணம், அங்கெல்லாம் போலீஸார் கூட்டங் கூட்ட மாகச் சுற்றிக் கொண்டிருந்ததே யாகும். போலீஸாரின் கடுமையான கெடுபிடிகளுக்குமுன் கிராம வாசிகள் அடங்கிக் கிடக் காமல் இருக்க முடியுமா? தவிரவும் அன்றைப் பகலில் தண்டோரா மூலம், போலீஸார் மிக்க சிரமத்துடன் தேடி வரும் 'அந்த' நபரின் அங்க அடையாளங்களைத் தெரிவித்து அவன் அந்தப் பிராந்தியத்தில் எங்கோதான் ஒளிந்து கொண்டிருக்கிறான் என்றும், அவனை ஒளித்து வைத்திருப் பவர்களுக்குக் கடுமையான தண்டனை கிடைக்கு மென் றும், அல்லாமல் பிடித்துத் தருவோருக்கு ஆயிர ரூபாய் பரிசு கொடுக்கப்படும் என்றும் கிராமத்தினருக்கு அறிவிக் கப்பட் டிருந்தது. தாங்கள் பத்திரமாயிருந்தாலே போதும் என்று எண்ணித்தான் கிராமத்தில் உள்ளவர்கள் அவ் விதம் அடங்கிக் கிடந்தனர். ஒரு வாரத்திற்கு முன்னர் அந்தப் பிராந்தியத்தில் பிரமாதமான ஒரு கலகம் உண்

டாயிற்று. சர்க்காருக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்ட சிலரால், சர்க்காருக்கு ஏராளமான நஷ்டம். கார்கள், போலீஸ் ஸ்டேஷன்கள் எல்லாம் நாசமாயின. அப்படி யெல்லாம் நடத்துவதற்குக் காரணமா யிருந்தவர்கள் போலீஸாரால் பிடிக்கப்பட்டு விட்டனர் ஆயினும், அவர்களின் தலைவன் அகப்படவில்லை. ஆகையினால்தான் அவனைப் பிடித்துத் தருவோருக்குப் பரிசளிக்கச் சர்க்கார் தீர்மானித்தனர். ஆனால் ஜனங்கள் பரிசைவிடத் தங்கள் உயிரையே பெரிதாகக் கருதினர்.

உள்ளூர் மாரியம்மன் கோயில் பூசாரி கந்தன் பயங்கொள்ளி; இருந்தாலும் அம்மனுக்குப் பூசை செய்யாமல் இருக்க விருப்பமில்லை. "என்னதான் நடந்து விடும், பார்க்கலாமே" என்று துணிச்சலுடன் கோயிலுக்குப் புறப்பட்டு விட்டான் அவன். அப்படி அவன் கோயிலுக்குப் போய்க்கொண் டிருக்கும்போது, அவன் மனத்தில் விதவிதமான எண்ணங்கள் தோன்றி ஒன்றோடு ஒன்று மோதிப் போராடின.

'அந்த நபரைப் பிடித்துக் கொடுத்தால் ஆயிர ரூபாய் பரிசாம்!' திரும்பத் திரும்ப அவன் மனத் திரையில் இந்த 'ஆயிரம் ரூபாய்' நர்த்தனமாடியது.

'ஆயிரம் ரூபாய்ன்னா சும்மாவா? நம்ம தலை முறை பூராவும் உழைச்சாலும் முழுசா நூறு ரூபாயைக் காணலியே!'

பூசாரிக்குக் கோயில் மானியம் உண்டு. ஏதோ அதிகச் சிரமம் இன்றிப் பிழைக்க அது போதும். ஆனாலும் அவனை ஆசை விடவில்லை. "பிள்ளை குட்டி, நாலுக்கு நாலு பேரைப் போல் கண்ணியமாய் ஒரு வீடு வாசல், நிலபுலம் எல்லாம் வேண்டாமா? அப்படி இருந்தாத்தானே மதிப்பு? பாவம், போலீஸ் காரனுவதான் என்ன செய்வானுக? ராவா பகலா நாலஞ்சு நாளாத் தேடித் தேடிப் பாக்கிறானுங்க. அந்தப் பய மவன் அம்புடல்லியே?"

மீண்டும் 'ஆயிரம் ரூபாய்' நினைவு. "நமக்கென்னா வந்திடிச்சு, ஆளு என்னமோ இங்கேதான் சுத்திக்கிட்டிருப்

பான்னு தோணுறது. ரயிலைக் கவுக்கறதாம்; தந்தியை அறுக்கறதாம்! அந்தப் பயங்களுக்கு எம்மாந் திமிரு? அவனைப் புடிச்சுக் கொடுத்தா யாருக் கென்ன? முந்தா நேத்திக் கூடத் தெக்காலே வைரவன் கோயிலு கிட்டே பாத்தேனே. த்சு! த்சு! என்னமோ எமாந் துட்டேன், பைத்தாரன் நான்!'' என்று முணுமுணுத் துக் கொண்டே சுற்று முற்றும் பார்த்தபடி கோயிலுக் குள் நுழைந்தான். அவசரம் அவசரமாக ஒரு விளக்கை ஏற்றிவிட்டு அம்மனுக்கு அலங்காரத்தை ஆரம்பித்தான்.

'என்னமோ அம்மன் கிருபை வச்சா எதுதான் ஆகாது. அந்த ஆளை கண்டு பிடிச்சுப் போலீஸாரு கிட்ட உட்டுப் பணம் சம்பாதிச்சா, ஆமாம், அம்மா மனசு வச்சா ஆகாதா?'

ஒருவர் கூட அம்மன் தரிசனத்துக்கு வர வில்லை. ஏதோ யந்திரம் மாதிரி பூசை செய்துவிட்டுக் கிளம்பி ஞன்.

தொலைவிலே 'மோட்டார் ஹார்ன்' சப்தம். அவன் மனம் 'திக் திக்' கென்று அடித்துக் கொண்டது. அது போலீஸ்காரர்கள் வண்டி! கதவைச் சாத்திப் பூட்டிக் கொண்டு தப தப வென்று படி யிறங்கினவன் சமீபத்தில் உண்டான சர சர வென்ற சப்தம் கேட்டு மலைத்து நின்ருன்.

கொஞ்சத் தூரத்தில் இருந்த ஒதிய மரத்தடியில் ஓர் உருவம் குனிந்து நின்றதைப் பார்த்ததும் அவன் உடலும் உள்ளமும் பதறின. பல் வரிசை கிட்டிக் கொண்டது, பயத்தால்!

அந்த உருவம் நொண்டி நொண்டி அவனை நோக்கி வேகமாக வந்தது. பூசாரி கந்தன் வெறிக்கப் பார்த்தான். அவன் முகத்திலே உண்டான களையை இன்ன தென்றே விவரிக்க முடியாது. ஏனெனில் அந்த உருவந்தான் 'ஆயிர ரூபாய் ஆசாமி!'

கந்தன் உடல் வெட வெடத்து, அவனை நகர வொட்டா மல் செய்தது. இரைந்து சத்தம் போட வேண்டுமென்ற

ஆவல். ஆனுல் இயல வில்லை. என்ருலும் மனத்துள்ளே ஆசை குடைந்தது. 'கொஞ்ச தூரத்திலே போலீஸார் வருகின்றனர். இவனோ அவர்களை ஏமாற்றிவிட்டு இங்கு வந்துவிட்டான். இப்போது பிடித்துக் கொடுத்துவிட்டால், ஒரு நொடியில் ஆயிர ரூபாய் அடித்து விடலாம். இப்போது இவன் இங்கு ஓடி வந்தது நம்முடைய நல்ல காலத்துக்குத்தான். தானுக வரும் சீதேவியைப் போல இவனும்...ஆனுல் இவன்...'

அந்த ஆள் குனிந்து நின்றபடியே காலைத் துடைத்துக் கொண்டான். கந்தன் உற்றுப் பார்த்தான். அவன் காலில் ரத்தம்! என்ன தோன்றிற்ருே என்னவோ, கந்தன் அவன் அருகில் செல்ல இரண்டோர் அடி முன் வந்தான்.

போலீசாரின் கார் ஆற்றங்கரைப் பாலத்தடியில் நிறுத்தப் பட்டது. அதிலிருந்து தட தடவென்று இறங்கும் போலீஸாரைக் கந்தன் கண்கள் பார்த்துவிட்டன.

'அவர்கள் இங்குதான் வருகிருர்கள் போலும்!'

அந்த 'ஆள்' நிமிர்ந்து பின்புறம் பார்த்துவிட்டு, முன்னுல் இருந்த கந்தனையும் பார்த்தான். அவனுடைய அந்தப் பார்வை கந்தன் 'ஆசை'யைப் போக்கி மனத்தை மாற்றி விட்டதோ?

கந்தன், "யாரு?" என்று குழறிய குரலில் கேட்டுக் கொண்டே இன்னுங் கொஞ்சம் முன் வந்தான். அந்த ஆள் நின்ற இடத்தில் நீர் சிதறியதுபோல் ரத்தம் பரவிக் கிடந்தது. அவனுடைய துணிமணிகூட ஒரே ரத்தக் கறையாயிருந்தது.

"என்னைப் போலீஸாரிடம் காட்டிக் கொடுத்தால் ஆயிரம் ரூபாய் உனக்குக் கிடைக்கும்."

கந்தன் இதயத்திலேயே அந்த வார்த்தை சுருக்கென்று பாய்ந்து குத்தியது; அவன் ஆசைக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தது. அவன் மனக் கிளர்ச்சி வேகத்திலே எத்தனையோ நினைவு அலைகள்...

'முந்தாநாள் அவன் ஜெயிலில் இருந்து தப்பி விட்டபோது போலீஸார் துரத்தினர். ஒரு டாக்டரிடம் அகப்பட்டுக் கொண்டான். ஆனல் போலீஸாரிடம் அவனைக் காட்டிக் கொடுக்க முடியாதென்று அந்த டாக்டர் மறுத்து விட்டாராம். ஊர் முழுதும் அந்த டாக்டரைப் புண்ணியவான் என்று கொண்டாடுகிறது. நேத்துக் கூட நம்ம பெரிய வாத்தியாரு அவனைக் காட்டிக் கொடுக்க முடியாதுன்னு சொல்லித்தானே ஜெயிலுக்குப் போனரு. ஏன்? சிறுதூர் பெரிய பண்ணை மவன் படத்தை பேப்பர்லேல்லாம் போட்டுருக்காங்களே, இவனைப் போலீஸாரு கிட்ட அகப்படாமே காப்பாத்தினர்னு; ஆன அவரும் ஜெயிலுக்குப் போயிட்டாரு. போனலும் என்ன? எவ்வளவு பேரு! இன்னும் எத்தினியோ பேருங்கள்ளாம் காட்டிக் கொடுக்க முடியாது, ஆயிரம் ரூபாயும் வாணும்னுட்டாங்க. எனக்கு மட்டும் என்ன? சட்! என்ன பேராசை வேண்டிக் கெடக்குது?' என்று தனக்குத்தானே எண்ணி, முணுமுணுத்து, தீர்மானித்துக் கொண்டு, அவன் அருகில் நெருங்கினன்.

அந்த ஆள் அவன் மீது வைத்த கண்ணை வாங்காது பார்த்தபடியே நின்ருன்.

கந்தன் கிடுகிடென்று அவன் அருகில் சென்று, ஒரு கை கொடுத்து அவனை மூட்டைபோல் தூக்கிக் கொண்டு கோயில் பின்புறத்துக்கு ஓடினன்.

போலீஸார் கோயிலை நெருங்கி விட்டனர்.

"இதற்குள் அவன் இங்கு வந்திருக்க முடியுமா?"

"ஏன் சார் முடியாது? நாம்ப ரஸ்தா வழியே வந்தோம். அவன் குறுக்கே ஓடி வந்தானே, சார்."

"சரி. சத்தம் செய்யாமே போங்கோ, எல்லாரும்."

'டார்ச்சு லைட்'டை நாலுதிசையிலும் சுழற்றிக் காட்டிக்கொண்டே முன்னல் இருக்கும் கோயிலை நோக்கி வந்தனர். தரையில் ரத்தச் சொட்டுகள் இருப்பதைக் கண்டு கவனமாகப் பார்த்தனர். "சார், அவன் இப்படித்

தான் வந்திருக்கவேண்டும். இதோ ரத்தச் சொட்டுகள், பாருங்கள் சார்.''

'ஆள்' நின்ற ஒதிய மரத்தடிக்கு அருகில் வந்ததும் ரத்தம் நிறையச் சிதறியிருப்பதைப் பார்த்து எல்லோரும் ஆராய்ச்சியில் இறங்கினர். போலீஸ் தலைவர் இதுவரை தன்னுடன் சம்பாஷித்த ஆளுடன் கோவில்படிமீது ஏறினார். உள்ளே கந்தன் இருந்தான். அவன் இதயம் 'பக்பக்' கென்று அடித்துக்கொண்டிருந்தாலும் மேற்கொண்டு என்னசெய்ய வேண்டுமென்பதை ஆராய்ச்சியும் செய்தது.

'ஓடிவந்தவன் காலில் ரத்தக் காயம். போலீஸார் ரத்தத் துளிகளைப் பார்த்திருப்பார்கள். ஆகவே அந்த அடையாளத்தைக் கொண்டு, அவனைக் கண்டுபிடித்து...' சட்டென்று கோவில் அரிவாளை எடுத்துத் தன் கால் ஆடுசதையில் பல்லைக் கடித்துக் கீறிக்கொண்டான். அவனுக்கே ரத்தவெள்ளத்தைக் காணப் பயமாய் இருந்தது. நொண்டி நொண்டி வெளியே வந்தான். எங்கிருந்துதான் துணிவு வந்ததோ? அவன் கையில் எண்ணெய்த் துணி ஒன்றும் இருந்தது.

''அப்பாடி...அப்பப்பா'' என்று ஹீனஸ்வரத்தில் முணுமுணுத்துக்கொண்டே வாசலுக்கு வந்துவிட்டான். தன்னைப் போலீஸார் பார்க்கும் பார்வையைக் கண்டு அவன் அவ்வளவாகக் கலங்கி விடவில்லை!

''டேய்! பூசாரி, இங்கே ஒருத்தன் ஓடிவந்தானே, எங்கேடா அவன்?''

''ஐயோ, வலி தாங்கலியே! நான் யாரையும் பாக்கலிங்களே.'' போலீஸார்கூட வந்த ஆள், ''என்னண்ணே உண்மையைச் சொல்லு, அண்ணே! எனக்குக் கெடைக்கறத்துலே பாதிகெடைக்குமில்லே?'' என்று ஆசை காட்டினான். பூசாரி காயத்தைக் கட்டிக்கொண்டே நிமிர்ந்து பார்த்தான். அந்தக் காட்டிக்கொடுக்கும் பேர்வழி அந்தப் பார்வையைக் கண்டு நடுங்கினான். கந்தன் கால் வலி வேதனையுடன் மனவலியும் அதிகம் அடைந்தவனாய், படிக்கட்டில் உட்கார்ந்தான்.

போலீஸ் தலைவருக்குக் கோபம் உண்டாகிவிட்டது. "டேய், இங்கே வந்தவன் எங்கேடா போயிட்டான்? உன் காலில் என் காயம்? இங்கெல்லாம் ஏன் ரத்தமாயிருக்கிறது?" என்று ஆத்திரத்துடன் கேட்டுவிட்டு, மற்றப் போலீஸாரைச் சுற்றிலும் சோதனை போடும்படி உத்தரவு இட்டார். கந்தன் முக்கி முனகிக்கொண்டு, "இந்த அரிவாள் காலிலே உளுந்து வெட்டிடிச்சிங்க. எல்லாம் அந்த ஒதிய மரத்தாலேதான். வேரிலே தடுக்கி உளுந்தேன். இடுப்பிலே இருந்த அரிவாளு நழுவிடிச்சுங்க. நீங்க அங்கே பாத்திருக்கலாங்களே?" என்று எதுவுமே தெரியாத பரமார்த்தியைப்போல் 'கதை' அளந்தான்.

போலீஸ் அதிகாரி தன்கூட வந்த ஆளை உற்றுப் பார்த்தார். அவனோ தனக்கு ஆயிரரூபாய் கிடைக்காமல் போய்விடுமோ என்ற பயமும் பீதியுங் கொண்டவனாக, கந்தன் சொன்னதை நம்பாதவன்போல், "அரிவா வெட்டியா இம்மாம் ரத்தம் வடியும்?" என்று சந்தேகத் தொனியில் கேட்டான்.

"அட எனக்கேம்பா பொய் சொல்லணும், இதோ பாரு அரிவாளே" என்று அவன் முகத்துக்கு நேராகத் தூக்கினதும் அவன் "ஐயோ!" என்று அலறிக்கொண்டே பின்னால் நகர்ந்தான்.

போலீஸ் அதிகாரிக்குக் கந்தன்மீது உண்டான சந்தேகம் குறைந்துவிட்டது. தன்கூட வந்தவனை முறைப்புடன் பார்த்துவிட்டு, கோவிலுக்குள் தம் நோட்டத்தைச் செலுத்தினார்.

"வாங்க, செருப்பைக் கழட்டி வச்சிட்டு உள்ளே வந்து துண்ணூறு வாங்கிக்கிங்க" என்று மெதுவாக எழுந்தான் கந்தன். போலீஸ் அதிகாரி, 'அதெல்லாம் வாணும்பா' என்று கூறிவிட்டுப் படியிலிருந்து இறங்கினார். அங்கும் இங்கும் தேடிய போலீஸாரும் திரும்பிவிட்டனர். காட்டிக்கொடுக்க வந்தவனின் முகம் ஏதோ பறி கொடுத்தவனைப்போல இருந்தது.

"கொஞ்சம் பொறுத்துப் பாக்கலாம், சார். இங்கே வந்தவன் எங்கே சார் போயிடுவான்?" என்று அவன்

திரும்பவும் சொன்னபோது போலீஸாரில் சிலர் அதை ஆமோதித்தனர்.

கந்தன் திகைத்துவிட்டான். 'இத்துடன் அவர்கள் போய் விடுவார்கள்' என்று எண்ணி அவன் மனம் கொஞ்சம் நிம்மதி அடைந்திருந்த சமயத்தில் இப்படி அவர்கள் மாறியதைக் கண்டதும் வேதனையடைந்தான். 'அந்த ஆள் கொஞ்சம் யுக்தி உள்ளவனாய் இருந்தால் எல்லோரும் இங்கே கூடியிருக்கும் இச்சமயத்தைப் பயன்படுத்திக் கொண்டு தப்பி ஓடிவிடலாம்...ஆனால், அவன் கால்தான் நடமாடுவதற்கு முடியாதபடி காயப்பட்டிருக்கிறதே... த்சு! த்சு! ஐயோ பாவமே! நாம்தான் ஆயிர ரூபாய்க்கு ஆசைப்படாமல் அவனைத் தப்புவித்துவிடலாம என்று பார்த்தால் இந்தக் காட்டிக்கொடுக்கிற பாவி வந்து......' என்று எண்ணிக் குமுறினான் கந்தன். அவனுடைய மனத்துள்ளே பிரமாதமான போராட்டம் நடந்தது. அவர்களோ மீண்டும் சுற்றிச் சுற்றித் தேட ஆரம்பித்து விட்டனர். நேரம் ஆக ஆக அவன் மனக்கலக்கம் அதிகரித்தது. சுமார் ஒரு மணி நேரம் தேடினர். ஆள் அகப்படவில்லை. போலீஸ்த் தலைவர், "முன்னமேயே சொன்னேனே; இவன் அப்படி மறைத்து வைக்கக்கூடிய சாமர்த்தியவான் அல்ல என்று, கேட்டீர்களா?" என்று கூறியபடி காரில் ஏறினார். மற்றவர்களும் ஏறிக்கொள்ளக் கார் போய்விட்டது.

கந்தன் பெருமூச்சுவிட்டு எழுந்தான். அவனுக்கு வேதனையுடன்கூட இப்போது ஆச்சரியமும் உண்டாயிற்று.

'நொண்டிக் காலுடன் அவன் எங்கு ஓடியிருப்பான்' என்று தன்னையே கேட்டுக்கொண்டான். அவனைத் தான் மறைத்த இடத்திற்குச் சென்று பார்த்தான். அங்கே காணோம். பக்கத்திலிருந்த பூவரசமரத்தில் சாய்ந்து கொண்டு 'எப்படிப் போயிருப்பான்?' என்று மீண்டும் யோசித்தான்.

மேலே ஏதோ அரவம் கேட்க நிமிர்ந்து பார்த்தான். அந்த 'ஆள்' அங்கே ஒரு கிளைமீது 'ஜம்' மென்று

உட்கார்ந்திருந்ததைக் கண்டதும், கந்தன் பிரமித்து விட்டான்.

"பூசாரி! எப்படியோ சிரமப்பட்டு மரத்தின் மீது ஏறிவிட்டேன். ஏனோ அவர்களுக்கு மரக் கிளையைப் பார்க்கத் தோன்றவில்லை! தவிரவும் நீ எனக்காக இவ்வளவு தூரம் சிரமப்பட்டதற்கு ஒரு நன்றிகூடத் தெரிவிக்காமல் நான் ஓடிவிடலாமா? போலீஸாரை ஏமாற்ற உன் காலில் காயமும் உண்டாக்கி, நீ செய்த காரியத்தால் என் சேவையை, தியாகத்தை யெல்லாம், மிஞ்சிய ஓர் அபார சேவையை, உன் தியாக சிந்தையைப் போற்றுகிறேன். தக்க சமயத்தில் உதவும் உன்னைப் போன்றவர்கள் மனிதரில் உத்தமர்கள். ஆயிர ரூபாய் கிடைப்பதை—"

"அது கடக்குதுங்க. பணம் இன்னிக்கு வரும், நாளைப் போகும். ஒங்கமாதிரி தேசபக்தருங்க கோடிலே ஒத்தர்தானே இருக்கமுடியுங்க!"

"அதேமாதிரி உன்னைப் போன்றவர்கள் இருப்பதும் அதிசயந்தான்."

"சரீங்க, நேரமாவுதுங்க. எவனாவது வந்துட்டா—"

"வந்துவிட்டால் கஷ்டம்தான். இன்னும் கொஞ்ச நேரத்தில் பொழுது விடிந்துவிடும். அதேமாதிரி, எனக்கும் ஒருநாள் விடியாமற் போகாது. அன்று உன்னை வந்து பகிரங்கமாகக் காண்பேன். என் இதய பூர்வமான அன்பையும் நன்றியறிதலையும் பகிரங்கமாக, நிதானமாகத் தெரிவித்தால்தான் என் மனம் இன்புறும்" என்று கூறிவிட்டு நொண்டினபடியே அங்கிருந்து புறப்பட்டுச் சென்றான் அவன்.

"அப்பாடி" என்று ஒரு பெருமூச்சு விட்டுவிட்டு, அவன் வெகுதூரம் செல்லும் வரை பார்த்தபடியே அந்த இடத்தை விட்டு அசையாமல் நெடுநேரம் உட்கார்ந்து கொண்டிருந்தான் பூசாரிக் கந்தன்.

*

# நோன்பு

கே. எஸ். ஜம்புநாதன்

"பார்வதி, எழுந்திரம்மா, என்ன ஜுரமா யிருந்தாலும் இந்த நோன்பை மாத்திரம் தட்டப்படாதுடீ" என்று அன்புடன் சொன்னாள் காமு மாமி.

"இல்லே மாமி, எங்காத்துலே பழக்கமில்லே. அதான்......"

"நன்னா யிருக்கடீ, எழுந்திருந்து மடியைக் கட்டிண்டு வந்து உட்காரு. நீங்கள்ளாம் படிச்சவா; அதான் சம்பிரதாயத்தைக் கூட உங்காத்திலே விட்டுட்டா போலிருக்கு" என்று அன்பாகக் கடிந்தாள் மாமி.

"எனக்குக் கூடத்தான்..."

"இதைப் பார். உன் சமாதானம் எனக்கு வேண்டாம். சுப-சௌக்கியமா, குடித்தனம் நடத்தற பெண்களுக்கு இது ஒரு பிரார்த்தனை நோன்பு. இது வேண்டாமா நோக்கு?"

'வேண்டாமா உனக்கு?' அவள் ஹிருதயத்திலும் எதிரொலி கேட்டது. ஆனால் வேண்டும் வேண்டாம் என்று சொல்லும் நிலையில் இல்லை அவள். மாமியின் வார்த்தையை அதற்குமேல் தட்ட முடியவில்லை அவளால். எழுந்து கை கால் அலம்பிப் புதுப் புடைவை கட்டிக்கொண்டு மாமியகத்துக் கூடத்தில் போய் உட்கார்ந்தாள்.

குத்துவிளக்கு ஏற்றி வைக்கப்பட் டிருந்தது. கீழே புஷ்பமும் அக்ஷதையும் மஞ்சளில் தோய்த்த சரடும் ஒரு தாம்பாளத்தில் இருந்தன. மற்றொரு தட்டில் கொஞ்சம் வெண்ணெய்யும் காரடையும் வைக்கப்பட் டிருந்தன. காமு மாமியும் இன்னும் சில பெண்களும் உட்கார்ந்து கொண்டு 'சதி சாவித்திரி'யின் கதையைப் பாடினார்கள்.

சுவரில் சாய்ந்தபடியே பார்வதி அதைக் கேட்டுக்கொண்டிருந்தாள். அவளுக்குச் சென்ற ஒரு மாசமாக மலேரியா. ஜுரம் விட்டதும் எழுந்து வீட்டு வேலைகளைச் செய்வாள். ஜுரம் வரும் தினம் படுத்து விடுவாள். அவள் புருஷன் தான் அன்று சுயம்பாகி. அவள் குழந்தை எச்சுமுதான் பரிசாரகம்.

அன்று பார்வதிக்கு ஜுரம் வரும் முறை. நோன்புக்கு உட்காரு மட்டும் ஜுரம் வரவில்லை. என்றாலும் நோன்பில் கலந்துகொள்ளும் தென்புமில்லை, விருப்புமில்லை அவளுக்கு. மாமியின் வற்புறுத்தல் தட்டாது வந்து உட்கார்ந்தாளே தவிர, மனம் எங்கெங்கோ சஞ்சரித்துக் கொண்டிருந்தது.

"அம்மன் மகத்துவத்தைக்
கேட்டுமனம் குளிர்ந்து
சாவித்திரி தேவியரைச்
சிந்தைபண்ணி யேதுதித்தாள்;
கற்றவரும் கேட்டவரும்
கற்றுக் கொடுத்தவரும்
சாவித்திரி யம்மனைப்போல்
சந்தோஷமா யிருப்பாள்;
மங்கிலியம் தான்பெருகும்
மைந்தர்களைப் பெற்றிடுவாள்
மஹா தேவி தன்கிருபையால்
வாழ்ந்திடுவாள் என்று சொன்னார்."

எங்கெங்கோ அலைந்து கொண்டிருந்த பார்வதியின் மனம் இந்த அடிகளைக் கேட்டதும் பூஜையின்பக்கம் திரும்பியது. அம்மனுக்கு ஆரத்தி, நைவேத்தியம் செய்து, "உருகாத வெண்ணெயும், ஓரடையும் நான் வைத்தேன், ஒருகாலும் கணவரை நான் பிரியாது இருக்க வேணும்" என்று பிரார்த்தித்தாள் காமு மாமி. அவளைப் பின்பற்றி எல்லோரும் வணங்கினார்கள். பார்வதியும் யந்திரம்போல அம்மனை வணங்கினாள். அவள் மனம் பாலிய நினைவுகளை எண்ண ஆரம்பித்தது.

ஆரத்தி எடுக்கும்போது அவளையறியாமலே உடம்பு நடுங்கிற்று. ஜுரவேகத்தால் ஏற்படும் நடுக்கம் அல்ல

என்பதைத் தெரிந்துகொண்டாள் அவள். மனம் இருண்டது. பூஜையில் வைத்த சரட்டை எடுத்து மாமி ஒவ்வொருவர் கழுத்திலும் கட்டி ஆசீர்வதித்தாள். பார்வதி கழுத்தில் கட்டும்போது அவள் ஹிருதயத்தில் சொல்ல முடியாத ஒரு வேதனை எழுந்தது. மனத்தில் எழுந்த வேதனையும் அமைதியின்மையும் முகத்திலும் பிரதிபலித்தன. உட்கார முடியாமல், துடித்துப் புரண்டு சாய்ந்தாள்.

"என்னடீம்மா, உடம்புக்கு?" என்று ஆதங்கத்துடன் கேட்டுக்கொண்டே அவளைப் பிடித்துக் கொண்டாள் மாமி.

நிலைமையைச் சமாளித்துக்கொண்டு சரியாக உட்கார்ந்தாள் பார்வதி. நெற்றியில் சுருண்டு விழுந்த மயிரைக் கோதிவிட்டுவிட்டு, "தேவி, உடம்பு நன்னாகணும். சாவித்திரி மாதிரி சகல சௌபாக்யங்களும் பெற்று, தீர்க்க சுமங்கலியாக வாழணும்" என்று அன்பு ததும்ப ஆசீர்வதித்தாள் மாமி.

சாவித்திரிமாதிரி என்றதும் தூக்கி வாரிப்போட்டது பார்வதிக்கு. தன் ஹிருதயத்தின் வேதனையைப் புரிந்து கொண்டாள் அவள். இப்போது இருண்ட மனத்தில் ஓர் ஒளி தோன்றியது. உடனே 'துணுக்' கென்ற உணர்ச்சியும் ஏற்பட்டது. சரேலென மாமிக்கு நமஸ்காரம்செய்துவிட்டு எழுந்தாள். அவளால் நிற்க முடியவில்லை. மனம் மீண்டும் சஞ்சலமடைந்தது. மறைந்து மறைந்து எண்ணங்கள் தோன்றின.

நடுங்கிக்கொண்டே எழுந்த அவளைப் பார்த்ததும் காமு மாமியின் கண்களில் நீர் மல்கியது. "வந்துவிட்டதா பாழும் ஜுரம்?" என்று அலுத்துக்கொண்டே அவளைக் கைத்தாங்கலாகப் பிடித்துக்கொண்டு அறைக்குள் அழைத்துச்சென்று படுக்க வைத்தாள். "பாழும் ஜுரம் இப்படிப் படுத்தறதே. ஒத்தாசைக்குக்கூட மனுஷாள் இல்லாமே தவிக்கும் இந்தப் பஞ்சைகளுக்குத் தெய்வம் கூட இரங்கமாட்டேன் என்கிறதே" என்று கூறியபடியே சலிப்போடு வெளியில் வந்தாள்.

படுக்கையில் படுத்ததும் பார்வதிக்கு நெஞ்சு வெடித்து விடுவதுபோன்ற உணர்ச்சி ஏற்பட்டது. கைகளால் மார்பை அழுத்திப் பிடித்துக் கொண்டாள். ஓவென்று வாய்விட்டு அலறி அழவேண்டும் என்று தோன்றியது. ஜுரத்தின் வேகம் துளிக்கூட இல்லை; உடம்பில் கோளாறு இல்லை; உள்ளத்தில்தான் கோளாறு. மனம் இருண்டது. மறைந்து மறைந்து தோன்றிய எண்ணங்கள் மீண்டும் சலனப் படம்போல எதிரே ஓட ஆரம்பித்தன. இருள் தெளிந்தது. பழைய சம்பவங்கள் தெளிவாக மனத் திரையில் ஓட ஆரம்பித்தன.

அவளுக்கு அப்போது பத்து வயசிருக்கும். தெருவில் பாண்டி விளையாடிக்கொண்டிருந்தாள். திடீரென அம்மா கூப்பிட்டு அவளுக்குத் தலை வாரிவிட்டுப் பின்னிப் புதுப் பாவாடை அணிவித்துக் கூடத்திற்கு அழைத்துவந்தாள். யார் யாரோ உட்கார்ந்திருந்தார்கள் அங்கு. அப்பாவும் இருந்தார். அவர் விருப்பப்படி எல்லோருக்கும் நமஸ்காரம் செய்தாள் அவள்.

இரண்டு வாரத்திற்கெல்லாம் அவளுக்குக் கல்யாணம் நடந்தது. என்ன என்னவோ சடங்குகள்; கேலி விளையாட்டுக்கள்; சம்பிரதாயம். ஆனால் கூத்தும் கொம்மாளமுமாக, மாப்பிள்ளையுடன் நலங்கிட்டதுதான் நன்றாக ஞாபகம் இருந்தது அவளுக்கு.

அப்புறம் இரண்டு மாசத்திற்கெல்லாம் சாவித்திரி நோன்பு வந்தது. அவள் தாயார் நோன்பிற்காக ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தாள். அவள் வழக்கம் போலத் தன் தோழிகளுடன் தெருவில் பாண்டி விளையாடிக் கொண்டிருந்தாள். தெருக் கோடியிலே ஒரு தந்திச் சேவகன் வந்தான். அப்போதுதான் அவளுடைய தகப்பனாரும் ஆபீஸிலிருந்து வீட்டிற்கு வந்துகொண்டிருந்தார். தந்திச் சேவகன் என்றாலே யமதரிசனம் என்று நம்மில் பலர் எண்ணி நடுங்குகிறார்கள். அவர் மட்டும் அதற்கு விதிவிலக்கா? விதி அவரிடமே விளையாட நிச்சயித்தது போலும். தந்திச் சேவகன் அவரிடமே தந்தியைக் கொடுத்துச் சென்றான். 'பக்ஷீஷ்' என்று

கை நீட்டாமல் அவன் 'விடுவிடெ'னச் சென்றதுமே அவர் மனம் 'திக்' கென்றது.

அதைப் பிரித்துப் பார்த்ததுமே ஒன்றும் தோன்ருமல் பிரமை பிடித்துத் திண்ணையில் உட்கார்ந்தார் அவர். ஆவலுடன் பக்கத்தில் வந்து நின்ற பார்வதி அம்மாவிடம் 'சேதிசொல்ல' உள்ளே ஓடினுள். தன் வீட்டிற்குத் தந்தி வந்திருக்கிறதே என்ற பெருமிதத்துடன் அவள் தாயிடம் கூறினுள். ஆனல் அதில் மறைந்திருக்கும் செய்தி தன் தலையில் அடிக்கும் சம்மட்டி என்பதை அந்தப் பேதை உணரவில்லை.

தந்தி என்றதுமே அம்மாவும்தான் மிரண்டாள். போட்டது போட்டதுபடியே வாசலுக்கு ஓடிவந்தாள். அப்புறம்?...அப்பா என்னவோ சொன்ஞர். அம்மா விசித்து விசித்து அழ ஆரம்பித்தாள். ஒருவர் பின் ஒருவராக அக்ரஹாரத்து ஜனங்கள் அவள் வீட்டுக்கு வர ஆரம்பித்தார்கள். எல்லோர் முகத்திலும் துக்கம் தாண்டவம் ஆடியது.

அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை. மனம் விளையாட்டில் செல்லவில்லை. வருவோரையும் போவோரையும் வெறித்துப் பார்த்துக் கொண்டே தூணில் சாய்ந்து கொண்டாள்.

அன்று அவர்கள் வீட்டில் நோன்பு நடக்கவில்லை. எல்லோரும் வந்து போன பிறகு, உச்சஸ்தாயியில் குரல் எடுத்து அழுது கொண்டே கோடியகத்துச் சானுப் பாட்டி வந்தாள். கூடத்தில் பார்வதியைக் கண்டதும், "அடி பாவி, இன்னிக்குத்தாண்டி சாவித்திரி யமனை ஜெயிச்சா. ஆனு உன்னை யமன் தோற்கடிச்சுண்டாண்டி, தோசிப் பொண்ணே' என்று கழுத்தைக் கட்டிக் கொண்டு ஒப்பாரி வைத்தாள்.

அப்புறம்தான் அவளுக்குப் புரிந்தது, தந்திச் சேவகன் வந்ததும் தன் வீட்டில் படும் ரகளையும் என்னவென்று. அவள் புருஷன் இறந்து விட்டான். தாம்பத்ய வாழ்க்கையைப் பற்றி உருவகப் படுத்தி லாப நஷ்டக் கணக்குப்

போடத் தெரியவில்லை அவளுக்கு. பூமாலையைப் போட்டுக் கொண்டு எதிரும் புதிருமாக உட்கார்ந்து தேங்காயை உருட்டி விளையாடிய தோழன் இன்று இறந்து விட்டான் என்பது மட்டும் புரிந்தது. அதனால் என்ன? இந்தக் கேள்விக்குப் பதில் அவளுக்கு அநேக வருஷம் வரை புரியவே யில்லை.

பிறகு நாலைந்து நாள் வீட்டில் அமளி. "யாரோவாம் செத்துட்டானும். அதுக்கு என்னைக் கட்டிண்டு ஏன் அழணும், வரவா எல்லாம்?" என்று அவள் தன் தோழிகளைக் கேட்டாள். "அவன் உன் ஆம்படையாண்டீ" என்பாள் ஒருத்தி. "ஆமாம், நீ கண்டே" என்று கன்னத்தில் இடிப்பாள் அவள். அப்புறம் அவள் தெருவில் விளையாடக் கூடாது என்று கண்டிக்க ஆரம்பித்தாள் அவள் அன்னை. சந்தோஷமும் சிரிப்பும் இருந்த வீட்டில் துக்கத்தின் சாயை படர்ந்தது. அப்பா அவளுடன் பேசுவதே யில்லை. அம்மாவோ சதா சிடுசிடென்று இருப்பாள். இந்த மாறுதலின் அர்த்தம் அவளுக்குப் புரியவில்லை.

எத்தனையோ வருஷங்கள் ஓடி மறைந்தன. அவள் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து மெட்றிகுலேஷன் 'பாஸ்' செய்தாள். அதன் பிறகும் காலேஜில் சேர்ந்து படித்தாள். அப்போதெல்லாம் அவளுக்குத் தன் கல்யாணத்தைப் பற்றிய ஞாபகமே மறந்து விட்டது. எல்லோரையும் போல நெற்றியில் குங்குமம் இட்டுக் கொள்வாள். நகை யணிந்து கொள்வாள். அவளுடைய போக்கையெல்லாம் தாயும் ஆதரித்து வந்தாள்.

ஐந்தாறு வருஷங்களுக்கு முன்பு, தூர பந்துவான சிவராமன் ஒரு நாள் வீட்டிற்கு வந்து அவள் தந்தையுடன் வெகு நேரம் பேசிக் கொண்டு இருந்தான். அப்புறம் அவன் நாலைந்து முறை வீட்டிற்கு வந்தான். அவன் பட்டினத்தில் ஏதோ வேலையில் இருக்கிறான் என்றும் அவளைக் கல்யாணம் செய்து கொள்ள விரும்புகிறான் என்றும் ஒரு நாள் பார்வதியிடம் அவள் தந்தை சொன்னதும் அவள் திடுக்கிட்டாள்.

அவள் சின்னக் குழந்தை யில்லை இப்போது. திருமணத்தின் லக்ஷ்யங்களை நன்றாய் உணர்ந்தவள். தனக்குச் சிறு வயசில் கல்யாணம் ஆனாலும் அதன் பிறகு நடந்தவை இப்போது அவள் ஞாபகத்துக்கு நன்றாக வந்தன. ஆனால்? இட்ட பொட்டு அழிந்து விட்டால் மீண்டும் இட்டுக் கொள்ளலாம் என்றுதான் தோன்றியது. தந்தையே துணிந்து மீண்டும் தனக்கு ஒரு வழி காட்ட முனைந்த போது, தான் தடை செய்வானேன் என்றுதான் தோன்றியது அவளுக்கு. கல்யாண வாழ்க்கையை எண்ணி மனம் கற்பனைக் கோட்டை கட்ட ஆரம்பித்தது.

ஊராரையும் சமாதானப் படுத்திக் கல்யாணத்தை நிறைவேற்றி விட்டார் அவள் தந்தை. பார்வதியும் சிவராமனும் இணைபிரியாது வாழ்ந்தார்கள். அவள் சகல செளபாக்கியங்களுடன் தான் வாழ்ந்தாள். அதன் பலனாக எச்சுமுவும் பிறந்தாள். பழைய கதை அவள் மனத்திலிருந்தே மறைந்து விட்டது.

சென்ற மாசந்தான் அவர்கள் காமு மாமியின் வீட்டிற்குக் குடி வந்தார்கள். பார்வதியின் குணத்தில் ஈடுபட்ட காமு மாமி அவளைத் தன் மகள் போல நேசித்து நடத்தி வந்தாள். ஆனால் பாவம்! பச்சை யோடும் இடத்தில் ஒரு பழுப்பும் தோன்றும் அல்லவா? அந்த வீட்டுக்கு வந்த நாளிலிருந்து பார்வதிக்கு மலேரியா. அவளுக்கு உதவி செய்யக் காமு மாமிதான். ஆனால் அவளால் தான் ஒரு குடும்பத்தின் முழுப் பாரத்தையும் ஏற்று நடத்த முடியுமா, எப்போதும்? பார்வதியின் குணத்தில் ஈடுபட்ட காமு மாமி அவள் குலத்தைப் பற்றிக் கவலைப் படவில்லை; தெரிந்துக் கொள்ளவும் ஆசைப் படவில்லை.

பார்வதியின் மனத்தில் ஒன்றன் பின் ஒன்றாக இவை ஞாபகத்திற்கு வந்தன. காமு மாமியும் சானுப் பாட்டியும் அவள் மனத்தில் தங்கி விட்டனர். அன்று சானுப் பாட்டி, "இன்றுதாண்டி யமன் உன்னை ஏமாத்திப் பிட்டான்" என்று கட்டி யணைத்து ஒப்பாரி வைத்ததுடன், இன்று காமு மாமி கழுத்தில் சரட்டைக் கட்டி, "சாவித்திரி போலச் செளபாக்கியத்துடன் வாழ்ந்திரு" என்று

ஆசீர்வாதம் செய்ததை மனம் எடை போட்டுப் பார்த்தது.

மனம் குழம்பிற்று. இதில் எது பொய், எது உண்மை? யமனின் சவுக்கடி தன் மீது ஒரு தடவை பட்டிருக்கும் போது தான் மீண்டும் அவனை ஜயிக்க அம்மனைப் பிரார்த்திக்க உட்கார்ந்தது நியாயமா என்றது ஓர் எண்ணம். அவனைத் தான் நீ தோற்கடித்து விட்டாயே, இன்னும் என்ன பிரார்த்தனை என்றது வேறு ஓர் எண்ணம். அவள் மனம் அலை பாய்ந்து தவித்தது.

நியாய அநியாய ஆராய்ச்சியின் போதே, அவளுக்குத் தான் காமு மாமியை ஏமாற்றியது போன்ற ஓர் உணர்ச்சியும் ஏற்பட்டது. உள்ளதை உள்ளவாறு சொல்லி ஏன் பூஜையில் கலந்து கொள்ளாமல் இருந்திருக்கக் கூடாது என்று ஒரு யோசனை. 'ஆமாம். இவ்வளவு விபரீதம் வருமென யாருக்குத் தெரியும்?' என்று ஒரு குறுக்கு யோசனை.

'சத்தியமும் தர்மமும் வேண்டிப் பிரார்த்திக்கும் இடத்திற்கு நான் சென்றதே தவறு. நான் பிரார்த்தனையில் கலந்து கொண்டதே களங்கம்தான்.'

'தவறுக்கு யார் ஜவாப்தாரி? உன் புருஷன் சிவராமன்தானே! அவனது யோக க்ஷேமத்தில் உனக்கு அக்கறையில்லையா? அதற்காக அம்மனைப் பிரார்த்திப்பது தவறு?'

'தெய்வ சந்நிதியில் பாபிதான் பலன் பெறுகிறான். அவன் பிரார்த்தனையில் கழிவிரக்க முண்டு!'

'கழிவிரக்கம் என்பதே இதில் கிடையாதே. நானாகச் செய்த காரியமா இது? அப்பாவும் அம்மாவும் முன் நின்றுதானே செய்தார்கள்?'

'அம்மாவும் அப்பாவும் விதியின் கைப்பாவைகள்.'

'நானும் அப்படித்தானே—ஆனால் விதியை நான் எதிர்த்து நின்றேனா!'

'அதை யெல்லாம் எதற்கு இப்போது நினைத்துக் கொள்ளவேண்டும்? நான் இதில் கலந்து கொண்டிருக்கப் படாது'

போராட்டத்தின் முடிவு காணமுடியவில்லை. மனம் தத்தளித்து, எத்தனையோ சமாதானங்கள் தோன்றி மறைந்தாலும் அவளுக்குத் தான் காமு மாமியிடம் ஒளி மறைவாக இருந்து, அவளது அன்புக்கு எதிராகத் துரோகம் செய்து விட்டதாகவே பட்டது. ஆனல் அதற்குப் பரிகாரம் என்ன என்றுதான் தோன்றவில்லை. குழம்பிக் கிடந்த மனம் தெளிவடையக் குமுறியது. விசித்து விசித்து அழுதுகொண்டே படுக்கையில் சாய்ந்தாள்.

எவ்வளவு நேரம்தான் அவள் அழுது கொண்டிருந்தாளோ தெரியாது. மனம் மட்டும் தெளியவில்லை. பள்ளிக்கூடத்திலிருந்து வந்த அவள் பெண் எச்சுமு, "அம்மா, அம்மா" என்று கூவிக்கொண்டே வந்தாள். எச்சுமுவைப் பார்த்ததும் அவள் வேதனை அதிகமாகிவிட்டது. விசித்துக்கொண்டே திரும்பிப் படுத்துக் கொண்டாள். அம்மாவின் விசித்திரப் போக்கு எச்சமுவுக்குப் புரியவில்லை. அம்மா அழுவதைப் பார்த்ததும் அவளுக்கும் அழுகை வந்தது. ஓவெனக் கத்திக்கொண்டே காமு மாமியிடம் ஓடினாள். அம்மா கோபித்துக் கொள்ளும்போது அவளுக்குப் புகலிடம் தரும் அன்னை காமு மாமிதான். "பாவம், சந்திரமதியாட்டமா பெண், கஷ்டப்படறது" என்று சொல்லிக்கொண்டே எச்சுமுவை அணைத்துக் கொண்டாள் மாமி. எச்சுமுவின் துக்கம் அடங்கிற்று.

"நல்ல பொண், பொய், புனைசுருட்டுக் கிடையாது. என்னவோ, வந்ததிலேருந்து படுத்தறது" என்ருள் மாமி.

மாமியின் குரல் கேட்டதும் பார்வதி கொஞ்சம் கவனித்தாள். குழந்தையின் சமாதானத்திற்கு நடுவே 'இதென்ன பேச்சு' என்ற கேள்வி எழுந்தது அவள் மனத்தில்.

"ஜுரந்தான். நல்லவாளைத் தானே பகவான் சோதிக்கிருன்." மீண்டும் மாமியின் குரல். அவள் யாருடனே பேசிக்கொண் டிருந்தாள்.

'ஆமாம், நல்லவள்தான்' என்றாள் பார்வதி. 'யார் நல்லவள், நானா மாமியா? இப்போத்தானே அவளை ஏமாத்திவிட்டு இங்கே வந்திருக்கிறேன். நான் பொய் புனைசுருட்டுஇல்லாதவள் என்று எனக்குச் 'சர்டிபிக்கேட்' கொடுக்கும் மாமி நல்லவாளா, நான் நல்லவாளா' என்று சிந்தித்தாள் பார்வதி.

தன்னை யறியாமல் கை கழுத்திலிருக்கும் சரட்டை வருடிற்று. சட்டென அதை இழுத்துப் பார்த்தாள். மஞ்சள் தோய்த்த அந்த நூல் அவளைப் பார்த்துச் சிரிப்பது போலத் தோன்றியது. மாமி, யமன், இருவரையும் ஏமாற்றியதின் அத்தாட்சி அது. அதைப் பிய்த்துப் போட்டுவிட வேண்டுமென்ற ராக்ஷஸ எண்ணம் தோன்றிற்று அவளுக்கு. படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்தாள். எதிரே சிவராமனும் அவளும் கல்யாணத்தின் போது எடுத்துக்கொண்ட போட்டோ தொங்கிக் கொண்டிருந்தது.

சரட்டின் மீது இருந்த ராக்ஷஸ எண்ணம் மாறிப் படத்தின் மீது திருஷ்டி விழுந்தது. சமூகத்தில் தனக்கு ஓர் அந்தஸ்துத் தந்த பரோபகாரி சிவராமன் என்ற புது எண்ணம் தோன்றிற்று பளிச்சென. 'அவனுக்குத் தானே இந்த விரதம். அதன் பலன் தானே இந்தச் சரடு—அதை அறுத்து எறிவானேன்?'

'அந்தச் சரடுதானே அடையாளம்!'

'ஆமாம், அதை அறுத்து எறிந்துவிட்டால், சம்பவத்தை அழித்துவிட முடியுமா?'

'ஆதாரத்தை அழித்து விட்டால் சம்பவம் மறையத் தானே வேண்டும்?'

'பழைய கதையையும் அதன் அடிச்சுவடே இல்லாது தான் எல்லாவற்றையும் அழித்தாகி விட்டதே?' மேலும் மேலும் சிந்தனை. ஆனால் நடுவிலே அது சிதறியது.

"அப்பா, அம்மா என்னைப் பார்த்துப் பார்த்து அழுதா, அப்பா" என்று சொல்லிக்கொண்டே எச்சுமு உள்ளே

வந்ததும் தான் அவள் சிந்தனை கலைந்தது. அவளுடைய பெற்றோர்களும் ஒரு காலத்தில் அவளைப் பார்த்து அப்படித்தானே அழுதார்கள். ஆமாம், அதற்கும் இதற்கும் எவ்வளவு வித்தியாசம்!

"என்ன ஜுரம் வந்துடுத்தா?" என்று கேட்டுக் கொண்டே பக்கத்தில் வந்து உட்கார்ந்தான் சிவராமன்.

அவனது குரல் கேட்டதுமே அவள் உடல் புல்லரித்தது. பதில் சொல்ல முடியவில்லை. துக்கந்தான் தொண்டையை அடைத்தது. அவனைப் பார்த்ததுமே, அன்றைச் சம்பவங்களும், பழைய ஞாபகங்களும் விரட்டிக்கொண்டு மீண்டும் எதிர்வந்து நின்றுவிட்டன.

ஒன்றுமே தோன்றாமல் 'ஓ'வெனக் கூவி அழுது விட்டாள் அவள். மனம் விட்டுக் கதறியதும் பாரம் குறைந்தது. தொண்டை நெகிழ்ந்தது. வாய் பேச முடிந்தது.

அவன் பிரமித்து விட்டான். ஜுரத்தின் கோளாறோ என்று திகைத்து, நெற்றியில் கை வைத்துப் பார்த்தான். ஒன்றும் புரியவில்லை.

கழுத்திலிருந்த சரட்டைத் தொட்டுக்கொண்டே அவள் தயங்கித் தயங்கி அன்று நடந்த சம்பவத்தைச் சொன்னாள். அதன் பிறகுதான் மனம் இலேசாயிற்று.

"அடி அசடே, இதுக்கு அழுவானேன்? என்னைக் காக்க வேண்டுமென்று தானே நீ இதையெல்லாம் செய்தாய்?" என்று சிரித்துக்கொண்டே கேட்டான்.

திரிபுரம் எரித்த சிவனது சிரிப்பின் எதிரே பகைமை நசித்தது போல, அவனது சிரிப்பின் எதிரே அவளது ஹிருதயத்தில் எழுந்த கொந்தளிப்புப் பொசுங்கி மறைந்தது. மனம் அமைதியடைந்தது.

"மாமியை ஏமாற்றி விட்டேனே" என்றாள் தயங்கிக் கொண்டே. "நீ யாரையும் ஏமாற்றவில்லை. உன்னைத் தான் ஏமாற்றிக் கொண்டாய்" என்று சொல்லிக் கலகலவென்று சிரித்தான்.

அவள் மனத்தில் மீண்டும் குழப்பம். கணவன் தன்னைப் பரிகாசம் செய்வதாகவே எண்ணினாள். கண் கலங்கிற்று. முத்து முத்தாக நீர் தெறித்து வழிந்தது. "அடடே, சென்றதை எண்ணிக் கலங்காதே. அன்று நடந்தது பொம்மைக் கல்யாணம். அதற்கு நீ ஜவாப் தாரியும் அல்ல. யாரையும் நீ ஏமாற்றவும் இல்லையடி, சாவித்திரீ" என்று அணைத்துக்கொண்டே அவளைச் சமா தானம் செய்தான்.

"அப்போ நீங்க சத்தியவான்தானே" என்று சிரித்துக்கொண்டே எழுந்து உட்கார்ந்தாள் பார்வதி.

"ஆமாம்" என்றான் அவன்.

முகம் தெளிந்துவிட்டது;மனமும் விகசித்தது."இன்று எனக்குச் சத்தியவான் கிடைத்தான். யமன் என்னையும் ஏமாற்றவில்லை" என்று சிரித்துக்கொண்டே அவன் காலில் விழுந்து நமஸ்கரித்தாள். "யமனைத் தான் நீ எப்பவோ ஏமாற்றி விட்டாயே" என்றான் அவன்.

பார்வதி தனது கழுத்தில் இருந்த புதுச் சரட்டைத் தொட்டுப் பார்த்துக் கொண்டாள். இப்போது அது கழுத்தில் உறுத்தவில்லை; எள்ளி நகையாடவும் இல்லை. அவளது வாழ்க்கையின் பரிசாகக் கழுத்தை அலங்கரித்த சாந்திதான் ஏற்பட்டது ; அமர வாழ்வு பெற்று விட்டது போல அவள் விம்மிதம் அடைந்தாள்.

*

# அலக்ஷ்யம்?

சி. ரா. கோபாலன்

"மீனு."

பதில் இல்லை.

"மீனு." இன்னும் சற்று உரத்துக் கூப்பிட்டான் சங்கரன். ஆனால் அவள் தன் காதில் விழாதவள் போல் சமையலறையில் ஏதோ பாத்திரங்களை எடுப்பதும் வைப்பதுமாக இருந்தாள். அவனும் விடுவதாயில்லை. குறைந்த பக்ஷம், 'மீனு, மீனு' வென்று அவன் பத்துத் தடவை யாவது கத்தியிருப்பான். அவள் மெதுவாக அவன் அறைப் பக்கம் வந்து வாசற்படியில் நின்றபடியே, "ஏன்?" என்றாள், அலக்ஷியமான பார்வையுடன். "இவ்வளவு நேரம் என்ன செய்து கொண்டிருந்தாய்! நான் கத்துகிறது உன் காதிலே விழவில்லையா? காலையிலே காபியை மேஜைமேலே வைச்சுப்பிட்டுப் போயிட்டே. இப்போ கைப் பொத்தானைப் போடணும்னு ஒரு நாழிகையா கூப்பிடுகிறேன்..."

"நான் வருகிறதுக்கு முன்னாலெல்லாம் இந்த ஆத்துலே உங்களுக்குக் காபி ஆத்திக் கொடுக்கிறதுக்கும் கைப் பொத்தானைப் போடறத்துக்கும் யார் இருந்தாளோ!" "நீ வருகிறதுக்கு முன்னாடியா...? ஒருவருமில்லை—அதான் நீ வந்துட்டயே..." அவன் கேலியாகச் சொன்னான். "சரிதான்—ஹூம்—நான் வந்துட்டேனா! இதுக்குத்தான் நான் வந்தேன் போலிருக்கு..." அவள் ஏதோ ரோஸமுள்ளவள் போல் முகத்தை வைத்துக்கொண்டு அவன் சட்டைப் பித்தான்களை போட ஆரம்பித்தாள்.

"இதற்கு மாத்திரமா?...இல்லை..." சங்கரன் அவள் தோள்மீது கையை வைத்தான். ஆனால் அவள் எதற்கும்

இடம் கொடுக்க இச்சைப் படாதவள் போல் அந்த அறையை விட்டுச் சட்டென்று அகன்ருள்.

"மீனு! வா! சீக்கிரம், ஆபீஸிற்கு நாழிகை யாகி விட்டது. சாதம் போடு, வா—"

அவள் அப்போதுதான் கையில் ஒரு பித்தளைப் பாத்திரத்துடன் சாம்பல், புளி முதலிய சாமான்களை வைத்துக் கொண்டு சுத்தி செய்து அதற்கு மெருகு ஏற்ற ஆரம்பித்தாள்.

அவன் இரண்டு மூன்று தரம் கூப்பிட்டு விட்டு அலுப்படைந்தவன் போல் தானே இலையை எடுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்த படியே, "மீனு! வா! வா" என்று துரிதப் படுத்த ஆரம்பித்தான்.

"என்னமோ ரக்கை கட்டிப் பறக்கறகளே! கொஞ்சம் பொறுங்கோ. இந்தக் குண்டானையும், போசியையும் தேய்த்துப் போட்டுட்டு வந்துடறேன்."

"ஏன், இன்னும் ஒரு ஜோடுத் தவலை, கங்காளம் ஏதாவது இருந்தாலும் தேய்த்து வைத்து விட்டு வா! எனக்கு என்ன அவசரம் ஆபீஸிற்கு? ஆனல் அந்தத் துரை முட்டாள் இருக்கானே அவனுக்கு இந்த அருமை யெல்லாம் தெரியறதா?" அவன் கோபமாகப் பேசவில்லை. அவனுடைய வார்த்தைகளில் பரிகாசந்தான் தொனித்தது. ஆனல் அவள் எப்படியோ கோபத்தை வரவழைத்துக் கொண்டாள்.

"ஏன், இலை போட்டுக் கொண்டவா அவசரமா இருந்தா சாதத்தையும் போட்டுக்கிறது தானே!"

அவன் பொறுமை இழக்கவில்லை. சிரித்துக் கொண்டே சொன்னன்: "ஏன்? சமையல் செய்வதைக்கூட நானே ஏற்றுக் கொள்ளலாம். அதற்குச் சக்தியும் சாமர்த்தியமும் இல்லையே! ஏதோ தேவி உன் மனசு வைத்துச் சாதம் போட்டால் போடு. இல்லாவிட்டால் பட்டினியாகவே ஆபீஸிற்குப் போகிறேன்."

மீனு தன்னுடைய வார்த்தைகளுக்கு அவன் எதிர்ப்பான சக்தியைத்தான் பிரயோகிப்பான் என்று எண்ணினாள். ஆனால் அவள் எதிர்பாராதவண்ணம் அவன் தாழ்மையுடன் நடந்தது அவளைத் திக்குமுக்காடச் செய்தது. இன்னும் சிறிது நேரம் அப்படி அலக்ஷ்யமாக நடப்பதாக அவள் இருந்தால், அவன் அதை விளையாட்டாகவே கருதி சாப்பிடாமல் ஆபீஸிற்குப் போய்விடுவானோ என்று அவள் சந்தேகித்தாள். இருந்தாலும் அவள் அலக்ஷ்யத்தையும் கோபத்தையும் தளர்த்தாமலே, "இத்தனை நாழிகை என்ன செய்தகள்? செட்டு சிங்காரித்திண்டு நின்னகபோல் இருக்கு; உங்க அப்பாதான் தாவாரத்துச் சுவத்தைப் பாதி மறைக்கும் படியாய் ஒரு கடிகாரம் வாங்கி மாட்டி யிருக்காரே! அது கண்ணுலே படலையா? அது தான் மாதா கோவில் மாதிரி எட்டூர் காது கேட்கும் படியா மணி அடிக்கிறதே! அது தான் காதிலே விழலையா? இவ்வளவு நேரம் பேசாதிருந்துட்டு இப்போ வந்து என்னைத் தோராளை விரட்டறது மாதிரி விரட்டறகளே!" என்று சொல்லிக் கொண்டே அவனுக்கு அன்னம் பரிமாறினாள். அவளுடைய வார்த்தைகளை ரஸித்துக் கொண்டே அவன் போஜனத்தை முடித்துக் கொண்டு ஆபீஸிற்குப் போனான்.

மீனுவின் நடத்தையில் ஏற்பட்டுள்ள மாறுதலை அவ்வளவு சீக்கிரமாக உணர்ந்து கொள்ளவில்லை சங்கரன். மீனுவின் செய்கை ஒவ்வொன்றையும் சமாளித்துக் கொண்டு அவன் பொறுமை இழக்காது இருந்தது அவளுக்குப் பெரிய ஏமாற்றத்தைக் கொடுத்தது. எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் விளையாட்டாக நினைக்கும் அவன் மனத்தை மாற்ற அவள் எவ்வளவோ பிரயாசை எடுத்துக் கொண்டாள்.

உத்தியோக விஷயமாகத திடீரென்று அவன் வெளியூர் செல்ல வேண்டியிருந்தது. நாலைந்து நாள் வெளியூர்களில் சுற்றி அலைந்து விட்டு ஆயாசத்தோடு வீடு திரும்பினான். அவனுடைய அறையில் நுழைந்ததும், அங்கு இருந்த அலங்கோலம் அவனைத் திடுக்கிடச் செய்தது. தெருப் புழுதி யெல்லாவற்றையும் காற்று அந்த அறையில்

கொண்டு வந்து சேர்த்திருந்தது. ஒரே குப்பை; சாமான்களெல்லாம் மூலைக்கொன்றாகச் சிதறிக் கிடந்தன. பிரயாண அசதியால் அலுப்புடன் வந்த அவனுக்கு அந்தக் காட்சி கோபத்தை உண்டாக்கியது. சட்டென்று திரும்பினான். பாவம்! அவனுடைய ரௌத்ராகாரமான பார்வை அப்பொழுதுதான் அவன் அறை நோக்கி வந்து கொண்டிருந்த அவன் தங்கைமீது பாய்ந்தது. "சரோஜா! இதென்ன அலங்கோலம்! இந்த வீட்டில் நாதியேயில்லையா? நான் இரண்டு நாள் ஊரில் இல்லாவிட்டால் இந்த அறை இப்படிப் பாழடைந்து விடணுமா? கொஞ்சம் கூட்டிப் பெருக்கிச் சுத்தமாய் வைத்துக் கொள்ளக் கூடாதா?" என்று கத்தினான்.

என்றும் இல்லாமல் இன்று தன் தமையனுக்கு ஏற்பட்ட கோபத்தைச் சரோஜாவால் சமாளித்துக் கொள்ள முடியவில்லை. அவள் கொஞ்சம் துடுக்காகவே பதில் சொன்னாள். "ஏன்? நான் உன் வேலைக்காரியோ! உன் அகமுடையாள் என்ன ராணியோ? அவள்தான் பெருக்கிச் சுத்தமாய் வைத்திருந்தால் என்ன? நீ இருக்கிற போது மாத்திரம் உன் அறையை ஆயிரம் தடவை வந்து சுத்திச் சுத்தி வளைய வாராளே!"

சரோஜாவின் வார்த்தை சங்கரனது கோபத்தை அமுக்கி, ரோஸத்தையும், வெட்கத்தையும் தூண்டிவிட்டது. அவளுடைய வார்த்தைகள் அவனை ஏதோ குத்திக் காட்டுவது போலிருந்தன. அவள் சொல்லுவதும் வாஸ்தவம் தானே! புருஷனின் காரியங்களில் சிரத்தையில்லாத மனைவியினால் என்ன பிரயோஜனம்? அவன் 'ஹூம்' என்று பெருமூச்சோடு முனகியபடியே கையில் துடைப்பத்தை எடுத்துக்கொண்டு தானே தன் அறையைச் சுத்தம் செய்ய ஆரம்பித்தான்.

மீனு அறைக்குள் நுழைந்தாள்; அவள் வந்து நிற்பதை அவன் கவனிக்கவில்லை. அவள் கன்னத்தில் கை வைத்துக் கொண்டே ஏதோ அதிசயத்தைக் கண்டவள் போல் ஆச்சரியத்துடன் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். அதோடு மாத்திரம் அல்ல! அவனுடைய காரி

யத்தை மெச்சவும் ஆரம்பித்தாள். "பேஷ், ரொம்பப் பாங்குப் பணிக்கா பெருக்கறகளே!"

அவன் திடுக்கிட்டுத் திரும்பினான். மீனு எஜமானியைப்போல் தலை நிமிர்ந்து மமதையுடன் நின்றாள். அவள் சொற்களில் ஓர் அலக்ஷ்யம். இந்த நடிப்பை அவள் ரொம்பவும் சிரம சாத்தியத்துடன் உண்டாக்கிக் கொண்டாள். இந்தக் கோலத்தைக் கண்டதும் அவனுடைய கோபம் ஜ்வாலை விட்டது. கண்களும் முகமும் சிவக்க அவளை நெருங்கி, "ஹூம், என்ன அவ்வளவு அலக்ஷ்யமா உனக்கு?" என்று சொல்லிக் கொண்டே அவள் கன்னத்தில் 'பளிச் பளிச்' சென்று நாலு அறை கொடுத்தான். அவனுக்கு அவள் எதிரில் நிற்பதற்குக் கூட வெட்கமாய் இருந்ததோ என்னவோ? அந்தக் கோபத்துடனேயே உறுமிக்கொண்டு வெளியே போய் விட்டான்.

கன்னத்தில் விழுந்த அடியின் எரிச்சலும், வேதனையும் தாங்காமல் கன்னத்தைத் தடவிக்கொண்டே நின்றாள் மீனு. ஆனால் அவள் மனத்தில் மாத்திரம் ஏனோ ரோஸமோ துக்கமோ ஏற்படவில்லை. அவள் சென்ற நாலைந்து நாட்களாய் இதை எதிர் நோக்கித்தானே காரியங்கள் செய்து வந்தாள். அவள் விருப்பம் நிறைவேறியது. அவள் மனத்திலிருந்த பளு நீங்கியது போல ஒரு நிம்மதியும், சந்தோஷமும். ஆனால் பின்னே நடக்கப் போவதெல்லாம் எப்படிப் பட்டவைகள் என்று அவளுக்குத் தெரியாது.

மீனுவும் சங்கரனும் இளந் தம்பதிகள். குடும்பச் சூழலில் அதிக அநுபவம் பெறாத தாம்பத்திய வாழ்க்கை. அவன் செல்வமாக வளர்ந்தவன். வீட்டில் அவன் இஷ்டத்துக்கு மாறான காரியம் எதுவும் நடக்காது. தம்பதிகள் இருவரும் மனம் விட்டுச் சகஜமாகப் பழக அந்தக் குடும்பத்தில் எவ்வித எதிர்ப்பும் இல்லை. அவளும் எல்லோரிடமும் குணத்தோடு கலகலப்பாகப் பழகும் சுபாவம் உள்ளவள். மாமியார், மாமனார், நாத்தி முதலிய குடும்பத் தேவதைகளின் அன்பையும் மதிப்பையும் அவள் பூர்ணமாகப் பெற்றிருந்தாள். கணவனோடு சல்லாப

மாகப் பேசுவதும் அவனுக்குச் செய்ய வேண்டிய பணி விடைகளை ஆசையோடு செய்வதுமாக ஒவ்வொரு நாளை யும் ஓட்டி வந்தாள்.

எட்டு மாசங்கள் ஓடி விட்டன. காலை எழுந்ததி லிருந்து இரவு படுக்கப் போகும் வரையிலும் மாறுதல் இல்லாத ஒரே வகை வாழ்க்கைதான். சங்கரனுக்கு இந்த வாழ்க்கையில் அலுப்பு உண்டாகவில்லை. ஆனால் மீனு வுக்கோ அப்படி இல்லை.

என்றுமில்லாத வெறுப்பு அவள் மனத்தில் ஏற்பட் டது. சம்பிரதாயமான இந்த வாழ்க்கை முறையை எப் படியாவது மாற்ற வேண்டும் என்ற ஆவல் பிறந்தது. அதனால் ஒரு புதுமையும் இன்பமும் ஏற்படும் என்ற எண் ணம் உதித்தது.

ஆனால் அதை எப்படி மாற்றுவது? என்ன என் னவோ யோசித்துப் பார்த்தாள். தன் கணவனுக்கு எப் படியாவது கோபம் மூட்டிவிட வேண்டும் என்று விரும்பினாள். ஆம், அவனை அலக்ஷ்யம் செய்து நடந்து கொள்வது. ஒருகால் அவன் மனத்தாங்கலால், கோபத் தால் தன்னை அடித்தால்?

அதுதானே வேண்டும்? அதைத்தானே அவள் விரும்பினாள். இவ்வளவு நாட்களாக அவன் அதைச் செய்யவில்லை. அந்தக் குறைதான் அவள் உள்ளத்தைக் குமுறச் செய்தது. ஆகவே தன் எண்ணத்தைச் செய லில் முடித்துவிட முற்பட்டாள். அதன் விளைவுதான் மேலே கூறிய சம்பவம்.

சங்கரன் மூன்று நாட்களாய் வீட்டிற்கு வரவில்லை. நாலாவது நாள் ஏதோ பித்துக் கொண்டவன்போல் வீட்டிற்கு வந்தான். அவனுடைய கோபம் தணியவில்லை. அவளுக்குச் சரியான தண்டனை கொடுக்க வேண்டு மென்று மனத்தில் சங்கற்பித்துக் கொண்டிருந்தான்.

அவனுடைய சகோதரி சரோஜாவின் மூலம் மீனு வுக்கு ஓர் உத்தரவு பிறப்பிக்கப் பட்டது! அவள் அவன் அறைப் பக்கம் வரக்கூடாது. அவனுடைய காரியம் எதி லும் சம்பந்தப் படக்கூடாது! அவன் கண் எதிர்ப்படவும் கூடாது.

சங்கரனது கடுமையான மன நிலையை வீட்டில் ஒருவராலும் மாற்ற முடியவில்லை. இந்தக் கடுமையான உத்தரவுகளைக் கண்டு மீனு நடுங்கினாள். இதைக் கேட்டதும் அவளுக்கிருந்த தென்பும் தைரியமும் எங்கோ மறைந்து விட்டன. தன்மீது ஏதாவது தவறு இருக்கிறதா என்று அவள் சிந்தித்துப் பார்த்தாள். அவளுடைய மனச்சாட்சி அவளுடைய செய்கையைத் தவறு என்று ஒப்புக்கொள்ள மறுத்தது. இந்தப் பிணக்கை, விளையாட்டுச் செய்கையை உணராமல் தன் கணவன் விபரீதமாக எண்ணிக் கொண்டதை நினைத்தபோது துக்கம் நெஞ்சை வந்து அடைத்தது.

ஒரு நாள், இரண்டு நாள்—ஒரு வாரம்! சங்கரன் பிடிவாதம் தளரவேயில்லை. அவளுடைய சகிப்புத் தன்மையையும் எல்லை மீறிவிட்டது. அவள் அழுது அழுது, உள்ளம் தேய்ந்தாள். அவளுடைய அழகிய முகம் வாடித் துவண்டது. அவள் ஏதோ பித்துக் கொண்டவள்போல் அந்த வீட்டில் நடமாடிக் கொண்டிருந்தாள் என்றால் மிகையாகாது.

பெண்மைக்குப் பெண்மை இரங்கியது, ஓய்ந்து போகும் அவளுடைய ஜீவனுக்கு உயிர்ப் பிச்சையளிக்கச் சரோஜா தன்னுடைய தமையனிடம் தூது செல்லச் சித்தமானாள். ஆனால் சங்கரனை நெருங்கி வார்த்தை சொல்ல அவளுக்கும் உள்ளூறத் தைரிய மில்லை.

"அண்ணா! அவள் ஏதோ விளையாட்டுக்காகச் செய்தாளாம். அதை நீ விபரீதமாக எடுத்துக் கொண்டு விட்டாயாம்..." என்று அவன் எதிரில் வந்து நின்று மென்று விழுங்கியவாறு சொன்னாள் சரோஜா.

"விளையாட்டுக்கா! அவ்வளவு இடம் கொடுத்துப் போச்சு—திமிறு" என்று பல்லைக் கடித்தான் சங்கரன்.

"அவள் அழுது அழுது துரும்பா இளைச்சுப் போயிட்டா அண்ணா! அவதான் ஏதோ தப்பு செய்துட்டா, அதுக்காக நீ இவ்வளவு பிடிவாதமா யிருக்கலாமா? அவளை நீ இப்போ கண்ணாலே பார்த்தாப் போதும். உன் மனசு இளகாமல் இருக்காது."

சரோஜாவின் வார்த்தை சங்கரனது உள்ளத்தைச் சற்று உலுக்காமல் இல்லை. அவனே மன நிம்மதி இல்லாமல்தான் இவ்வளவு நாள் தன் பிடிவாதத்தை நிறைவேற்றி வந்தான். அவன் மனத்தில் இரக்கமும், பச்சாத்தாபமும் எழுந்தன. ஆனால் ஒரு வறட்டுப் பிடிவாதம் அந்த உண்மையான உணர்ச்சிகளை வெளிக் காட்டாமல் குறுக்கே நின்று மறைத்தது. அவன் விறைப்போடு சரோஜாவுக்குப் பதில் அளிப்பதாக நினைத்தான். ஆனால் அவன் சொன்ன வார்த்தைகளில் தளர்ச்சிதான் பிரதான்யமாய் இருந்தது. "உருகட்டும், உருகட்டும், அப்பொழுதாவது புத்தி வருகிறதா, பார்ப்போம்" என்று சொல்லிவிட்டு எதிலிருந்தோ தப்புவதற்கு எண்ணுகிறவன் போல் அவசர அவசரமாக வெளியே போய்விட்டான்.

அன்று சாயந்திரம் அவன் ஆபீஸிலிருந்து வந்ததும் தன் அறைக்குள் நுழைந்தான். அங்கு மீனு இருப்பாள் என்று அவன் நினைக்கவில்லை. அவனைக் கண்டதும் அவள் திடுக்கிட்டு எழுந்து நின்றாள். இந்த ஒரு வார காலத்திற்குள் அவள் நடைப்பிணம் ஆகிவிட்டாள் என்பதை அப்போதுதான் அவன் கண்டு உணர முடிந்தது. நாற்காலியில் உட்கார்ந்திருந்த மீனு சங்கரனைக் கண்டதும் எழுந்து நின்றாள். சங்கரன் அப்போது ஏதோ நெருப்பின் மீது நிற்பதுபோல் தடுமாறினான். நெஞ்சில் முட்டி மோதிக்கொண்டு நின்ற அவளுடைய துக்கம் பீறிட்டுக் கொண்டு வெளியே வந்தது. அவளுடைய முகத்தை அவன் பார்க்கவில்லை. ஆனால் அவள் விசித்து விசித்து அழுவது அவன் காதுகளில் விழாமல் இல்லை. "நான் செய்தது தப்பு, என்னை மன்னித்து விடுங்கோ" என்று விக்கலிடையே வந்த வார்த்தைகள் அவன் மனத்தை இளகச் செய்தன. அதுமட்டுமன்று. அவன் அவளுக்குக் கொடுத்த தண்டனை கண்மூடித் தனமானது, முரட்டுத் தனமானது என்பதையும் உணர்த்தின. குற்றம் அற்ற மனசு கொடுமையான தண்டனைக்குப் பயந்து பழியைத் தன்மீது சுமத்திக்கொண்டது.

"மீனு! உனக்குப் புத்திவந்த வரையில் சந்தோஷம். ஏன் அழுகிறாய்? எல்லாம் என்னை அலக்ஷ்யம் செய்த

தாலே தானே இவ்வளவு கஷ்டமும்..." என்று கூறிக் கொண்டே சங்கரன் அவளை நெருங்கினான். அவள் தோள்மீது கை வைத்து, "அடாடா! அழாதே! மீனு! எல்லாவற்றையும் நான் மன்னித்து விட்டேன்" என்றான். அவள் துக்கம் மறைந்தது. கொஞ்சம் திடமாகவே பேச ஆரம்பித்தாள். "நான் ஏதோ விளையாட்டுக்காக அப்படி யெல்லாம் செய்தேன். நீங்கள் தான் அதை யெல்லாம் விபரீதமாக எடுத்துக் கொண்டீர்கள்."

"அப்பவே நீ இதை விளையாட்டுன்னு ஒரு வார்த்தை சொல்லி யிருந்தா..."

"நான் விளையாட்டுன்னு சொல்லியிருந்தா உங்களுக் குக் கோபம் எப்படி வரும்?"

"அப்படின்னா எனக்குக் கோபம் வரணும்ன்னு தான் இப்படி யெல்லாம் செய்தாயா?"

"ஆமாம்!"

"நன்றாயிருக்கிறதே! கோபம் சண்டை இதெல்லாம் வரணும்ன்னு யாராவது வேண்டுவாளா?"

"உங்களுக்கு ஒன்றுமே புரியவில்லை. சதா சர்வ கால மும் சிரிப்பும் விளையாட்டுமா இருக்கிறதிலே உங்களுக்குச் சலிப்பு ஏற்படல்லையா?"

"அப்படின்னா! இப்போ நான் உன்னைக் கோபித் துக் கொள்ளப் போகிறேன்..."

"வேண்டாம், வேண்டாம், இப்போ வேண்டாம். இப்பொழுது தானே ஒரு கோபம் வந்து அடங்கி யிருக்கு! இன்னும் கொஞ்ச நாள் போகட்டும்."

அறைக்கு வெளியே இருந்து 'கடகட' வென்று ஒரு சிரிப்பு, 'ஐயோ பாவம்! ஒரு பெண்ணின் ஊடல் விளை யாட்டை, உணர்ச்சியைப் புரிந்து கொள்ளாத மனிதனும் உண்டா?' என்பது போல். ஆனால் அந்த இளந் தம்ப திகள் இருவருக்கும் நன்கு தெரியும், அந்தச் சிரிப்புக் குரல் சரோஜாவினுடையதுதான் என்று.

*

# சின்ன எஜமானர்*

பகவதி சரண வர்மா

"அண்ணு என்னுடைய உடல் நிலை விஷயமாக ரொம்பத்தான் சிரமப்படுகிறுர். எனக்காக, அவர் வாழ்நாள் முழுவதும் சம்பாதித்துச் சேர்த்து வைத்திருந்த எல்லாத் தொகையையும் வாரித்தான் இறைக்கிறுர். சொன்னுலும் கேட்கமாட்டார். டாக்டர் ஆச்சாரியாவுக்கு, என் சிகிச்சைகளுக்காக மட்டும் ரூபாய் ஐந்நூறு கொடுக்கிறுர் என்றுல் பார்த்துக் கொள்ளுங்களேன்!

"ஒரு நாளைக்கு மூன்று முறை வருகிறுர் டாக்டர். அவருடைய விடாமுயற்சியினுலும் சிகிச்சையினுலும் என் உடல் நிலை அதி ஆச்சர்யமாய்க் குணமடைய ஆரம்பித்திருக்கிறது. அவருடன் கூடக் கொஞ்சதூரம் நடக்கவும் ஆரம்பித்திருக்கிறேன், கடந்த சில நாட்களாக. ஆனுல் இந்தப் பலனை முழுதும் நம்புவதற்கில்லை. வஸந்த காலம் வந்ததும் மெதுவாய்ச் சாயங்காலமும் ஒரு பத்தடி நடக்கலாமே என்றுர். அப்பொழுதெல்லாம் குணமாகவே தான் தோன்றிற்று—ஆனுல் இப்பொழுது பிரதிகூலம் தான். பிரதிகூலம் மட்டுமல்ல, அப்படி ஆவதற்குக் காரணமும் உண்டு" என்று சொல்லிக் கொண்டே வந்தான் இந்திரன்.

"படுத்துக் கொள்ளுங்கள். அதிக நேரம் பேசுவதும் உட்காருவதும் கூட உடம்பை அலட்டும். படுத்துக் கொள்ளுங்கள்" என்றேன் நான்.

"உட்கார்ந்திருந்தால் சிரமமாயிருக்குமே என்கிறீர்களா? என்றைக்குப் படுக்கையில் படுத்தேனே அன்றைக்கே முடிவு கட்டிவிட்டேன்; ஆயிற்று, இவ்வளவு தான் பூலோக வாழ்க்கை என்று. இத்தனை நாட்கள் இருப்பதன் காரணம் அண்ணுவின் அன்பு நிறைந்த சேவை தான். நானே ஊசலாடிக்கொண்டு தான் இருக்கிறேன்.

---

* தமிழாக்கியவர்: "குகப்ரியை"

இப்படியே தான் இன்னும் கொஞ்சகாலம் தள்ளட்டுமே! ஏதோ உட்கார்ந்த இடத்திலிருந்தே முன்னுவுக்காவது பாடம் சொல்லிக் கொடுக்கலாம். வாழ்க்கையில் எவ்வளவோ கஷ்டங்களைச் சகித்தாயிற்று. அவைகளையெல்லாம் நீங்கள் கற்பனை செய்து பார்த்தாலே நடுநடுங்கிப் போவீர்கள். அவைகளையெல்லாம் விட இது என்ன பிரமாதம்!...இதையெல்லாம் மனம் திறந்து சொல்லி விட வேண்டுமென்று தான் உங்களைக் கூப்பிட்டேன். போனது போயிற்று. எந்தச் சமயத்தில் என்ன நேருமோ? யார் கண்டார்கள். ஒருவரிடமும் சொல்லாமல் நெஞ்சிலே கிடக்கிற விஷயங்களை உங்களிடம் சொல்லி விடுகிறேன்'' என்று சொல்லியவனுய், அருகில் இருந்த மேசை மேல் இருந்து கொஞ்சம் 'ஒயின்' எடுத்துக் கிளாசில் ஊற்றித் தொண்டையை நனைத்துக் கொண்டான். மெலிந்தும் நொந்தும் கிடந்த அவன் உடலில் முகம் மட்டும் சற்றுத் தெளிவாகவே இருந்தது. இந்த 'மது' உள்ளே சென்றதும் கொஞ்சம் தெம்பு உண்டாவது போலும் தோன்றிற்று. மேசையின் மேலிருந்த சிறு வெற்றிலைச் செல்லத்தை என் பக்கமாக நகர்த்தினன்.

அப்பொழுது என் உள்ளுணர்ச்சிகளைத் தெரிந்து கொண்டதேபோல், அவன் முகத்தில் புன்னகையின் ஒரு சிறு ரேகை அரும்பிற்று.

"என்ன! நான் குடிகாரன் என்று நினைக்கிறீர்களா? அது இப்போது உங்களுக்குப் புரியாது. ஒரு நாள் தெரியவரும் நான் ஏன் குடிக்கிறேனென்று. அப்பொழுது தெரியும் என்பது மட்டுமன்று. நான் பிறாது வெறுப்புக்குப் பாத்திரமானவன் அல்ல, கேவலம் அனுதாபத்திற்கும் கருணைக்கும் உரியவன் என்றும் நினைப்பீர்கள்'' என்ருன். எனக்கோ என்ன பதில் சொல்வதென்றே விளங்கவில்லை. ஏதோ பொதுவாய் ஒரு பதிலைச் சொல்லி வைத்தேன். அவன் மேலும் பேசத் தொடங்கினன்:

* * *

ஒன்றரை வருஷங்களுக்கு முந்தின விஷயம். நான் பம்பாய்க்குப் போயிருந்தேன். வீட்டில் அம்மாவும் என்

சின்னத் தங்கை கருணவுமே இருந்தார்கள். அவளுக்குக் கல்யாணமாகியிருந்தது. இருந்தாலும் இங்கேதான் இருந்தாள். எங்களுடைய ஐசுவரியத்தில் மீதியானது இந்தச் சின்னஞ் சிறு வீடு ஒன்றுதான். இந்த வீட்டின் மேலேகூடக் கடன் வாங்கியிருந்தோம். மூன்று வருஷம் கடுமையான சிறை வாசம். விடுதலை அடைந்து நான் திரும்பி வந்தபொழுது, என் கண்ணெதிரில் தோன்றியது ஒரே இருள் தான். ஏற்கெனவே மூவாயிரம் ரூபாய் கடன். கோர்ட்டுக்கும் வக்கீலுக்கும் சேர்த்து மூவாயிரம் ஐயாயிரமாகக் குட்டி போட்டிருந்தது. கவலை மிகுதியினால் தூக்கமும் தொலைந்தது. கையிலோ கால் காசு கூடக் கிடையாது. ஒருவேளை ஜெபிலுக்குப் போகாமல் இருந்திருந்தால், இவ்வளவு மோசமான நிலை வந்திருக்காது என்றும் தோன்றியது.

தேசசேவை என்கிற புனிதமான சேவையைச் செய்ததன் பயனாக நான் பெற்ற பரிசு இதுதான்! எப்பொழுது பார்த்தாலும், என் தாய் பின்வருமாறு அங்கலாய்த்துக் கொண்டிருப்பாள். "ஒரு மகானுபாவன் பம்பாய்க்குப் போய் முகத்திலே கரியைத் தேய்த்துக் கொண்டு வந்தான். இன்னொருவனோ ஊரில் இருக்கிற நிலபுலன்களையெல்லாம் ஒழித்துக் கொண்டிருக்கிறான். தேசசேவையாம்! ஏதோ செய்ய வேண்டியதுதான். அதற்குத் தாரதரம் இல்லையா? வீட்டிலே வயிறு காய்கிறது. இதற்குப் பதில் சொல்ல யோக்கியதை இல்லை. சோற்றுக் கல்லைப் பொறுக்கத் தெரியாதவன் சொக்கநாதன் கோயில் மதில் கல்லைப் புரட்டி விடுவானாம். இதெல்லாம் என்ன நடக்கிற காரியமா? இவன்கள் போய்க் கோஷம் போட்டால் சுயராஜ்யத்தை உருண்டையாய் உருட்டிக் கையில் கொடுத்து விடுவார்களா? என்னமோ! வேணுமே!"

இந்த மாதிரி கேள்விகளை வேறு யாராவது கேட்டால் வாதம் செய்து புறமுதுகிட்டு ஓடும்படி செய்ய என்னால் முடியும். ஆனால் அம்மாவின் இந்த வார்த்தைகளுக்குப் பதில் சொல்வது என்பது என் சக்திக்கு மீறிய விஷயம். வீட்டையே விற்று விட்டு ஒரு விதமாய்க் கடனை ஒழித்துச் சௌக்கியமா யிருக்க

விரும்பினேன். ஆனல் ஊராருடைய விசித்திரமான புத்தி மதிகள் என்னை விற்க ஒட்டாமல் தடுத்தன. விஷயம் வேறென்றும் இல்லை. ஆடு நனைகிறதே என்று ஓநாய் உட்கார்ந்து அழுத கதைதான். மெல்ல மெல்ல வட்டி ஏறி விட்டால், பிறகு வீடு ஏலத்திற்கு வந்துவிடும். சமயம் பார்த்து மலிவாய் எடுத்து விடலாம் என்கிற நல்ல எண்ணந்தான் காரணம்.

இந்த நிலைமையில் ஒரு பயங்கரமான முடிவுக்கு வந்தேன். 'கடமையாவது! கருணையாவது! இந்தப் பொறுப்புக்களை எல்லாம் ஒரு வழியாய்த் தொலைத்து முழுகி விட்டால் என்ன? அம்மாவிடம் கொஞ்சம் நகைகளிருக்கின்றன. அவள் வாழ் நாட்களின் மீதி நாட்களுக்கு அவை போதாவோ? ஒரு வழியும் போக ஒட்டாமல் இதென்ன வாழ்க்கை. இந்த மாதிரி வாழ்வதை விடச் சாவதே மேல்' என்று தோன்றிற்று. மிகுந்த முன் ஜாக்கிரதையோடு கொஞ்சம் 'பொடாஸியம் ஸயனைட்' வாங்கி ஒரு ரகஸ்யமான இடத்தில் வைத்தேன். வீட்டு விஷயமாய் மேல் நடவடிக்கைகள் ஏதாவது நேர்ந்தால் விஷத்தைச் சாப்பிட்டு விடுவது என்று தீர்மானித்தேன்.

* * *

1929-ஆம் வருஷத்தில் மே மாதத்தில் ஒரு நாள். அன்று அண்ணாவும் இங்கே தான் இருந்தார். ஜமீந்தார்கள், ராஜாக்கள் ஆகியவர்களிடமிருந் தெல்லாம் அவருக்கு அழைப்புக்கள் வந்து கொண்டு இருந்தன. அவருடைய சங்கீதத்தின் புகழ் நுழையாத இடமில்லை. அவரைக் கௌரவிக்காத ரஸிகருமில்லை. பொன்னையும் பொருளையும் வாரி வாரித்தான் வழங்கினர்கள். ஆனல் அவைகளை நாங்கள் முகர்ந்துகூடப் பார்த்ததில்லை. எல்லாம் உடனுக் குடனேயே விமலா பாயின் பாதங்களில் சமர்ப்பிக்கப்பட்டு விடும். அம்மா எத்தனையோ மனக் கோட்டைகள் கட்டியிருந்தாள்; அவைகள் வெறும் மணற் கோட்டைகளாகவே போய்விட்டன. இருந்தாலும் அம்மாவுக்கு அண்ணாவின்பேரில் தான் கோபமே தவிர அவள் விமலா பாயை நிந்தித்ததில்லை. தன் சரக்குச் செல்லாவிட்டால் தட்டானைக் கட்டி அடிப்பானேன் என்பாள் அவள்.

அண்ணு தொட்ட டம்பளரில் கூடத் தீர்த்தம் சாப்பிட மாட்டாள் அவள். இருந்தாலும் அம்மாவின் ஹிருதயம் ரொம்ப விசாலமானது.

விமலா பாயிக்கு ஆண் குழந்தை பிறந்திருக்கிறது. ஆனல் இதனல் யாருக்கு என்ன கௌரவம்? இருந்தாலும் அம்மா அவள் வீட்டிற்கே போய் அந்தக் குழந்தையைப் பார்த்து விட்டு வந்தாள். இது என்ன நாடகம்? வாஸ்தவம் தான்! அந்தக் குழந்தை மஞ்சளும் குங்குமமுமாய் நம் அகத்துக்கு வந்தவள் மடியில் இருந்தால் தானே கௌரவம். எங்கேயோ தாசி வீட்டிலே பிறந்த குழந்தை......

இது கிடக்கட்டும். முக்கியமான விஷயத்தை விட்டு விட்டேனே. விமலா பாயின் தாயார், தன் கடைசிப் பெண் மாயாவதியுடன் சில நாட்கள் தங்கிப் போக வந்திருந்தாள். எக்கச் சக்கமான ஒரு சந்தர்ப்பத்தில் அண்ணுவை அவசரமாய்க் கூப்பிடப்போன பொழுது நான் அவளைக் கண்டேன். விமலாவே நல்ல அழகி தான். புது மலர்போல் இருப்பாள். அழகிய நீண்ட கண்களிலே இளமையின் முழுச் சௌந்தர்யமும் ஜொலிக்கும்.

ஆனல் மாயாவதியோ எங்கிருந்தோ, ஓர் அற்புத உலகிலிருந்து குதித்த தெய்வ மங்கைபோல் இருந்தாள். நீண்ட கயல் விழிகளை எந்தப் பக்கம் வீசினலும் அங்கங்கே குதூகலம் நிறைந்து ததும்பும். அந்த அழகிய ரோஜா மலர்க் கன்னங்கள்; மின் வீச்சு வீசும் தாமரைக் கண்கள்; கன்னங்களிலே சுழல் விழுவதோடு, மனிதரது நெஞ்சையும் சுழற்ற வல்ல முறுவல்; இவைகள் போதாவா?

'பெரியவர்களைப் பின்பற்றி நாமும் அண்ணுவுடன் இறங்கி விட்டால் என்ன? சமூகம் அண்ணுவை என்ன செய்துவிட்டது' என்று ஒரு தடவை நினைப்பேன்...ஆனல் அம்மா?...

அந்தச் சமயத்திலும் நான் காங்கிரஸ் செயல்களைத் தடபுடலாய்ச் செய்து கொண்டிருந்தேன். இந்த ஆனந்த அனுபவத்தை வெளிப்படையாய் ஏற்க மனங்கூசினேன். நெடு நாட்களாகவே விமலாவின் சங்கதிகளை அறிந்த ரகசியம். பார்க்க வேண்டுமென்று நினைத்ததும் உண்டு.

சந்தர்ப்பம் நேரவில்லை. ஆயினும், தற்செயலாய்ப் போன அன்று, எதிர்பார்த்ததற்கு மேலாக அந்தத் தேவ கன்னிகையின் தரிசனமும் கிடைத்தது. ஆனால் அந்தக் காட்சியை நான் பிறகு பார்க்கும்படி நேரவே யில்லை.

* * *

இரவு மணி பத்து. விமலாவின் வீட்டு வெளி முற்றத்தில் ரஸிகர்களின் கூட்டம். அண்ணா பாடுவதாக இல்லை. விமலா மட்டும்தான் பாடுவாள் என்று நினைத்தேன். அண்ணாவின் சமீபத்தில் நானும் உட்கார்ந்தேன். எல்லோரும் ஒருமுகமாக என்னையே பார்ப்பதுபோல் இருந்தது. 'அட! நகர காங்கிரஸ் சேனா மண்டலத்தின் தளபதி, இந்திர சங்கர், இங்கே எங்கே வந்தான்?' என்று கேட்பது போல் இருந்தது அந்தப் பார்வை.

உட்கார்ந்த உடனேயே மூக்குக் கண்ணாடியைக் கழற்றித் துடைத்துப் போட்டுக் கொண்டேன். விமலா, மாயாவுக்கு என்னைத் தன் கண்களால் அறிமுகப்படுத்தி, "சோடே பாபு வந்திருக்கிறார்" என்றாள். இந்த வார்த்தைகள் என் காதுகளிலும் விழுந்தன. நான் திரும்பினேன். விமலா என்னைப் பார்த்தாள். நான் மாயாவைப் பார்த்தேன். அப்பாவி! மாயா! வெளிப்பார்வைக்கு மிகுதியாய் வெட்கப்படுபவள் போல் தோன்றாவிட்டாலும், மனத்துள் மிகுதியும் வெட்கப் பட்டாளென்பதை முகமும் அந்த மீன் விழிகளும் தெரிவித்தன. அந்த அழகிய கண்கள் பூமியை நோக்கின. 'அடே! இந்திர சங்கர்! நீ நல்லதற்கா இங்கு வந்தாய்?' என்று யாரோ இடித்துக் கேட்பது போல் தோன்றியது. விமலாவை ஏறிட்டுப் பார்த்தேன்.

விமலா ஆனந்த மிகுதியினால் பூரித்துப் போயிருந்தாள். உள்ளத்தில் எல்லையற்ற குதூகலம் பொங்கித் ததும்பிக் கொண்டிருந்தது. மெல்ல மெல்லச் சூழ்நிலை அமைதியாகத் தொடங்கியது. வந்திருந்த விருந்தினர்களில் ஒருவர் மிகுந்த வணக்கத்தோடு "பாயிஜி! நேரமாயிற்றே, ஸ்தோத்ரம் ஆரம்பிக்கலாமே" என்றார்.

"இது வரையில் உங்களுடைய திருப்திக்காகப் பாடினேன். இப்பொழுது என்னுடைய ஆத்ம திருப்திக்காகவே பாடப் போகிறேன்.''

''பேஷ்! பேஷ்! சபாஷ்!'' என்றார் இன்னொருவர்.

''ஆனல் ஒரே ஒரு நிபந்தனை'' என்று கூறிக்கொண்டே அண்ணாவைப் பார்த்து, "பிரபு, என் பாட்டிற்குத் தபேலா வாசிக்க வேணும்'' என்று கேட்டாள்.

அண்ணாவுக்கு இது அவ்வளவு திருப்தி அளிக்கவில்லை. 'ஞஞ்ஞ மிஞ்ஞ' என்று ஏதோ சொல்லிப் பார்த்தார். அவள் கேட்பதாயில்லை. அவள் தம்பூராவை மீட்டிய வண்ணம் பாடத் தொடங்கினாள்.

'இன்ப நிலவினிலே' என்று பாடத் தொடங்கினாளோ இல்லையோ மந்திரத்தாற் கட்டுண்டேன் நான். நானே இக்கதியானால் ரஸிகர் கூட்டத்தைப் பற்றிக் கேட்பானேன். அடாடா! அந்தத் தேவகானம் இன்னும் என் செவிகளுள் சுழன்று கொண்டேதான் இருக்கிறது. அண்ணாவும் தம்முடைய முழுத் திறமையையும் அன்று காண்பித்தார். அது என் நெஞ்சை விட்டே அகலவில்லை.

நான் அந்தக் கோஷ்டியுடன் அங்கே இருந்தது அரைமணி நேரந்தான். அத்தகைய இன்பமயமான ஒரு நாள் மறுபடியும் என் வாழ்க்கையில் வரவேயில்லை. நான் எழுந்தேன். மாயாவின் கயல் விழிகள் என்னைப்பார்த்தன. என் உடலில் மின்னல் தாக்கியது என்பதை உணர்ந்தேன்.

"அதற்குள் எழுந்து விட்டீர்களா? சற்று உட்காருங்களேன், சோடே பாபு'' என்றாள் விமலா.

"நேரமாய் விட்டதே! என்ன செய்யட்டும்?'' என்று நகர்ந்தேன்.

''ஆமாம்! நெடு நேரம் தூக்கம் விழித்தால் இந்திரனுக்கு உடம்புக்கு ஆகாது'' என்று ஒத்துப் பாடினார் அண்ணா.

* * *

ஏடுகள் திரும்பின. 1930-ஆம் வருஷம் ஜூலை மாதம் 23-ஆந் தேதி 144 சட்டத்தின் கீழ் அரசாங்க விருந்து

பிராப்தம். என்றைக்கு அங்கே நுழைந்தேனே அது முதல் சிறையிலும் தேசிய கீதம் பாடும் வழக்கம் ஏற்படுத்தினேன். கூட இருந்த நண்பர்களும் ஒத்துழைத்தார்கள். விஷயம் 'சூபரிண்டெண்ட்' காதுவரையில் எட்டிற்று. 'சூபரிண்டெண்டை'ப் பற்றியோ கேட்கவேண்டியதில்லை பத்தரைமாற்றுப் பசும் பொன்தான்! கருணையோடு இருபது கசையடிகள் தண்டனை விதித்தார். விஷயம் தெரிந்ததும் இன்னும் உற்சாகமாகப் பாடினேன். என் தோழர்கள் எனக்குப் புத்திமதி சொல்லத் தொடங்கினார்கள்.

"ஜெயில் நியமங்களை மீறுவது கைதியின் தருமம் அல்ல என்பதுதான் மஹாத்மாவின் எண்ணம்" என்று உபதேசித்தான் ஒருவன்.

எனக்கோ கோபம் கோபமாய் வந்தது. "சும்மா பிதற்ற வேண்டாம். பிறர் பேச்சை யெல்லாம் கேட்டுக் கொண்டு என் மனச் சாட்சிக்கு விரோதமாய் நடப்பவன் நான் அல்ல. அப்படி நடப்பவனை நான் மனிதனாக மதிப்பதும் இல்லை. அவன் கேவலம் நடைப் பிணம்" என்று கோபத்தோடு கூவினேன். அப்போது மற்றத் தோழர்கள் ஒரே குரலில், "நீதான் உண்மையான வீரன். இந்த உறுதி எங்களுக்கும் வரட்டும். என்றென்றும் குறையாமல் இருக்கட்டும்" என்று கூவினார்கள்.

அரசியல் கைதிகளுக்குக் கசையடி கொடுக்கும் இடத்தைப் பற்றியும், அங்கே வந்து நிற்கும் டாக்டர், ஜெயிலர் முதலிய மஹானுபாவர்களின் கருணையைப் பற்றியும் சொல்லத் தேவை யில்லை. தண்டனையோ இருபது அடிகள். ஒன்பது அடி வரையில் எப்படியோ சகித்துக் கொண்டேன். ஒவ்வோர் அடிக்குப் பிறகும் 'வந்தே மாதரம்' என்று கோஷித்தேன். பத்தாவது அடி விழுந்தது எனக்குத் தெரியாது. அதற்குப் பிறகு நான் கண்ணை விழித்தபோது ஆஸ்பத்திரியில் இருந்தேன். டாக்டரை என்ன விசேஷ மென்று விசாரித்தேன். டாக்டர் என் வீரத்தைப் பற்றி வானளாவப் புகழ்ந்து விட்டு, ,'போற்றுகிறேன்" என்று கை குலுக்கினார். அந்தச்

சமயத்தில்தான் வாழ்க்கையின் உண்மையான ஆனந்தத்தை அடைந்ததாக நினைத்தேன்.

* * *

சில வருஷங்கள் கழிந்தன. அன்று ஏதோ ஒரு பண்டிகை நாள். அண்ணு, மன்னி,—அடாடா! அண்ணுவுக்கு ஏற்கெனவே நல்ல இடத்தில் விவாகமாகி இருந்தது என்ற விஷயத்தை உங்களுக்குச் சொல்ல மறந்து போனேன்.

அண்ணுவுக்குச் சின்ன மச்சினி ஒருத்தி. அவள் பெயர் சசி. அவளுக்கு வரனுக்காக அவள் தகப்பனுர் வெகு மும்முரமாக அலேந்து கொண்டிருந்தார். பெண் நல்ல அழகு. களே சொட்டும் முகம். மாநிறந்தான் என்ருலும் பார்ப்பதற்கு லக்ஷணமாக இருப்பாள். அன்றைக்கு நாங்கள் எல்லோரும் ஒன்று சேரும்படி நேர்ந்தது. எல்லோரும் யமுனு நதிக்குப் போவதாகப் புறப்பட்டுக் கொண்டிருந்தோம். இரண்டு வண்டிகள் வந்திருந்தன. ஒன்றில் மாமனுரும் நானும். மற்ருென்றில் அண்ணு, மன்னி, முன்னு. "சசி, நீ இந்த வண்டியில் ஏறிக்கொள்" என்ருர் அண்ணு. "அதில் இடம் போதாது; நீ இந்த வண்டிக்கே வந்துவிடு" என்ருர் பெரியவர். அவள் நாணிக் கோணிக்கொண்டு எங்கள் வண்டிக்கு வந்தாள். அது வரையில் அவளுடன் நான் நெருங்கிப் பேசியது மில்லே, பழகியது மில்லே. உல்லாசப் பிரயாணம் போகும் பொழுது பேசாமல் எப்படி இருக்க முடியும்? வண்டி புறப்பட்டது. கொஞ்ச நேரம் வரையில் பேசாமல்தான் இருந்தோம். பிறகு பெரியவரே பேச ஆரம்பித்தார். "என்னப்பா, இந்திரா, உன்னுடைய பிரசங்கங்கள் ஆவேசத்தைக் கிளப்பக் கூடியனவாமே! வெகு நாளாய் உன் பேச்சைக் கேட்க வேண்டுமென்று எனக்கு ஆசை."

"இதற்கென்ன பிரமாதம்? எப்பொழுது வேண்டுமானுலும் கேட்கலாம்."

"சின்னக் கூட்டத்தில் கேட்கிறதென்ன பிரமாதம்? பெரிய கூட்டம், ஆயிரக் கணக்கான ஜனங்கள், இருக்க வேண்டும்."

"அந்த மாதிரி நேர்ந்தால் கட்டாயம் உங்களுக்குத் தெரிவிக்கிறேன்" என்றேன். இந்த வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டே புன் சிரிப்புடன் உட்கார்ந்திருந்தாள் சசி. பேச்சை நிறுத்தியதும், "சசி! நீ எந்த வகுப்பில் படிக்கிறாய்?" என்று நான் கேட்டு வைத்தேன்.

"முதல் வகுப்பு."

"உங்கள் ஹைஸ்கூல் இந்த வருஷந்தான் காலேஜாக மாறியதாமே?"

"ஆமாம்."

"பிரின்ஸிபால் யார்? மிஸ். பானர்ஜீயா? அவள் சுபாவம் எப்படி? அவளுக்குக் கலியாணம் செய்து கொண்ட வாத்தியாரம்மாக்களைக் கண்டால் பிடிக்காதாமே?"

சசியின் மாம்பழக் கன்னங்கள் குழிந்தன. "அப்பப்பா! உங்களுக்கு எப்படி இவ்வளவு சங்கதிகள் தெரிந்தன."

"என் சிநேகிதன் தஸ்தகிர் என்று ஒருவன். அவன் மூலமாகத்தான் இந்த அக்கப்போர், அந்தரத் தபால் எல்லாம். அவன் தமையன் ஆக்ரா டிவிஷன் ஸ்கூல் இன்ஸ்பெக்டர்."

"என்ன? அவ்வளவு தூரம் வரையில் விஷயங்கள் எட்டிப் போயிற்றா?"

"எட்டுகிறதா? நானே ஒரு தரம் அந்த மிஸ் பானர்ஜீயைக் கண்டு அவளுக்குச் சூடு கொடுக்க வேண்டுமென்று இருக்கிறேன்." இதற்குள் யமுனா நதி நெருங்கவே எங்கள் பேச்சும் நின்றது.

* * *

நதிக்கரையில் அசாத்தியக் கூட்டம். மன்னி, முன்னுவை எடுத்துக்கொண்டு, சசி பின் தொடரப் படித்துறையை அடைந்தாள். அதே சமயத்தில் உள்ளூர்க் காங்கிரஸ் மந்திரி வந்து சேர்ந்தார். அவர் ஒருகாலத்தில் என்னுடன்கூட ஜெயிலில் இருந்தவர். அவர் நின்றபடியே, "இப்பொழுது உள்ளூர்ச் சபையின் வேலை என்ன?

இனி என்ன என்ன செய்யவேண்டும்?'' என்று விவரிக்கத் தொடங்கிவிட்டார். அவர் சுவாபமே அப்படித்தான். இனம் தெரியாமல் நடுவீதியிலே யோக க்ஷேமம் பேச ஆரம்பித்து விடுவார். அந்தச் சமயத்தில் யாரோ ஒரு பெண் மூழ்கிவிட்டாள் என்ற கூக்குரல் கேட்டது. உடனே சென்று குறித்த இடத்தில் யமுனையில் குதித்தேன். வெள்ளமோ வெகு வேகமாய்ப் போய்க்கொண்டிருந்தது. என்னுடன்கூட இன்னும் இரண்டொருவர் குதித்தனர். நான் முன்னேறிச் சென்றேன். நீச்சல் போட்டியிலே அநேகம் முறை பரிசு பெற்றவன் நான். மூழ்கிய பெண்ணும் நீச்சுத் தெரிந்தவள் தான். தெரியாதவளாய் இருந்தால் அவளை வெள்ளம் எப்போதோ அடித்துக்கொண்டு போயிருக்கும். தெரிந்தவள் ஆதலால் மூழ்கி மூழ்கி எழும்போதெல்லாம் கை கால்களை அடித்துக் கொண்டேயிருந்தாள். அவள் மெல்லக் கரைப்பக்கம் திரும்ப முயற்சித்துக் கொண்டிருந்தாள். வெள்ளமோ அவளைப் படு வேகத்தில் இழுத்துப் போய்க் கொண்டிருந்தது.

முக்கித் தத்தி அவளை நெருங்கித் தலை மயிரைப் பற்றிக் கொண்டேன். இதற்குள் ஒரு படகும் எங்கள் சமீபம் வந்தது. அதிலிருந்த ஒரு தொண்டனும் என்னுடன் குதித்தான். கடைசியாகப் படகை நிறுத்தி அவளை ஒரு வழியாய்ப் படகில் ஏற்றினோம். ஏற்றிய பிறகு முகத்தைப் பார்த்ததும் திடுக்கிட்டேன். அவள் தான் சசி.

கரையில் பெரியவரும் மன்னியும் அழுதுகொண்டு உட்கார்ந்திருந்தனர். செம்படவர்கள் படகைக் கரைக்கு இழுத்துப் போனார்கள். நான் மெதுவாய் அவளைத் தூக்கி இரண்டு கால்களையும் பிடித்துச் சுழற்றினேன். உள்ளே சென்றிருந்த தண்ணீர் முழுதும் வெளியே வந்துவிட்டது. அங்கிருந்து ரஸ்தாவுக்குக் கொண்டுபோன பிறகுதான் மூச்சுவரத் தொடங்கிற்று. டாக்டர் வீட்டிற்கு ஓடினார் கிழவர். நாங்கள் அவளை வீட்டிற்கு அழைத்துப் போனோம். டாக்டர் வந்து பார்த்துவிட்டு, "பயம் ஒன்றும் இல்லை, சொற்பமாய் ஜுரம் வரக்கூடும்'' என்று சொல்லி விட்டுப் போனார். பெரியவர் வருவோர் போவோரிடம்

எல்லாம், "இந்திர சங்கர் இல்லாவிட்டால் அவள் மூழ்கியே போயிருப்பாள். எடுத்தது மட்டுமல்ல, உடனே முதல் உதவியும் செய்ததனால்தான் பிழைத்தாள்" என்று சொல்லிக் கொண்டிருந்தார். அவளுக்கு உடம்பு குணமாக இரண்டு மூன்று நாட்களாயின. நானும் ஊர் போகச் சித்தமானேன்.

* * *

அன்று சதுர்த்தி. சந்திரன் அஸ்தமித்துக் கொண்டிருந்தான். இருள் மெதுவாக உலகத்தை விழுங்க ஆரம்பித்திருந்தது. அண்ணா என் பக்கத்தில் உட்கார்ந்து மேலே செய்யவேண்டிய காரியங்களைப்பற்றி யோசித்துக்கொண்டிருந்தான். மூன்னு உள்ளே யிருந்து ஓடிவந்து, "சித்தப்பா! சித்தப்பா! உன்னை அம்மா கூப்பிடறா" என்று தன் மழலைச் சொற்களால் சொன்னான். நான் அவனை இழுத்து மடியில் உட்கார வைத்துக்கொண்டு, "நான் நாளைக்கு ஊருக்குப் போகப் போகிறேன். நீயும் வருகிறாயா?" என்றேன், என்னை விழித்துப் பார்த்து, "என்னையும் கூட்டிக்கொண்டு போ" என்றான். அவனோடு பேசிக்கொண் டிருந்ததில் மதனி கூப்பிட்டதையும் மறந்து போனேன். மதனியின் தாயார் வாயிற்படியின் ஓரமாக நின்று கொண்டு என்னை எழுந்து வரும்படி ஜாடை காட்டினாள். நானும் எழுந்து போனேன்.

"இன்று உங்களிடம் ஒரு முக்கியமான சங்கதி சொல்லவேண்டும். சொல்லலாமா, வேண்டாமா என்று யோசித்துப் பார்த்தேன். எங்களவர் சங்கதிதான் உங்களுக்குத் தெரியும். அவரால் ஒரு காரியமும் ஆகாது. அவரை எதிர்பார்ப்பதில் பிரயோஜனமும் இல்லை. உங்கள் தமையனையும் மன்னியையும் கேட்டாயிற்று. நீங்கள் சொல்ல வேண்டியதுதான் பாக்கி. இந்த மாதிரி விஷயங்களில் எங்களால் என்னதான் செய்யமுடியும்? பெண்ணுக்கோ வயசு ஏறிக்கொண்டே போகிறது. எனக்கோ ஒன்றுமே புரியவில்லை. கடைசியாக உங்களிடம் சொல்லி விடுவது என்று முடிவுக்கு வந்தேன். நீங்கள் கொஞ்சம் பெரிய மனசு பண்ணினால் தான் தேவலை" என்று நிறுத்தினாள். எனக்கு முன்னமேயே விஷயம் ஓர் அளவு விளங்

கித்தான் இருந்தது. நாலைந்து நாட்களாகவே சூழ்நிலையும் அப்படித்தான் இருந்தது. ஆனாலும் விஷயம் இவ்வளவு சீக்கிரம் அம்பலத்திற்கு வருமென்று எதிர்பார்க்க வில்லை. இருந்தாலும் இந்த விஷயம் பிரஸ்தாபிக்கப் பட்டதுபற்றி உள்ளுக்குள் சந்தோஷம்தான். அவரைப் பார்த்து, "என்னுடைய வாழ்க்கையைப் பற்றி நன்றாய் யோசித்துப் பார்த்தீர்களா? என்னுடைய நெஞ்சிலே தேச சேவைதான் நிரம்பிக் கிடக்கிறது. இரவு பகல் அதிலேயே ஆழ்ந்து கிடக்கிறேன். திடீரென்று என் றைக்கு வேண்டுமானாலும் சிறை புகும்படி நேரலாம். இந்தமாதிரி நிலையில் குடும்பம் நடத்துவது எப்படி? கல் யாணம் செய்துகொண்டு மறுபடியும் சசியை உங்க ளிடமே ஒப்புவிப்பதா? இந்த விஷயத்தைப்பற்றி நீங்கள் ஆழ்ந்து யோசித்துப் பார்த்தீர்களா? என்னைக் கல்யாணம் செய்து கொள்வதனால் அவள் என்ன சௌக்கியப் பட முடியும்?" என்றேன். ஆனால் அவர் இன்னும் இரண் டொரு முறை அழுத்திச் சொல்லி வற்புறுத்தி யிருந்தால் ஒப்புக்கொண் டிருப்பேன். ஆனால் அந்தச் சமயத்தில், "என்னமோ அப்பா! உன் இஷ்டம்" என்று ஒரு பெரு மூச்சு விட்டார். வெற்றியா வீழ்ச்சியா என்று தெரி யாத ஒரு நிலைமையில் நான் திணறினேன்.

* * * *

அரசியல் வானத்திலே குழப்பம். மேகங்கள் இடியும் புடையுமாய்க் கர்ச்சித்துக் கொண்டிருந்தன. பொதுக் கூட்டங்களில் பேசியதன் பயனாக மறுபடியும் அரசாங்க விருந்து. இந்தத் தடவை பி வகுப்பில்தான் வைத்திருந்தார் கள். ஒருவிதக் கஷ்டமுமில்லை. அண்ணா, மன்னி, சசி மூவரும் ஒருநாள் என்னைப் பார்க்க வந்தார்கள். அண்ணா வின் கண்களில் நீர் நிறைந்திருந்தது. பேச்சுத் தழுதழுத் தது. "இந்துரு! எப்படி இருக்கிறாய்?" இந்த வார்த்தை கள் மிக்க சிரமத்தோடு அவர் வாயிலிருந்து வந்தன.

"சௌகர்யமாகத்தான் இருக்கிறேன். ஒன்றும் கஷ்டமில்லை" என்றேன்.

"சசி உன்னுடன் பேசவேண்டுமாம். அதற்காகவே அவளையும் என்னுடன் அழைத்துக்கொண்டு வந்திருக் கிறேன்."

"என்னோடு என்ன பேசப் போகிறாள்?"

"அதென்னவோ அப்பா! பேச வேண்டும் என்று கேட்டாள். சரியென்று அழைத்து வந்தேன். அதற்கு மேல் மறுக்க என்னால் முடியவில்லை." அண்ணா போய்ச் சசியை அனுப்பி வைத்தார். அவள் இளைத்தும் வெளுத்தும் காணப்பட்டாள். புடைவையின் முன்றானையைக் கையினால் முறுக்கிக்கொண்டே, "நான் உங்களுக்குச் சுமையாக இருக்க விரும்பவில்லை. தங்களிடம் அன்புப் பிச்சை கேட்கத்தான் வந்திருக்கிறேன். நான் முட்டுக் கட்டையாக இராமல் உங்களுடைய லக்ஷ்யப் பாதையில் உள்ள முட்களை அப்புறப்படுத்தவே ஆசைப்படுகிறேன்" என்றாள். அப்பப்பா! பெண்களே மகா மாயாவிகள் என்று நினைத்தவனாய், "அப்படி நினைத்தால் அதற்குக் கல்யாணம் செய்துகொள்ள வேண்டுமென்ற அவசியம் என்ன? நான் எந்த வழியிலே, எந்த லக்ஷ்யத்தை நாடிப் போய்க்கொண்டிருக்கிறேனோ அதையே நீயும் பின்பற்றலாமே. எப்படிப்பட்ட முறைகளை அனுசரிப்பதனால் பாரத பூமியின் இழந்துபோன பொற் காலம் மறுபடியும் வருமோ அப்படிப்பட்ட கொள்கைகளையே நீயும் வாழ்க்கையின் லக்ஷ்யங்களாகக் கொள்ளவேண்டும். எந்த விஷத்தைச் சாப்பிட்டால் சரீர சம்பந்தமான ஆசாபாசங்களை அறுத்தெறிய முடியுமோ அந்த விஷத்தை முதலில் சாப்பிட்டுவிடு. (சநி நாக்குக்காரன் எந்த வேளையிலே அந்த வார்த்தையைச் சொன்னேனோ?) அப்படிச் செய்தாயானால் எனக்குச் சமீபம் வரவேண்டுமென்கிற அவசியமே இல்லை. சிறைச்சாலையின் இருள் சூழ்ந்த அறைக்குள் நீ இருந்தாலும் அங்கே உனக்கு மிகவும் சமீபத்திலேயே நான் இருப்பதை உணர்வாய்" என்றேன்.

"தங்களுடைய இந்த ஆசையை நான் கட்டாயம் பூர்த்தி செய்வேன்" என்று கைகுவித்து வணங்கினாள் சசி. உணர்ச்சி மிகுதியால் அவள் குரல் கம்மியிருந்தது. அவளுடைய அழகிய முகம் பின்னும் ஒளிபெற்றது. ஆனந்த மிகுதியினால் அவள் கண்கள் ஜொலித்தன. அந்த இரண்டு மூன்று க்ஷணங்கள்தான் என் வாழ்க்கையிலே இன்பமயமானவை. அந்தச் சந்தர்ப்பத்தை மீண்டும் மீண்டும்

எண்ணுவதால் மனம் பூரிப்பு அடைகிறது. சசி முகமலர்ச்சியுடன் திரும்பிப்போன அந்தக் காட்சி என் மனத்தில் தோன்றிக் கொண்டே இருக்கிறது.

* * *

நான் சிறையிலிருந்து வெளிவந்ததும் எந்த எந்த விதமான காட்சிகளைக் காண்பேன் என்பதுபற்றிக் கனவு கண்டுகொண் டிருந்தேன். சசியின்மேல் ராஜத் துவேஷ குற்றம் சுமத்தப்பட்டிருக்கும்; அல்லது கையிலே கொடிபிடித்து முன்னணியிலே கம்பீர நடை நடந்து கொண்டு பவனி வந்துகொண் டிருப்பாள்; அவளுடைய வீரத் தனத்தையும் என் வார்த்தைகளினால் அவளுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய கௌரவத்தையும் நினைத்து நினைத்து ஆயிரக்கணக்கான இன்பக் கனவுகள் கண்ட வண்ணம் வீட்டில் வந்து நுழைந்தேன். ஆனால், நான் கேட்ட விஷயம் என்னைத் திடுக்கிடச் செய்தது.

'அட அல்பமே! இந்தச் சசி சொன்னபடியே நடப்பாளென்று எவ்வளவு நம்பிக்கை வைத்திருந்தாய். இந்தப் பெண்களின் செயல்கள் எல்லாமே வெறும் வெளி வேஷம். ஒரு விஷயத்திலாவது சொன்னபடி நடந்து கொள்வார்களென்று நம்புவதற்கில்லை. இவ்வளவுதான் உலகம்.'

மதனி பிறந்தகத்திற்குப் போயிருந்தாள். சசியைப் புக்ககத்தில் கொண்டுபோய் விடப்போகிறார்களாம். "அந்தப் பெண்ணைக் கொண்டுபோய் விட நான் போவதற்கு இல்லை. நீ போய் விட்டுவரும்பொழுது மன்னியை அழைத்து வந்துவிடு" என்று பம்பாயிலிருந்து எழுதியிருந்தார் அண்ணா. எனக்கும் அங்கே போய் நேரில் அவளைக் கண்டு ஒரு வார்த்தை கேட்டுவிட வேண்டுமென்று மனம் துடித்தது. அவள் புக்ககம் ஆக்ரா. ஒரு வழியாய்ப் போய்ச் சேர்ந்தோம். ஆனால் நினைத்தது ஒன்று; நடந்தது மற்றொன்று. அவளை நேரில் பார்க்கும் சந்தர்ப்பமே நேரவில்லை. அவள் புருஷன் போலீஸ் 'சூபரிண்டெண்ட்' ஆகவேண்டியவனாம்! இந்தச் சங்கதி தெரிந்ததும் எனக்கு ஏக காலத்தில் ஆயிரம் தேள் கொட்டினது போல் இருந்தது. இவைகள் யாவும் வேண்டுமென்றே

என்னை அவமானப் படுத்துவதற்குத் தயாரிக்கப்பட்ட ஒரு காட்சிபோல் தோன்றிற்று. எப்படியோ ஒப்புக்கு அங்கே நின்றுவிட்டு மதனியை அழைத்துக்கொண்டு வீடு திரும்பினேன்.

வீட்டிற்கு வந்த மூன்றும் நாள் அண்ணாவின் பெயருக்கு ஒரு தந்தி. "சசி ஒரு துப்பாக்கியால் தற்கொலை செய்துகொண்டாள்." இதுதான் விஷயம். அதே தபாலில் சசியின் முத்துப்போன்ற கை எழுத்துக்களால் எழுதப் பெற்ற ஒரு கவர் எனக்கு வந்தது.

"என் பிரிய பிரபு!

நான் உங்களை அடைய முடியவில்லை. உங்களுடைய பாததூளிகூடக் கிட்டாத அளவு தாங்கள் முன்னேறி விட்டீர்கள். தோலை மட்டும் போர்த்துக் கொண்டு நான் பெண் சிங்கம் ஆகமுடியுமா? நீங்கள் முயற்சி செய்திருந்தால் நான் உங்களுக்குத் தகுதி உள்ளவளாக ஆகி யிருக்க முடியும். இதற்காகக் கொஞ்சம் தியாகம் செய்யவேண்டி யிருந்தது. ஆனால், தாங்கள் அதைச் செய்ய முன் வரவில்லை. இது தங்களை மன்னிக்க முடியாத பெருங் குற்றம். ஒரு காலத்தில் நீங்களே குற்றவாளி என்று ஒப்புக்கொள்வீர்கள். நீங்கள் இஷ்டப்பட்டிருந்தால் என்னைப் பிறருக்கு உரிமை யாக்காமல் தடுத்திருக்கலாம். ஆனால் நான் அவரை வஞ்சிக்க விரும்பவில்லை. மனத்தை ஒருவருக்கும் உடலை இன்னொருவருக்கும் உரிமையாக்க நான் விரும்பவில்லை. எப்பொழுது யமுனையிலிருந்து என்னைக் காப்பாற்றினீர்களோ அப்பொழுதே நீங்கள் யோசித்திருக்க வேண்டும்......எப்படியானாலும் சரி. இந்தக் கஷ்டத்தை என்னால் சகித்துக்கொள்ள முடியவில்லை. அடாடா! இந்தப் பெண்ணை ஏற்றுக்கொள்ளாமற் போனோமே, வீண் வேதாந்தம் பேசி வாழ்க்கையைச் சிதற அடித்து விட்டோமே என்று ஒரு முறை தாங்கள் பச்சாத்தாபப் பட்டாலே அதுவே எனக்குத் திருப்தி. அதற்காகவே இதை எழுதினேன்.

தங்கள்

சசி."

அன்று முதல் அவளை என் மதியினத்தினுல் தான் இழந்துவிட்டேன் என்கிற எண்ணம். அதனேடுகூட என்னையும் நான் இழந்து கொண்டே இருப்பதாகவும் தோன்றுகிறது.

* * *

இரவு முழுவதும் இதே சிந்தனைகள். பொழுதும் புலர்ந்தது. பக்ஷிகள் 'கலகல' சப்தத்துடன் கிளம்பின. நேற்றும் இப்படித்தான் பொழுது புலர்ந்தது, நாளைக்கும் இப்படித்தான் பொழுது புலரும் என்று நினைத்துக் கொண்டேன். ஆனுல் இந்தக் கலகலப்பை நான் மறுபடியும் கேட்க முடியுமா? என்ன நடந்தாலும் சரி; ஓர் இடிக்கு மேல் எத்தனை இடி விழுந்தால்தான் என்ன? விஷயம் வேருென்றும் இல்லை. அண்ணு பம்பாயில் இருக்கிருர். மன்னி பிறந்தகத்தில் இருக்கிருள். குடியிருக்கும் இந்த வீடு, பெரியவர்கள் தேடிவைத்த அந்தச் சொத்து, ஏலத்தில் வரப் போகிறதாம். இந்த விஷயம் கசமுசவென்று என் காதுகளிலும் விழுந்தது. உலகம்! உலகத்தில் தான் எத்தனை விதமான கஷ்டங்கள். பிடி சோற்றுக்காகத் தாய் தன் மகளை விற்று விடுகிருள். பசியின் ஜ்வாலையைத் தடுக்கும் பொருட்டுப் பெண்கள் தங்கள் கன்னிமையை இழந்து விடுகிருர்கள். குழந்தை வாயில் இருக்கும் ரொட்டியைத் தகப்பன் பிடுங்கித் தின்கிருன். நம் ஊரிலே விளைகிற சோறு நமக்கு இல்லை. பஞ்சத்தின் கொடுமையால் லக்ஷோபலக்ஷம் ஜனங்கள் சோறு சோறு என்று பறக்கிருர்கள். நாடு நாசமாவதற்கு இன்னும் என்ன வேண்டும்? இந்த அடிமை நாட்டிலே எதுதான் நடக்காது? இவ்விதம் நினைத்து என்னை நானே திருப்தி செய்து கொள்ள முயன்றேன். ஆனுல் அமைதி எங்கே?

மணி பதினென்று. இந்த வீட்டில் இதே அறையில் உட்கார்ந்து கொண்டு வீதியில் போகிறவர்கள் வருகிறவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தேன். இரண்டு மூன்று போலீஸ்க் காரர்களுடன் 'பெய்லிப்' (அமீனு) மகாசயர் வந்தார். என் மனம் இருந்த நிலைமையை நீங்கள்தான் ஊகிக்க வேண்டும். அவர்களை ஒட்டி உள்ளூர்ப் பிரமுகர்களில் பத்துப் பதினைந்து பேர்கள். ஜனங்கள் இங்கும் அங்

கும் நடந்து கொண்டும், கசமுச என்று பேசிக் கொண்டும் இருந்தார்கள். 'சரி, நாடகம் தொடங்கி விட்டது' என்று நினைத்துக் கொண்டேன். நான் செய்து கொண்ட சபதத்தை நினைத்த பொழுது என்னை அறியாமலே உடல் நடுங்கிற்று. ஒரே ஒரு விஷயம் தான் பாக்கி. நான் என் தற்கொலை செய்து கொண்டேன் என்பதற்கு ஒரு கடிதம் எழுதி வைக்க வேண்டாமா? அப்படி எழுதா விட்டால் என்னுடைய இந்தக் குற்றத்தினுல் ஜனங்களுக்கு வீண் கஷ்டம் உண்டாகுமே! எழுந்து உட்கார்ந்து எழுதத் தொடங்கினேன்.

கடிதம் ஒரு கனவு போல் நீண்டு கொண்டே போயிற்று. கடிதத்தை முடித்து விட்டு விஷத்தைச் சாப்பிட வேண்டியதுதான் பாக்கி. வாசற்புறத்தில் நிசப்தம் பரவி யிருந்தது. ஏலம் எடுப்பதற்கு யாராவது பெரிய மனிதன் வந்திருக்கலாம் என்று நினைத்து எழுதிக் கொண்டே இருந்தேன். கடிதம் முடிந்ததும் ஜன்னல் வழியே பார்த்தேன். வீதியில் ஈ காக்காய் இல்லை. "அட ராகவா! இதென்ன அதற்குள் முடிந்து விட்டது? ஏலம் போட்ட சப்தம் கூடக் காதில் விழவில்லையே இதென்ன கூத்து!" என்று சொல்லியவனுய்க் கீழே இறங்கினேன். ஒரு கிழவன் சிரித்த முகத்துடன் திண்ணையிலிருந்து இறங்கிக் கொண்டிருந்தான். வெற்றிலையால் சிவந்த தன் பொக்கை வாயைத் திறந்து பைத்தியம் போல் என்னைப் பார்த்து, "சோட்டே பாபூ! இது தான் ஈச்வர ஆக்ஞை என்பது! விதியின் விளையாட்டு! கடைசியில் பெரியவர்கள் தேடின வீடு, பிதிரார்ஜித சொத்து, பிழைத்து விட்டது. அயல் வாழ்ந்தால் ஐந்து நாள் பட்டினி கிடப்பான்கள், துரோகிகள். பிறரை நசுக்க எது சமயம் என்று காத்திருப்பார்கள். கடைசியில் மாயாதேவி ஐயாயிரம் ரூபாய்க்குச் 'செக்கு'க் கொடுத்து அதுகள் முகத்தில் நன்ருய்க் கரியைத் தீற்றினள். வேண்டும்! வேண்டும்! நன்ருய் வேண்டும்! சோட்டே பாபூ! நான் உங்களுடைய உப்பை ஏராளமாய்ச் சாப்பிட்டிருக்கிறேன். இந்தச் சரீரத்தின் எலும்புகளில் அது இன்னமும் இருந்து கொண்டிருக்கிறது. இன்று உண்மையான சந்தோஷத்தை அனுபவிக்கிறவன் நான்தான்" என்ருன் அந்தக் கிழவன்.

மாயாவின் மோகன வடிவம்! ஒரே ஒருமுறை கண்ட அந்தச் சௌந்தர்ய தேவதை ஒரு க்ஷணம் என் மனக் கண் முன்னே நின்றாள். ஆனால் அவளை ஒருமுறை கூடப் பிறகு நான் சந்தித்ததே இல்லை.

இந்த மகத்தான தியாகத்தைக் காதல் என்பதா, கருணை என்பதா?

* * *

இதைக் கூறிவிட்டுச் சற்று நிறுத்தினான் இந்திர சங்கர். இது வரையில் பேசியதன் பயனாக அவன் மீண்டும் இருமத் தொடங்கினான். கோழையில் இரண் டொரு துளிகள் ரத்தம் இருப்பது கண்டு நான் துணுக் குற்றேன்.

# படிக்காதவள்*

## மிஹேயில் ஸொஷென்கோ

அவன் பொறுப்பு வாய்ந்த ஸோவியத் உத்தியோகஸ்தன்; நடுத்தர வயசு; பல விஷயங்களை நன்ருக அறிந்தவன். கட்டுடன் விளங்கும் சரீரம். சமூகப்பற்று வாய்ந்தவன். ஆம். சமதர்ம உரிமை, அதைச் சார்ந்த இதரப் பொறுப்புக்கள் ஆகியவற்றில் பெரிதும் ஈடுபட்டவன். அவன் நாட்டுப்புறத்திலே வளர்ந்தவன்தான். மேல் படிப்புக் கிடையாது. ஸாது. எளிய வாழ்க்கையை நடத்துபவன். எனினும், நீண்டகாலம் நகர வாழ்க்கையில் அடிபட்டதன் பயனுக, அவன் பல விஷயங்களைக் கற்றுக் கொண்டான்: எத்தகைய கூட்டத்தையும் சமாளித்துப் பேசக்கூடிய சாமர்த்தியத்தை அடைந்தான். ஏன்? உடற்கூறு அமைப்புச் சாஸ்திரத்தில் வல்லவர்கள் முதல் எலெக்ட்ரிகல் இன்ஜினீர்கள் வரையில் எல்லா விதமான விஞ்ஞான சாஸ்திரிகளுடனும் எந்த விஷயத்தைப் பற்றியும் சர்ச்சை செய்யக் கூடியவன்.

ஆனல், அவன் மனைவி பெலாக்யாவோ எழுதப் படிக்கத் தெரியாதவள். அவளும் தன் புருஷன் கூடவே தான் நாட்டுப்புறத்தை விட்டு வெளிக் கிளம்பினுள். ஆயினும் அவள் புதிதாக ஒன்றையும் கற்றுக்கொள்ள வில்லை. அவளுக்குக் கை யெழுத்துப் போடவும் தெரியாது. இது அவன் மனத்துக்குப் பெரும் பாரமாக இருந்தது. இதை நிவர்த்திக்க ஒரு வழி கிடைக்குமா வென்று அவன் தன் மூளையைக் குழப்பிக் கொண்டான். அவளுக்கு, தானே சொல்லிக் கொடுக்கலாம் என்ருலோ அதற்கு வேண்டிய அவகாசம் அவனுக்கு இல்லை. ஆகவே அவன், தன் மனைவியைப் பார்த்து, "இதைப் பார். என் கண்ணே, பெலாக்யா, நீ படிக்கக் கற்றுக்கொள்ள வேண்டியது அவசியம். கையெழுத்தாவது போடத் தெரியவேண்டாமா? நம் நாட்டைச் சூழ்ந்திருந்த இருளும் அறியா

---

* தமிழாக்கியவர்: 'கோதை'

மையும் அகன்று வருகின்றன. அதனுல் நாடு முழுவதி லுமே கல்வியைப் பரப்பி அறியாமையைப் போக்கி வருகிறோம். அப்படி யிருக்கும்போது, ஒரு பொறுப்பு வாய்ந்த உத்தியோகஸ்தன், ரொட்டிக் கிடங்கின் மானே ஜர், மனைவியான நீ இப்படி ஒன்றையும் அறியாமல் இருப் பது நன்ருக இல்லை. அது என் மனத்தை அலைக்கிறது'' என்று கூறினுன்.

பெலாக்யா அதற்கு என்ன பதில் சொல்லமுடியும்? அவள் தன் கைகளை ஆட்டிக்கொண்டு, "ஹூம், இவான் நிகோலாயெவிட்ச், ஒன்றுமில்லாத சிறு விஷயத்தை என் இப்படிப் பிரமாதப்படுத்த வேண்டும்? எனக்குப் படிப் பிலே கவனம் ஏற்படவில்லையே! இத்தனை காலமாக அதை விட்டாய்விட்டது. எனக்கு வயசும் ஏறி வருகிறது. வாலி பம் மறைந்துவிட்டது; கை விரல்கள் தடித்துப் போய்விட் டன. இனி வளையுமா? பென்சிலைப் பிடிக்க முடியுமா? இனிமேல் படித்துவிட்டு நான் என்ன செய்யப் போகி றேன்? சிறுவர்களும் சிறுமிகளும் படிக்கட்டும். அவர் கள் படிக்க வேண்டியதுதான். என்னைத் தொந்தரவு செய்யாதீர்கள்'' என்று கூறிவிட்டாள்.

அவள் கணவன் என்ன சொல்வான்? "சரி, பெலக்யாயா மாக்ஸிமோவ்னு...'' என்று ஆரம்பித்தவன் அதை முடிக்காமல் இழுத்துக்கொண்டே ஒரு பெருமூச்சு விட்டான்.

ஆனுல் ஒருநாள் அவன் தன் வீட்டுக்குப் பால பாடப் புத்தகம் ஒன்றைக் கொணர்ந்தான்.

'பெலாக்யா! இதோ பார். உனக்காக ஒரு புத்தகம் கொணர்ந்திருக்கிறேன். தற்காலத்து நவீன முறைகளிலே எழுதப்பட்ட இந்தப் புத்தகம் சமீபத்திலேதான் வெளி வந் தது. நான் ஒவ்வொன்ருக உனக்கு விளக்கிக் கூறுவேன். நீ ஒன்றும் ஆக்ஷேபனை செய்யாதே!''

மறு நாள் காலையில் பெலக்யா வாய் பேசாமல் பொறுமையுடன் அந்தப் புத்தகத்தைக் கையில் எடுத்துத் திருப்பித் திருப்பிப் பார்த்தாள். தலை கீழாகப் பார்த்தாள். பக்க வாட்டில் வைத்துப் புரட்டினுள். ஒன்றும் விளங்க

வில்லை. கடைசியில், "சின்னக் குழந்தைகளுள் யாருக்காவது வேண்டி யிருக்கலாம். அதுமட்டும் அது இங்கேயே இருக்கட்டும்" என்று கூறிக்கொண்டே அவள் அதைப் பத்திரமாக அலமாரியில் வைத்துப் பூட்டினுள்.

அது அங்கேயே கொஞ்ச காலம், வாரக் கணக்கில், கிடந்தது.

ஒரு நாள் அவள் தன் கணவன் சட்டையில் கிழிந்திருந்த பாகத்தைத் தைத்துச் செப்பனிடுவதற்காக ஊசி நூல் எடுத்துக் கொண்டு உட்கார்ந்தாள். அவள் சட்டையில் கையை விட்டபோது, அங்கே ஏதோ 'சர சர' வென்று கசங்குவதை அறிந்தாள்.

'ஏதாவது பணமாக (நோட்டாக) இருக்குமா?' என்று எண்ணிய பெலாக்யா சட்டைப்பைக்குள் துழாவிப் பார்த்தாள். ஒரு கடிதம் இருந்தது. வசீகரமான சிறிய உறையில் அழகான முத்துப் போன்ற எழுத்துக்களைக் கொண்ட சின்னஞ்சிறு கடிதம் அது. அந்தக் காகிதமும் மணத்தது. ஓதகலமோ என்னவோ இன்பமான வாசனை.

பெலாக்யாவின் ஹிருதயம் விம்மியது.

'என்ன? இவர் இவ்விதம் எல்லாம்கூட நடந்து கொள்கிருரா? பேதையான எனக்குப் புறம்பாக வேறொரு நாகரிக மடந்தையுடன், காதல் நாடகம் நடத்தி வருகிருரா?' என்றெல்லாம் எண்ணினுள் அவள்.

அந்த உறையைத் திருப்பித் திருப்பிப் பார்த்தாள். அதனுள்ளிருந்து கடிதத்தை வெளியில் எடுத்துப் பிரித்துப் பார்த்தாள். ஆனல், பாவம், அவளுக்குத்தான் அதில் ஒன்றுமே விளங்காதே! தலையோ காலோ ஒன்றும் தெரியாதே. தன் வாழ்நாளிலே முதல் முதலாக அப்போது தான் அவள் தனக்குப் படிக்கத் தெரியாமல் போய் விட்டதே என்று வருந்தினுள்.

'இது எனக்கு வந்த கடிதம் அல்ல. ஆயினும் அதிலே என்ன இருக்கிறது என்பதை அறிய வேண்டியது அவசியம். ஒருகால் அது என் வாழ்க்கையையே மாற்றிவிடவும்

கூடும். நான் பழையபடியே கிராமத்துக்குத் திரும்பிச் சென்று வயல்களிலே வேலை செய்யவும் நேரிடலாம்.'

இவ்விதம் எண்ணிய அவள் உள்ளம் குமுறிக் கொதித்தது. தன் அசக்தமே அவளுக்கு மிகுந்த துக்கத்தை அளித்தது. அதில் என்ன எழுதி யிருக்கிறது என்பதை அறியாமல் அவள் திகைத்தாள். வெட்கத்தாலும் அவமானத்தாலும் அவள் குன்றிப்போனாள்.

'ஆம்; உண்மைதான். இந்த அற்ப விஷயத்துக்காக இவ்வளவு பொருமைப் பட்டால், நான் இவான் நிகோலாயெவிட்ச்சிடம் எவ்வளவுதூரம் காதல்கொண்டு அன்போடும் ஆதரவோடும் இருக்கவேண்டும்! இந்தக் கடிதத்தைப் படிக்க முடியாதது வெட்கக் கேடானதுதான். முடிந்திருந்தால், வேறு விதமாக இருந்திருக்காதா!'

இவ்விதம் எண்ணினாள் அவள். அவளுக்கு அழுகை மீறிட்டு வந்தது. அதை அடக்க முடியவில்லை. தன் கணவனைப் பற்றிய ஒவ்வொரு சிறு விஷயமும் அவள் நினைவுக்கு வந்தது. நிச்சயமாக, இவான் நிகோலாயெவிட்ச் சமீபத்திலே பெரிதும் மாறிவிட்டான். 'அவன் தன் ஆடைகளைப்பற்றி ரொம்பவும் சிரத்தை எடுத்துக்கொள்கிறான். காலையும் மாலையும் அவைகளைத் துடைத்துச் சுத்தம் செய்துவருகிறான். அடிக்கடி தன் கைகளைக் கழுவிச் சுத்தமாகவே வைத்திருக்கிறான். ஏன், புதுக் குல்லாய் கூட வாங்கி இருக்கிறான்.'

இவைகளை நினைத்துக் கொண்டே பெலாக்யா அப்படியே கல்லாய்ச் சமைந்து உட்கார்ந்திருந்தாள். அந்தக் கடிதத்தைப் பார்த்துக் கொண்டே அவள் தன் மனத்தை விட்டுக் கண்ணீர் உகுந்தாள். என்ன செய்தால் என்ன? அந்தக் கடிதத்தை அவள் படிக்க முடியாது. அதைப் பிறன் ஒருவனிடம் காண்பித்துத் தெரிந்து கொள்ளவும் அவள் வெட்கினாள்.

கடைசியாக அவள் அதையும் அலமாரியிலே வைத்துப் பூட்டினாள். அப்பால் தன் கணவன் சொக்காய்க் கிழிசலைத் தைத்து அவன் வரவை எதிர்பார்த்திருந்தாள்.

அவன் வீடு திரும்பிய போது அவள் தன் உள்ளத்து உணர்ச்சியை வெளிக் காட்டவே இல்லை. அதற்கு மாருக அவனுடன் சரளமாகப் பேசினுள். தன் மடமையைக் கண்டு வருந்துவதாகவும் படிக்கும் விஷயத்தில் தான் எந்த விதமான தடையையும் செய்யாமல் இருப்பதாகவும் அவள் தன் புருஷனிடம் ஜாடையாகச் சுட்டிக் காட்டினுள்.

இவான் நிகோலாயெவிட்ச் ஆனந்தம் அடைந்தான்.

"பலே, அதுதான் சரி. நானே உனக்குச் சொல்லிக் கொடுக்கிறேன்."

"அப்படியானுல் ஆரம்பித்து விடுங்கள்" என்ருள் பெலாக்யா.

அவள் தன் புருஷனது கத்தரித்து விடப்பட்ட மீசையைக் கவனித்தாள். மறுபடியும் அவள் உள்ளம் கொதித்தது. ஏதோ ஒரு கசப்பு வந்து அவளைக் கவ்வியது. இரண்டு மாச காலம், வேளை தவருமல், சிறிதும் வீண் பொழுது போக்காமல் பெலாக்யா படித்தாள். எழுத்து எழுத்தாகக் கூட்டிச் சொற்களை மனப் பாடம் பண்ணினுள். எழுத்துக்களை எழுதவும் முயன்ருள். ஒவ்வொரு நாளும் மாலைப் பொழுதில் அலமாரியிலிருந்து அந்த வாசனைக் கடிதத்தை எடுத்து அதில் மறைந்திருந்த ரகசியத்தை அறிய முயன்று வந்தாள்.

ஆனுல் அது அவ்வளவு சுலபமானதாக இல்லை.

அந்தச் சிறு பால பாடத்தைப் படிப்பதற்கே அவளுக்கு மூன்று மாசகாலம் ஆகியது.

ஒருநாள் காலை அவள் புருஷன் வேலைக்குப் போய் விட்ட பிறகு அவள் அந்தக் கடிதத்தை மீண்டும் எடுத்து அதனேடு யுத்தம் செய்ய ஆரம்பித்தாள். அவள் மிகவும் சிரமப்பட்டாள். அந்த அழகிய கையெழுத்து அவளை ஏமாற்றியே வந்தது. அதிலிருந்து வீசிய நறுமணம் அவளை மயக்கியது; மனத்தில் அடங்கிக் கிடந்த வேகத்தைக் கிளப்பியது. கடைசியிலே ஒருவழியாக, "இவான் நிகோலாயெவிட்ச் கோச்கின்" என்று படித்தாள்.

ஒருவாறுகக் கடிதத்தைப் படித்து முடித்துவிட்டாள். அது பின்வருமாறு :

"பெருமை வாய்ந்த தோழர் கோச்கின் அவர்களுக்கு,

தாங்கள் வேண்டிய பால பாடப் புத்தகத்தை அனுப்பியிருக்கிறேன். இரண்டு மூன்று மாசங்களில் தங்கள் மனைவி அதைப் படித்து விடக்கூடும் என்றே நினைக்கிறேன். அவ்விதமே தாங்கள் கட்டாயம் செய்து விடுவதாக உறுதி கூற வேண்டும். எழுத்து வாசனை இல்லாமல் இருப்பது எவ்வளவு வெட்கக் கேடானது என்பதைத் தாங்கள் அவளுக்கு அறிவுறுத்திச் சொல்ல வேண்டும்.

இந்தக் குடியரசு முழுவதிலும் படிப்பின்மை ஒழிந்து போகவேண்டுமென்று நாம் எவ்வளவு தூரம் பாடுபட்டு வருகிறோம் என்பதைத் தாங்கள் அறிவீர்கள். அதனால் நாம் நம்முடைய குடும்பங்களை மறந்து விடக்கூடாது."

ஆகவே, தாங்கள் இதைக் கட்டாயம் செய்து முடிப்பதாக உறுதி கூறவேண்டும்.

'லால் சலாம்.'
மரியா வோகிறு."

பெலாக்யா கடிதத்தை இருமுறை வாசித்தாள். அது அவளை வேண்டுமென்றே அவமானப் படுத்த எழுதிய கடிதம் என்று அவள் நினைத்துவிட்டாள். ஆகவே அழுகையும் வந்தது.

ஆனல் அப்பால், தன் கணவனைப்பற்றியும், இனிக் குடும்ப வாழ்க்கை எவ்வளவு தூரம் இன்பமானதாக நடக்கும் என்பதைப் பற்றியும் நினைத்தபோது அவள் வேகம் குறைந்தது. பழையபடியே அந்தப் பால பாடத்தையும் அந்தக் கடிதத்தையும் அவள் அலமாரியில் வைத்துப் பூட்டிவிட்டாள்.

காதல், பொறுமை ஆகிய இரண்டினுலும் தூண்டப்பட்ட பெலாக்யா வெகு சீக்கிரத்திலே சுலபமாக எழுதவும் படிக்கவும் கற்றுக்கொண்டாள்.

*

# புதிய புத்தகங்கள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| **டால்ஸ்டாய் கதைகள்-2** | 2 | 4 |

ருஷ்ய மகான் டால்ஸ்டாயின் ஒன்பது அற்புதமான கதைகள். ஸ்ரீமான்கள் ரா. விசுவநாதன், போ. குருசாமி இருவரும் மொழிபெயர்த்தவை.

**கிராம இயக்கம்** 3 0

கிராமப் புனருத்தாரண வேலை செய்ய விரும்பும் ஒவ்வொருவரும் படித்தறிய வேண்டிய ஒப்பற்ற நூல். அகில பாரத கிராமக் கைத்தொழில் சங்கக் காரியதரிசி ஸ்ரீ ஜே.ஸி. குமரப்பா எழுதியது. காந்திஜியின் விரிவான முன்னுரையுடன் கூடியது, 'குமுதினி' மொழி பெயர்த்தது.

**ஏசுநாதர் போதனை** 0 12

ஏசுநாதரின் அவதார தத்துவம் யாது, அவருடைய திருமொழிகளின் தத்துவம் யாவை என்பதை ஆசிரியர் ஜே. ஸி. குமரப்பா இதில் விளக்குகிறார். இவருடைய வியாக்கியானம் மிகப் பொருத்தமானது என காந்தியடிகள் சொல்லுகிறார். 'குமுதினி' மொழி பெயர்த்தது.

**இந்தோநேஷியா** 0 12

இந்தோநேஷிய அரசியல் இயக்க வளர்ச்சி, சுதந்திர வளர்ச்சி, இந்திய — இந்தோநேஷிய ஒற்றுமையம்சங்களை இந்தப் புத்தகத்தில் 'பாரததேவி' உதவியாசிரியர் கே. அருணாசலம் எழுதியிருக்கிறார்.

**சோவியத் ருஷ்யா** 4 8

இன்றைய தினம் உலக முன்னேற்றத்துக்கு வழிகாட்டும் சோவியத் ருஷ்யாவின் பழைய சரித்திரம், புதிய புரட்சி, புரட்சியால் அடைந்த நலன்கள், யுத்த வெறியர்களைத் தோற்கடித்து உலக சமாதானத்தை நிலைநாட்டியதுவரை புள்ளி விபரங்களுடன் ஸ்ரீ. வெ. சாமிநாத சர்மா இந்த இரண்டாம் பதிப்பில் தெளிவாக எழுதியிருக்கிறார். அழகிய 16 படங்கள். கலிகோ பைண்டு. 324 பக்கம். ஆன்டிக் காகிதம்.

## சக்தி காரியாலயம்

★ சென்னை - மதுரை ★
கோயமுத்தூர் - திருநெல்வேலி

3598.